திரு
மேலா

ஏழு நீதிமான்கள்

நீதிமன்ற நினைவுகள்

நீதிபதி எஸ்.மகராஜன்

கலைஞன் பதிப்பகம்

10, கண்ணதாசன் சாலை

தியாகராய நகர்

சென்னை - 600 017.

Rs. 25/-

NEEDHI MANDRA NINAIVUGAL

by

JUSTICE S.MAHARAJAN

First Edition 1984

Second Edition 1999

Published by

KALAIGNAAN PATHIPAGAM

10, Kannadhasan Salai

T.Nagar, Chennai - 600 017.

Typeset at

OVIYUM, Chennai - 20

Printed at

Sakthi Printers, Chennai - 21.

முன்னுரை

நீதிபதி எஸ். மகராஜன் அவர்களின் குடும்ப நண்பர்களில் அடியேனும் ஒருவன். அவரை நான் தெரிந்து கொண்டது 1957ல்; அவர் என்னைத் தெரிந்து கொண்டது 1965ல் புதுவை மாநிலத் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்ற அந்த நாளிலிருந்து, அவர் அமர நிலையடைந்த நாள்வரை, அவரது உள்ளத்தில், எனக்கென்று தனிச் சிறப்பிடம் அளித்து வந்தார்கள். அவர் மறைந்த பிறகும், என் உள்ளக் கோயிலில் அவரைக் கொலுவிருத்தி வழிபட்டு வணங்குகிறேன்; என்றும் வணங்குவேன். எங்கள் இருவரையும் இறுகப் பிணைத்தது இலக்கிய ரசனைதான். அவர் ரசித்து ரசித்துப் படைக்கும் இலக்கிய விருந்து. இரவையும் பகலாக்கிக் கேட்க வைக்கும் சக்தி வாய்ந்தது. நேரம் போவதே தெரியாது.

புதுவையிலிருந்த போதும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்றுச் சென்னையிலிருந்த போதும் மாதம் ஒரு நாளாவது நீதிபதி மகாராஜன் அவர்களிடம் சென்று உரையாடி மகிழ்வேன். உரையாடலின் இடையே, அவர் எழுதிய கட்டுரைத் தாள்களை எடுத்துப் படித்துக் காட்டியிருக்கிறார்கள். நீதிமன்ற நிகழ்ச்சிகளையும் இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட எடுத்துச் சொல்லும் ஆற்றலைக் கேட்டுக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். இவற்றை நூல் வடிவ மாக்க வேண்டுமென்று வேண்டினேன். என் வேண்டுதலை நிறைவேற்றுவதற்கு முன்பே நேத்திரம் கெட்ட காலன், அவரு டைய உயிரைக் கவர்ந்து கொண்டான். நிறைவேறாத என்

வேண்டுதலை, புதுவைக் கம்பன் கழகம் நிறைவேற்றி இன்று பெருமை கொள்கிறது.

புதுமைக் கம்பன் கழகம், நீதிபதி மகராஜன் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டது. புதுவையில் கம்பன் கழகத்திற்குக் கடைக்காலிட்டவர் மகராஜன் அவர்கள்தான். அவருடைய ஆன்மாவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில், சென்ற ஆண்டு கம்பன் விழாவில் அவரது **பாராட்டுத் தமிழ்** நூலை வெளியிட்டது. இந்த 1984ஆம் ஆண்டுக் கம்பன் விழாவில் **நீதிமன்ற நினைவுகள்** என்ற இந்த நூலை வெளியிட்டு வணங்குகிறது.

நீதிமன்ற நினைவுகள் என்ற இந்த நூலில், அற்புதமான பத்து கட்டுரைகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் நீதிமன்ற நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துபவை; இலக்கியச் சுவை மிகுந்தவை; பலமுறை படித்து ரசிக்கக் கூடியவை; பயன்பெறக் கூடியவை; எல்லாருக்கும் இந்த நூல் விருந்து.

''நீதிமன்ற நினைவுகள்'' என்ற இந்த நூலுக்குள்ளே: இடதுகைப் பெருவிரலுக்கு மதிப்பு ரூ.5,000/- வழக்கறிஞர் இராமானுஜம் நீதிபதி பாஸ்கரத் தொண்டைமான் அவர்களிடம் வாயிதா வாங்கிய பாங்கு - வழக்கறிஞர்களை மட்டம் தட்டும் அயர்லாந்து நாட்டு நீதிபதியை, வழக்கறிஞர் எர்ஸ்கின் அவமானப்படுத்திய முறை - சாமானிய கிழவி, நீதிமன்றத்தை இறைவனிருக்கும் ஆலயமாகத் தொழுத காட்சி - நீதிபதி பர்கென்ஹெட் அவர்கள் கொலை செய்தவனுக்கும், அவனுக்குத் துணையாயிருந்தவனுக்கும் ஒரேவித தண்டனை அளித்த காரணம் - இன்னும் எத்தனை எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. ''சாட்சி விசாரணை ஒரு சத்திய சோதனை'' என்றும், ''வழக்கில் குறுக்கு விசாரணை என்பது உண்மையைக் கண்டுபிடிக்க உதவும் அற்புதமான கருவி'' என்றும் கூறுகிறார் நீதிபதி மகராஜன் அவர்கள். சாட்சி விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும், வக்கீல்கள் கையாளும் உத்திகள், சில நிகழ்ச்சிகளைக் கொண்டு நமக்குக் காட்டப் பெறுகின்றன. ''ஒரு குடும்பத்தினர் பாகப்பிரிவினை எப்படிச் செய்து கொள்ள வேண்டும்?''

என்பதை ''பாகப் பிரிவினை'' கட்டுரை காட்டுகிறது. சொத்து களுக்கு யார் யார் வாரிசுகளாக முடியும்? என்ற வினாவிற்கு விடை பகர்கிறது ''நிர்வாகப் பட்டயம்'' என்ற கட்டுரை. உத்திரமேரூர், திருப்பராய்த்துறை ஆகிய ஊர்களிலுள்ள கல் வெட்டுகளைக் கொண்டு, பஞ்சாயத்து ஆட்சி முறையை ஆராய்கிறார் நீதிபதி மகராஜன் அவர்கள்.

நீதிபதி மகராஜன் அவர்கள் முதலில் நாத்தழும்பேற நாத்திகம் பேசியதையும், பின்பு ஆத்திகரான நிகழ்ச்சிகளை யும் திரும்பிப் பார்க்கிறார். ''நீதிமன்றங்களில் தமிழ்'' என்ற கட்டுரையில் தமிழ் நீதியின் தொன்மையும், சீலமும் விளக்கப் பெறுகின்றன. கட்டுரைகளின் இடையிடையே தெய்வப் புல வர் திருவள்ளுவர், கவிச்சக்கரவர்த்தி கம்பன், ஆங்கிலக் கவிஞன் மில்டன் முதலியோரது பொன்மொழிகள் பளிச்சிடும் படி பதிக்கப் பெற்றுள்ளன. ஆம்! இந்நூல் எல்லாருக்கும் நல் விருந்தேயாகும்.

புதுச்சேரி
11.5.1984

இவண்
அ.அருணகிரி

அணிந்துரை

ஒரு தலைசிறந்த எழுத்தாளர். மனித உள்ளத்தின் ஆழ்கடலிலே மூழ்கி முத்துக்களை எடுக்கவல்ல ஒரு மனோ தத்துவ நிபுணர். அழகாகவும், நளினமாகவும், திறம்படவும் வாதப் பிரதிவாதம் செய்யும் ஒரு வழக்கறிஞர். எதையும் நிதானமாக நிலைகுலையாமல் பகுத்தறிந்து தெளிந்து தீர்ப்ப ளிக்கும் ஒரு நீதிபதி. இலக்கியத்தில் இழையோடி மினிரும் கலையைத் தன்னை மறந்து அனுபவிக்கும் ஒரு ரசிகர். இவர்களில் உயர்ந்தவர் யார்? இவ்வினாவிற்கு விடையளிப் பது எளிதன்று. ஆனால், இவையனைத்துப் பண்புகளையும் தன்னுள் அடக்கிய ஒருவரான மறைந்த திரு. மகராஜனது **நீதிமன்ற நினைவுகள்** தனிச் சீருடனும், சிறப்புடனும் துலங்கு வதில் வியப்பில்லை.

மகராஜன் வாயிலாகத் தெரிந்து கொண்ட நீதிமன்ற நிகழ்ச்சிகளில் கல்கி கதைகளின் கருப்பொருட்களைக் கண் டார். நிகழ்ச்சிகள் மாத்திரமல்ல, அவற்றை மகராஜன் கண்ட விதமும், அதை அவர் கூறிய முறையும் கல்கியின் சிந்தனை யைக் கிளறியிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

மகராஜன் ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ் என்று பல மொழிகளையும் பயின்று இரசித்தவர். நீதிமன்றங்களில் தமிழ் அரங்கேற அவர் செய்த பணியின் அடிப்படைகளைப் பற்றி இப்புத்தகத்திலுள்ள ஒரு கட்டுரையின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

ஹாஸ்யம் தவழும் அவர் திரு. **V.M.** கலியாண சுந்தரம் பிள்ளையின் தனிச்சிறப்பு கொண்ட குறட்டையினைப் பற்றியும், சாம்பசிவ ஐயர் வெள்ளைக்காரக் கலெக்டரை வசப்படுத்தியதைப் பற்றியும் குறிப்பிட்டிருப்பது சுவைமிக்கவை.

பல கோணங்களிலிருந்து நீதிமன்ற நிகழ்ச்சிகளிலே, மக்கள் வாழ்க்கையை அலசிப் பார்த்திருக்கிறார் மகராஜன்.

நீதிமன்றங்களுக்குள் காலெடுத்து வைக்காதவர்கள்கூட இப்புத்தகத்தை விரும்பிச் சுவைத்துப் படித்துப் பயன் பெற முடியும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை
24.4.1984

என்.டி.வானமாமலை
உச்சநீதிமன்ற வழக்கறிஞர்

நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

திருநெல்வேலி - பாளையங்கோட்டையைப் பூர்வீகமாகக் கொண்ட திரு. எஸ். மகராஜன் திருச்சியில் 1.4.1913இல் பிறந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி., பட்டம் பெற்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும் முதல் வகுப்பில் தேறினார்.

கல்லூரியில் படிக்கும்போதே தமது இலக்கியத் திறமையை வெளிப்படுத்தியவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமைக்காகப் பல பரிசுகளைப் பெற்றார்.

பல்கலைக் கழகத்திலேயே ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்திருக்கிறார்.

சட்டப் படிப்பை முடித்த பிறகு 1935இல் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டு பாளையம்கோட்டையில் தொழிலைத் தொடங்கினார்.

1943இல் மாவட்ட முன்சீப்பாக **(District Munsif)** அமர்த்தப்பட்ட இவர் சப் ஜட்ஜாகவும் **(Sub Judge)** மாவட்ட நீதிபதியாகவும் **(District Judge)** பதவி உயர்வு பெற்றார்.

1965இல் புதுச்சேரியின் தலைமை நீதிபதியாக **(Chief Du Service Judiciair)** பதவி உயர்வு பெற்றார்.

1969 முதல் 1975 வரை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்தார்.

பெரிய பதவிகள் வகித்து வந்த காலத்திலேயே இலக்கியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டை வளர்த்து வந்த திரு. மகராஜன் ஓய்வு பெற்ற நாளிலிருந்து இலக்கியத்துக்காகவே தம் நேரம் முழுவதையும் செலவிட்டு வந்தார்.

1976 முதல் 1981 வரை தமிழ் மாநில சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையத்தின் **(State Official Language (Legislative) Commission)** தலைவராக திரு. மகராஜன் அவர்கள் பணியாற்றிய காலத்தில் 'குற்ற விசாரணை முறைச் சட்டம்' **(Criminal Procedure Code)** 'இந்தியத் தண்டனைச் சட்டம்' **(Indian Penal Code)** மற்றும் 'சட்டச் சொல் அகராதி' **(Legal Glossary)** ஆகிய நூல்களையும் ஆணையம் வெளியிட்டது.

1978 முதல் 1981 வரை தமிழ்நாடு சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்ட வல்லுநர் குழுவின் தலைவராகப் **(Chairman, Expert Committee for Translation of Classics, Tamil Nadu)** பொறுப்பேற்றார். இக்குழு தமிழிலுள்ள பேரிலக்கியங்களை அந்நிய மொழிகளிலும், அந்நிய மொழிகளிலிருக்கும் பேரிலக்கியங்களை தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிட வேண்டி அமைக்கப்பட்டதாகும். இக்குழுவின் வாயிலாக பல நூல்களை வெளியிட்டார்.

1978ஆம் ஆண்டில் தருமபுரி ஆதீன மடம் இவரது இலக்கியச் சேவையைப் பாராட்டி 'இலக்கிய ரசிகமணி' என்ற பட்டம் வழங்கியது.

1979ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் அர்ச்சகர் நியமன முறை பற்றி ஆராய்வதற்காகத் தமிழ்நாடு அரசு நியமித்த வல்லுநர் குழுவின் தலைவராகப் பணியாற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.

1979ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திரு. மகராஜன் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

சென்னையில் 'ரசிகமணி டி.கே.சி. வட்டத் தொட்டி' என்ற இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி அதன் தலைவராகச் செயல்பட்டு வந்த திரு. மகராஜன் அவர்கள் ரசிகமணி டி.கே.சி.யின் தலை மாணாக்கர்களில் குறிப்பிடத்தக்கவராயி ருந்தார்.

ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட் **(Hamlet)** 'லீயர் அரசன்' **(King Lear)** 'மாக்பெத்' **(Macbeth)** நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவை தவிர மகாகவி கம்பனின் 3000 பாடல்களையும் திருமூலரின் திருமந்திரப் பாடல்கள் பலவற் றையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

கம்பர் மற்றும் திருவள்ளுவரைப் பற்றி இவர் ஆங்கிலத் தில் எழுதிய நூல்கள் சாகித்திய அகாதெமியினால் வெளியி டப் பெற்றன.

'ஒலிச் செல்வம்', 'ஆடத் தெரியாத கடவுள்', 'தெய்வ மாக்கவி', 'சொல்லின்பம்', 'கவிதையில் விடுமுறை', 'பாராட் டுத் தமிழ்' முதலிய நூல்களை எழுதியிருக்கிறார். ரசிகமணி டி.கே.சி.யின் கடிதங்களைத் தொகுத்தும் புத்தக வடிவத்தில் வெளியிட்டுள்ளார்.

புதுவையில் தலைமை நீதிபதியாக இருந்தபோது இவ ரால் 'பிரெஞ்சு சிவில் புரொஸீஜர் கோட்' **(French Civil Procedure Code)** ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

சாகித்திய அகாதெமி, பாரதீய ஞானபீடம் ஆகிய இலக் கிய அமைப்புகளுக்கு ஆலோசகராகப் பணி புரிந்தார்.

கோலாலம்பூர் சென்னை மற்றும் பாரீஸில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

ஸ்விட்ஸர்லாந்து, மேற்கு ஜெர்மனி, பிரான்சு, இங்கி லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

1981ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் செயல்முறைக் கமிட்டியின் தலைவராகப் **(Chair man, Steering Committee)** பணியாற்றினார்.

பொருளடக்கம்

1.	நீதிமன்ற நினைவுகள்	13
2.	எழுத்தும் தொழிலும்	23
3.	சாட்சிக் கூண்டு	35
4.	குறுக்கு விசாரணை	52
5.	சத்திய சோதனை	58
6.	பாகப் பிரிவினை	69
7.	நிருவாகப் பட்டயம்	75
8.	பஞ்சாயத்து ஆட்சி முறை	79
9.	சில நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கிறேன்	87
10.	நீதிமன்றங்களில் தமிழ்	95

ஆசிரியரின் பிற நூல்கள்

1. பாராட்டுத் தமிழ்

2. தெய்வ மாக்கவி

3. ஒலிச்செல்வம்

1. நீதிமன்ற நினைவுகள்

ஆறு ஆண்டுகள் வழக்கறிஞனாகவும், இருபத்தைந்து ஆண்டுகள் நீதிபதியாகவும் இருந்துவரும் எனக்கு 'நீதிமன்ற நினைவுகள்' என்றவுடன் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருவது இயல்பு. ஆனால், அந்த நினைவுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சட்டத் துறையிலில்லாதவர்களும் சுவைக்கக் கூடிய சில நிகழ்ச்சிகளை மாத்திரம் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

நீதிமன்றத்திலே சாட்சிக் கூண்டு என்று ஒன்றுண்டு. ஒய்யாரமான இடம் அது. சாட்சிகள் அதில் ஏறி நின்று கொண்டுதான் வாக்குமூலம் கொடுக்க வேண்டும். அப்படி சாட்சியம் சொல்லுவதற்கு முன்னால், அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும். "நான் சொல்லுவது உண்மை. முழுக்க முழுக்க உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் சொல்லமாட்டேன் இது சத்தியம்" என்பது பிரமாணம். இப்படிப் பிரமாணம் செய்தபிறகு, கலப்பற்ற உண்மையை எத்தனை பேர் சொல்லுகிறார்கள் என்பது ஆராய்ச்சி செய்ய வேண்டிய காரியம்.

கிராமங்களிலே பஞ்சாயத்து விவகாரங்கள் நடக்கும். அங்கே யாராவது பொய் சொல்லிவிட்டால், தலைமைக்காரர் கேட்பார், "அப்பா, பொய் சொல்லுவதற்கு நீதிமன்றமா இது! இல்லையே, ஆகையால் தயங்காமல் உண்மையைச் சொல்லி விடு!" என்று கேட்பார்.

சிலருக்குக் கோர்ட்டில் பிரமாணம் செய்வது ஒரு பொருளற்ற சடங்காகத் தோன்றுகிறது. பொய் சொல்லும் உரிமையைக் கொடுக்கிற சடங்காகக்கூட அதை அவர்கள் கருதி விடுகிறார்கள். இந்தப் பொய்க் கடலையெல்லாம் நீந்தி உண்மையை நீதிபதி கண்டுபிடிப்பதற்குக் கடவுள்தான் துணை செய்ய முடியும்.

மனிதனுடைய இடது கைப்பெரு விரலுக்கு மதிப்பு ரூ.5,000 என்பதை ஒரு வழக்கிலே தெரிந்து கொள்ள முடிந்தது. கையொப்பம் போடத் தெரியாத தற்குறி ஒருவர், இடது கைப்பெரு விரல் ரேகையைப் புரட்டி ஒரு **promissory note** எழுதிக் கொடுத்து 5000 ரூ. கடனாக வாங்கினார். கடன் வாங்கி 10 நாள்களுக்குப்பின் அந்த விரலிலே ஒரு பிளவை வந்தது; அந்த வேதனையிலிருந்து ஆனந்தம் பிறந்தது அவருக்கு. அதை அறுத்தெறிந்து விட்டால், கடன் கொடுத்தவரை மொங்கான் வைக்கலாம் அல்லவா. உடனே, ஒரு டாக்டரிடம் சென்று, இடது கைப் பெரு விரலை அறுக்கும்படி செய்தார். டாக்டரை சரிக்கட்டி, பிராமிசரி நோட்டுக்கு முன் தேதியிலேயே அறுவை செய்ததாக ஆஸ்பத்திரியில் பதிவு செய்து கொண்டார். மூன்றாண்டுகள் கடன் கொடுத்தவருக்குப் பாய்ச்சல் காட்டிக் கொண்டே வந்தார். நோட்டு காலாவதியாகும் தருணம் கடன் கொடுத்தவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். பிரதிவாதியோ "நான் இந்த நோட்டை எழுதிக் கொடுக்கவுமில்லை. வாதியிடம் கடன் வாங்கவும் இல்லை" என்று வாதாடினார். நோட்டைப் பார்த்தால் கட்டை விரல் ரேகை இருந்தது. 'இது என்னுடைய ரேகை அல்ல. நோட்டுக்குமுன், பல நாள்களுக்கு முன், எனது இடது பெருவிரல் அறுக்கப்பட்டு விட்டதே. நான் எப்படி ரேகையைப் புரட்டியிருக்க முடியும்" என்று சத்தியம் செய்தார் பிரதிவாதி. அவருடைய கூற்றுக்குத்

தாளம் போட்டார் அறுவை செய்த டாக்டர். இந்த அயோக்கியத்தனத்துக்கு முன்னால் நிற்க முடியாமல் ஓடிப் பதுங்கிக் கொண்டது சத்தியம். பணம் கொடுத்த வர் பணத்தையிழந்தார். பெருவிரலை விடுமுதலாகக் கொண்டு வாணிபம் செய்த புண்ணியவானுக்கு வழக் கிலே வெற்றி கிடைத்தது. பொறுப்புள்ள ஒரு டாக்டரே அக்கிரமத்தோடு குலாவத் தொடங்கி விட்டால், மண்ணு லக நீதிபதிகள் உண்மையை எவ்வாறு கண்டுபிடிப்பது?

இனி, இரு தரப்பார்களின் கட்சிகளையும் மெய்ப் பிக்க வரும் சாட்சிகளில் எத்தனை எத்தனையோ தினுசு கள் உண்டு. உண்மையுள்ளவராயிருப்பார், இருந்தா லும் சொல்வன்மையில்லாத காரணத்தால், பொய்யன் போலக் காட்சியளிப்பார்.

மெய்யுடை யொருவன் சொல் மாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே

இதற்கு நேர்மாறாக, அண்டப் புளுகனாக இருப் பான். அவனுடைய வாய் வீச்சினால் சத்தியசீலன் போலக் காட்சிக் கொள்வான்.

பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால்
மெய்போலும்மே மெய் போலும்மே

வேறு சிலரிடத்திலே மூக்கால்வாசி உண்மையிருக் கும். ஆனால், முக்கியமான அம்சத்திலே பொய் கலந்து விடும். உண்மை எது, பொய் எது என்று இனம் கண்டுபிடிப்பதற்குள் நீதிபதிகள் படும் வேதனையை இப்படி அப்படி என்று சொல்லிவிட முடியாது. கேவ லம் ஏட்டுப் படிப்பும், சட்ட ஞானமும் இருந்தால் மாத்திரம் உண்மை பிடிபட்டு விடாது. இறைவனுடைய அருட்துணையினால் மூன்றாவது கண்ணைத் திறந்து

உண்மையைக் கண்டுபிடிக்கும் மாசறு காட்சி அவர் களுக்கு ஏற்பட வேண்டும். சாட்சி கூண்டில் ஏறினவுட னேயே, அவருடைய நடை உடை பாவனைகள் மூலம் அவருடைய யோக்யதையையும், மனப்பாங்கையும், முழுத் தன்மையையுமே சரிவர மதிக்கத் தெரிய வேண் டும்.

கஞ்சிப் போட்ட வெள்ளைக் காலர்களும், இஸ்த் திரி போட்ட கருப்புக் கோட்டுகளும் நிறைந்த நீதிமன்றத் தில் நுழைந்து, ஒய்யாரமாக நிற்கும் சாட்சிக் கூண்டில் ஏறி நின்றவுடனேயே எந்தத் துணிச்சலான சாட்சிக்கும் அச்சமும், கூச்சமும் ஏற்படுவது இயல்பு. இந்த அச்சத் தைப் பொய் சொல்லுவதால் ஏற்பட்ட அச்சம் என்று தீர்மானித்து விடுவதும் தவறு.

போட்டி போட்டு வழக்காடும் கட்சிக்காரர்கள் வெற்றியிலேயே கண்ணாயிருப்பார்கள். அறத்தைப் பற்றியும், நீதியைப் பற்றியும் நினைக்க அவர்களுக்கு நேரம் இருக்காது. ஆனால், அவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞர்கள் நீதியைத் துலக்குவதிலே நீதிபதிகளுக்கு உதவியாயிருக்க வேண்டும். வழக்கு நடக்கும்போது முழு விழிப்போடு இருக்க வேண்டும். ஒரு சிலர் அஜாக் கிரதையாக உறங்கி விடுவார்கள். உறக்கத்திலும் உணர் வோடிருந்த ஒரு வழக்கறிஞரைப் பற்றி ஞாபகம் வருகி றது. வி.எம். கலியாணசுந்தரம் பிள்ளை என்ற புகழ் பெற்ற வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் தன் வாக்குவா தத்தை முடித்துவிட்டு நாற்காலியில் அமர்ந்தவுட னேயே தூங்கத் தொடங்கிவிடுவார். எதிர்க்கட்சி வக்கீல் அவருக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதுகூட அவர் அயர்ந்து தூங்குவார். ஆனால், காது மாத்திரம் எதிர்வாதம் செய்யும் வக்கீலைக் கேட்டுக் கொண்டிருக் கும். எதிர்வாதம் முடிந்தவுடன் தூக்கத்திலிருந்து விழித்து நின்று ஒவ்வொரு எதிர்வாதத்துக்கும் ஆணித்

தரமாகப் பதில் சொல்லுவார். இந்த விந்தையைக் கண்ட நான் "தாங்கள் இதை எப்படிச் சாதிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "தசாவதானம், சதாவதானம் போல, இதுவும் ஒரு வகை அவதானம்" என்று சொன்னார்.

ஒரு சில நீதிபதிகள் வாக்குவாதத்தைத் தாங்க முடியாமல் ஒரு சில நிமிடங்கள் தூங்கி விடுவார்கள்; பலத்த குறட்டைக்கூடப் போடுவார்கள். தூங்க வேண்டும் என்று நினைக்கும் வக்கீல்களையும், குறட்டை விழிப்பு நிலையிலே வைத்துவிடும். பல ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் உயர்நீதிமன்றத்திலேயிருந்த வெள்ளைக்கார நீதிபதி ஒருவர், வழக்கறிஞர் **Norton** வாதாடிக் கொண்டிருந்தபோது, குறட்டை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கறிஞரோ மிகவும் சாமர்த்தியசாலி; நீதிபதியை உறக்கத்திலிருந்து எழுப்பவும் வேண்டும்; அதே சமயம் நீதிபதியை அவமதித்த குற்றத்துக்கு ஆளாகவும் கூடாது. இந்த இக்கட்டான நிலையில் **Norton** துரைக்கு ஒரு யுக்தி தோன்றியது. நீதிமன்றத்தில் பங்கா இழுத்துக் கொண்டிருந்த கிழவன், நீதிபதியைப் போலவே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான். அவனைப் பார்த்து **Norton** "ஏன், அப்பா இப்படிக் கோர்ட்டில் தூங்குவதற்கு ஹைகோர்ட் ஜட்ஜா நீ?" என்று ஒரு கூப்பாடு போட்டார். இந்தக் கூப்பாட்டிலே பதறி எழுந்த நீதிபதி, நார்ட்டனைப் பார்த்து "ஏன் இப்படிக் கூப்பாடு போடுகிறீர்கள்?" என்று கேட்டார். "இல்லை பிரபு, இந்தப் பங்காக்காரன் அசந்து தூங்கிவிட்டான். கோர்ட்டில் தூங்குவதற்கு ஹைகோர்ட் ஜட்ஜா நீ என்று கேட்டேன். வேறொன்றுமில்லை" என்று சொன்னார் நார்ட்டன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த எல்லாரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். அந்தச் சிரிப்பிலே நீதிபதியும் மனமாரக் கலந்து கொண்டார்.

சமயோசிதமாகப் பேசி நீதிபதிகளுடைய மனசைத் திருப்பும் திறமை சில வழக்கறிஞர்களிடமே இருக்கிறது.

40 ஆண்டுகளுக்கு முன் ஒரு மாவட்டக் கலெக்டர் இருந்தார். மிக மிகக் கண்டிப்பானவர். அவரை நெருங்குவதற்கே எல்லாருக்கும் பயம். பெட்டி வண்டியிலே ஒருநாள் அவர் முகாம் போய்க் கொண்டிருந்தார். அவரிடத்திலே மனுக் கொடுத்து உடனடியாக 144 தடையுத்தரவு வாங்க வேண்டியிருந்தது. சாம்பசிவ ஐயர் என்ற ஒரு வக்கீல் நண்பர் கலெக்டர் நடுக்காட்டில் போய்க் கொண்டிருந்தபோது அவர் வண்டியை நிறுத்தி அவரிடம் மனுவை நீட்டினார். மகா கோபம் வந்துவிட்டது கலெக்டருக்கு. "மனுக் கொடுப்பதற்குக் காலம், இடம் கிடையாதா? நீதிமன்றத்தில் வந்து கொடுக்க வேண்டிய மனுவை, நடுக்காட்டிலே கொடுக்கிறீரே. இது மிகவும் தவறு. இதை வாங்க முடியாது" என்று சொல்லி கலெக்டர் சீறி விழுந்தார். வக்கீல் சாம்பசிவ ஐயரோ ஒரு பழம் பெருச்சாளி. இந்த சலசலப்புக்கு அஞ்சியவர் அல்ல. துணிச்சலோடு அவர் சொன்னார்: "கலெக்டர் துரை அவர்களே, நான் செய்த பெருங்குற்றத்தை மன்னிக்க வேண்டும். நீதிமன்றத்திலிருக்கும்போது இந்த மனுவைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், தாங்கள் எந்த இடத்திலிருந்தாலென்ன, அது நீதிமன்றம் ஆகிவிடுகிறது. எங்களுக்கு ராமனிருக்குமிடந்தானே அயோத்தி" என்று ஒரு போடு போட்டார். கலெக்டர் துரைக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. கொடுத்த மனுவை மீண்டும் கையில் வாங்கிக் கொண்டு கேட்ட உத்தரவை உடனே போட்டுக் கொடுத்துவிட்டார்.

இப்படியாக நீதிபதிகளுடைய உளப்பாங்கை யறிந்து அதற்குத் தக்கவாறு நெளிந்து கொடுக்கும் சில வக்கீல்களைப் பார்த்து அனுபவிக்கலாம். காலஞ் சென்ற நண்பர் பாஸ்கரத் தொண்டைமான் திருநெல்

வேலியில் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார். போட்ட வழக்கை போட்ட தேதியிலேயே எடுத்து விசாரணையை முடித்து விடுவார். அவரிடத்திலே வாயிதா வாங்குவது என்பது முடியாத காரியம். ஒரு கொலை வழக்கு அவர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. காலஞ்சென்ற ராமானுஜம் என்ற பெயர் பெற்ற வழக்கறிஞர் அந்த வழக்கிலே எதிரிகளுக்கு ஆஜரானார். "சாட்சியத்தை நன்றாகப் படிப்பதற்கு எனக்கு நேரமில்லாமல் போய்விட்டது. தயவு செய்து வழக்கை ஒரு நாள் தள்ளிப் போட வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார். நீதிபதியோ "முடியவே முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நீதிபதி கம்பராமாயணத்தில் மிகவும் தினைத்தவர் என்று வக்கீலுக்குத் தெரியும். உடனே அவர் சொன்னார்: "முதல் நாள் போரிலே தோற்று வெறுங் கையனாக நின்ற ராவணனை இரக்கத் தோடு பார்த்தான் ராமன், 'உனக்கு வாய்தா கிடையாது' என்று சொல்லவில்லை.

"இன்றுபோய்
நாளைவாவென நல்கினன் நாகிளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

என்று ஒரு கம்பராமாயண மேற்கோளை அவிழ்த்து விட்டார் ராமானுஜர். உடனே, நீதிபதி பாஸ்கரத் தொண்டைமானின் மனம் இளகிவிட்டது. 'கேட்ட வாயிதாவை கம்பனுக்காகக் கொடுக்கிறேன்' என்று சொல்லி வழக்கை ஒத்திப் போட்டுவிட்டார்.

நெடுங்காலத்துக்கு முன்னால் கடலூரில் ஒரு நீதிபதி இருந்தார். வழக்குகளைத் தள்ளுபடி செய்யும்போதெல்லாம் அவர் 'க்ஷிவரம், க்ஷிவரம்' என்று சொல்லிக் கொண்டே தள்ளுவார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த வழக்காளர்களுக்கு வேதனை தாங்க முடியவில்லை.

இந்த மனிதர் வழக்கைத்தான் தள்ளுகிறார். தொலைந்து போகட்டும். க்ஷவரம், க்ஷவரம் எனறு வேறு சொல்லி நம்மை அவமானப்படுத்துகிறாரே என்று வருந்திக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் க்ஷவரத்தையே தொழிலாகக் கொண்டிருந்த ஒரு நாவிதர் அவர் கோர்ட்டிலே வாதியாக வந்தார். அவருடைய வழக்கைத் தள்ளும் போது "உம்முடைய கேஸ் க்ஷவரம்" என்று சொன்னார் நீதிபதி. நாவிதருக்கு வயிற்றெரிச்சல் தாங்க முடிய வில்லை.

உடனே, "கோர்ட்டார் அவர்களே, தாங்கள் இப்படி க்ஷவரம் செய்யத் தொடங்கிய பிறகு எங்கள் தொழிலிலே மண் விழுந்துவிட்டது" என்று சொன்னார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நீதிபதி "க்ஷவரம்" என்று சொல்லுவதையே நிறுத்திவிட்டார்.

சில நீதிபதிகள் வழக்கறிஞர்களை வலியச் சண்டைக்கு இழுப்பார்கள். தான் சர்வக்ஞன் என்று காட்டுவதிலே அவர்களுக்கு ஆசை. அதோடு நிற்க மாட்டார்கள். தன் முன்னால் வந்து நிற்கும் ஆள்கள் எல்லாருமே அற்பர்கள் என்ற நினைப்பு. இந்த ரகத்தைச் சேர்ந்த ஒருவர் அயர்லாந்து நாட்டிலே நீதிபதியாக இருந்தார். கர்ரன் **(Curran)** என்பது அவருடைய பெயர். ஈவிரக்கமில்லாத சுடுமூஞ்சி. கட்சிக்காரர்களையும், வக்கீல்களையும் மட்டம் தட்டுவதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. அவருடைய கோர்ட்டுக்குப் பேர் பெற்ற வழக்கறிஞர் எர்ஸ்கின் வழக்காட வந்திருந்தார். விஷநாக்கு படைத்தவர் எர்ஸ்கின். நாக்கினால் அவர் கொட்டினாரேயானால், எதிரி பிழைப்பது மறு பிழைப்புத்தான். எர்ஸ்கின் தன் கட்சியை எடுத்துப் பேசத் தொடங்கியதும், நீதிபதி கர்ரன் அவரை எப்படி அவமானப் படுத்தலாம் என்று யோசனை பண்ணிக் கொண்டிருந்தார். திடீர் என்று அவருக்கு ஒரு யோசனை தோன்றி

யது. தன் பக்கத்திலேயே ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போடச் சொல்லி, தன்னுடைய அருமை நாயை அதில் உட்கார வைத்து, அதோடு பேசுவதும் குலாவுவ துமாக இருந்தார். இந்த அலங்கோலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வக்கீல் எர்ஸ்கின் திடீரென்று தன்னு டைய பேச்சை நிறுத்தினார். இதைப் பார்த்த நீதிபதி "ஏன் ஐயா, உங்கள் பேச்சை நிறுத்தினீர்கள். நீங்கள் பாட்டுக்குத் தொடர்ந்து பேசுங்களேன்!" என்று சொன் னார். "இல்லை, பிரபு கோர்ட்டார்கள் கலந்து ஆலோ சனை செய்யும்போது, நான் குறுக்கிடக் கூடாதல்லவா" என்றார் வழக்கறிஞர். அவமானமடைந்த நீதிபதி பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தார்.

Curran-ஐப் போன்ற நீதிபதிகள், நல்ல வேளையாக, நம் நாட்டிலே மிக மிகக் குறைவு. பல ஆண்டுகளுக்கு முன் வேம்பு ஐயர் என்று ஒரு நீதிபதியிருந்தார். அவர் மிகமிக நல்லவர். ஆனால், சில அசாதாரணமான குணங் கள் படைத்தவர். நம் நாட்டவர்களிடத்திலே அவருக்கு நம்பிக்கையே கிடையாது. எதற்கெடுத்தாலும், ஆங்கி லேயர்கள்தான் மக்கள் குலத்திலேயே சிறந்தவர்கள் என்று நம்பினார். நம்முடைய சங்கீதம் என்றால் அவ ருக்கு அறவே பிடிக்காது. எங்காவது நாதசுர இசை கேட்டால் காதைப் பொத்திக் கொள்வார். அந்த இசை யைக் கேட்டால் அவருடைய நரம்புகளுக்குள்ளேயே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுவிடும். ஒருநாள் அவர் கோர்ட் டிலே ஒரு வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கோயில் தர்மகர்த்தா மேளகாரனை வேலையை விட்டு விலக்கிவிட்டார். வேலையை விட்டு விலக்கியது தவறு என்று வழக்குப் போட்டார் மேளகாரர். நாதசுரம் வாசிக் கவே அவருக்குத் தெரியாது என்று வழக்காடினார் தர்மகர்த்தா. நாதஸ்வரக்காரருக்கு வக்கீலாக இருந்தவர் கொஞ்சம் குறும்புக்காரர். நீதிபதிக்கு நாதஸ்வர இசை

பிடிக்காது என்று தெரியும். தெரிந்திருந்தும் வேண்டு மென்றே தன் கட்சிக்காரரை நாயனத்தை வாசிக்கச் சொல்லிவிட்டார். நீதிபதியின் அனுமதியில்லாமல் மேளக் கச்சேரி தொடங்கிவிட்டது. வேம்பு ஐயருக்கு அன்று ஏற்பட்ட கோபத்துக்கும், எரிச்சலுக்கும் அள வேயில்லை. மேளகாரருடைய வழக்கை உடனே தள்ளுபடி செய்தார். அதோடு நிற்காமல், மேளகாரரு டைய வக்கீல் அவருடைய கோர்ட்டு வாசலில் மறு முறையும் அடி வைக்காதபடி பார்த்துக் கொண்டார்.

இப்படியெல்லாம் கோணல்தனமாக நடந்து கொள் ளும் நீதிபதிகள் அபூர்வம். **Sir Victor Murray Coutts** என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதி யிருந்தார். இங்கிலீஷ்காரர் அவர். சிறந்த அறிஞர். அவ ருடைய நீதிமன்றத்தில் ஒரு பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது. அதை வெகுநேரம் கூர்ந்து கவனித்துவிட்டு அது தமிழில் எழுதப்பட்ட தீர்ப்பு என்று முடிவுக்கு வந்தார். உடனே, தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒரு வரை அழைத்து அதைப் படிக்கச் சொன்னார். மொழி பெயர்ப்பாளர் அதைப் பார்த்துவிட்டு "இது தமிழ் எழுத்தல்ல. தெலுங்கு எழுத்து" என்று தெரிவித்தார். உடனே தெலுங்கு மொழி பெயர்ப்பாளரை அழைத்து அதைப் படிக்கச் சொன்னார்கள். அவர் அதைப் படித்து விட்டு "இது தெலுங்கெழுத்தல்ல. ஜஸ்டிஸ் **Old Field** என்ற ஆங்கில நீதிபதியின் ஆங்கில எழுத்து" என்று சொன்னார். அது முதல் ஜஸ்டிஸ் **Old Field** உடைய லிபியை கண்டுபிடிப்பதற்கென்று ஹைகோர்ட்டிலே சிறப்புச் சம்பளம் கொடுத்து ஒரு தனி நிபுணரை நியமிக்க வேண்டியிருந்தது.

2. எழுத்தும் தொழிலும்

மலைக்கு மூலை சிதறிக் கிடக்கிறது வாழ்க்கை. பொருளற்றது போன்ற ஒரு நிகழ்ச்சி இன்று நடக்கிறது. அதன் முழுப் பொருளை உணர்வதற்கு நாற்பது ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சிதறுண்டு கிடக்கும் வாழ்க்கைத் துண்டுகளைப் பொறுக்கி இணைத்துப் பார்க்கும் போதுதான், வாழ்க்கையின் உட்பொருள் என்ன, நோக்கம் என்ன என்று அறிய முடிகிறது. இந்த நோக்கத்தைப் புலப்படுத்துவது எழுத்தாளர் பொறுப்பு. மறைந்து கிடக்கும் காரண காரியத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவது அவர்களது தொழில்; வாழ்க்கை என்ற அரிய பூம்பட்டாடையை விதி எவ்வாறு அதிசயமாக நெசவு செய்கிறது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டியது எழுத்தாளர் கடமை.

ஒரு நாள் ரயில் பிரயாணம் போய்க் கொண்டிருந்த போது ஒரு கவிஞர் கையில் அகப்பட்டு அல்லற்பட்டேன். கத்தை கத்தையாக அவர் எழுதி வைத்திருந்த கவிதைகளையெல்லாம் அவர் என் தலையில் கொட்டி, "உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டார். செய்யுள்கள் எல்லாமே காதலைப் பற்றியவையாயிருந்தன. அவற்றில் உணர்ச்சியோ, சுவையோ ஒரு துளிகூட இல்லை. "ஐயா எப்பொழுதாவது

1963இல் கல்கியில் வெளிவந்த கட்டுரை

நீங்கள் காதலுக்கு ஆட்பட்டதுண்டா?'' என்று கேட் டேன். ''இல்லை. ஆனால், நான் கலியாணமானவன், மனைவியிடத்தில் அன்பு காட்டுகிறவன்'' என்று சொன் னார். இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் பக்கத்திலிருந்த ஓர் உண்மைக் கவிஞர்; காதல் துறையிலே மூங்கி மூழ்கியவர். இதைக் கேட்டதும் அவருக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ''பாயசம் சாப்பிட்டிருக் கிறீரா?'' என்று கேட்டால், ''பழஞ்சோறு சாப்பிட்டிருக் கிறேன்'' என்று பதில் சொல்லுகிறீரே ஐயா'' என்று ஒரு போடு போட்டார். காதல் 'கவிஞருக்கு' விஷயம் ஒன்றுமே புரியவில்லை. ''உங்கள் அனுபவத்துக்கு எட்டிய பொருள்களைப் பற்றியே எழுதுங்கள். அப் படி எழுதினால்தான், உங்கள் எழுத்திலே தெளிவும், தென்பும், உணர்ச்சியும் இருக்கும்!'' என்று சொன் னேன்.

எழுத்துக்கு ஊட்டம் கொடுப்பது அனுபவம்தான். 'செம்மீன்' என்ற உயர்ந்த மலையாள நாவலை எழுதி யிருக்கிறார் தகழி சிவசங்கர பிள்ளை. செம்படவர் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதிய நாவல். பல ஆண்டுகளாகச் செம்படவர்களோடு பழகியவர் ஆசிரியர்; சுறா மீன்களோடு புரண்டு, புயற் காற்றிலே தோணிகளோடு அமிழ்ந்தி கடல் கன்னியோடு குலாவிய வர். ஆகவேதான், அவருடைய நாவலிலே சுவானுப வத்தின் அதிகார முத்திரையைக் காண்கிறோம்; கருவாட் டுச் சிப்பமும், உப்பங்காற்றும் நாவல் முழுவதும் கலை மணத்தை வீசுகின்றன. எழுத்துக்கு ஊட்டம் கொடுக்க விரும்புகிறவர்கள், தகழியைப் போல், அனுபவத்தை நாட வேண்டும்; வெறுங் கையால் முழம் போடக் கூடாது.

மனிதப் போக்கின் விசித்திரத்தை அறிய விரும்பும் எழுத்தாளர்கள், ஊர் ஊராய் அலைந்து திரிய வேண்

டாம். கொஞ்ச காலம் ஒரு நீதிமன்றத்தில் நடக்கும் வழக்குகளை கவனித்தால் போதும்; மனித நாடகத்தின் பல மட்டங்களையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்து அனுபவித்து விடலாம். குடும்ப வாழ்க்கையில் ஏற் படும் முண்டு முடிச்சுகள், மனிதனுடைய போலி டம் பம், வறுமையின் கொடுமைகள், செல்வந்தர்களின் வஞ்சகம், காதலர்களின் நிறைவேறாக் கனவுகள், பொருந்தாத் திருமணங்கள் பொல்லாத விளைவுகள், கயமை, சோகம், ஹாஸ்யம், கருணை - இவை எல்லா வற்றையும் பற்றற்ற நிலையிலிருந்து பார்த்து நிதான மும், பக்குவமும் அடைவதற்கு ஏற்ற இடம் நீதிமன்றம்.

இந்த மர்மத்தை நன்றாக உணர்ந்தவர் ஆசிரியர் 'கல்கி'. அவர் என்னைச் சந்திக்கும் போதெல்லாம், "உங்கள் நீதிமன்றத்தில் நடந்த ரஸமான நிகழ்ச்சி யொன்றைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டும்" என்று அடிக்கடி கேட்பார். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் கேட்டவுடனே அவருடைய கற்பனை இயங்கத் தொடங்கிவிடும். அற்புதச் சிறுகதையொன்று அவர் உள்ளத்திலே கருத்தரித்து, உருவாகிவிடும். அடுத்த கல்கி இதழிலே, நீதிமன்ற நிகழ்ச்சி கலையுருவம் பெற்று வெளிவந்துவிடும்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஜில்லா முன்சீப்பாக இருந்தபோது நடந்த ஒரு வழக்கு. இரண்டு கிராமங்களுக்கிடையிலே மாரியம்மன் கோயில் ஒன்றிருந்தது. எந்தக் கிராமத்தாருக்கு கோயில் பாத்தி யப்பட்டது என்பதுதான் தாவா. சென்னையிலிருந்து பெரிய வழக்கறிஞர்கள் வந்து வழக்கை நடத்தினார்கள். கோர்ட்டிலே ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டார் கள். வாதி வக்கீலுக்குப் பின் ஒரு கிராமமே உட்கார்ந்தி ருந்தது. பிரதிவாதி வக்கீலுக்குப் பின்னும் ஏராளமான

மக்கள். சாட்சிகளை விசாரிக்க விசாரிக்க போட்டி முறுக் கேறிக் கொண்டே போனது. வாதி தரப்பிலே நாலாவது சாட்சி வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். திடீரென்று பிரதிவாதி வக்கீலுக்குப் பின் உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் ஆசாமி எழுந்து பரபரப்புடன் எதிர்க் கட்சி வக்கீலுக்குப் பின்னாலிருந்த ஓர் ஆளைச் செந்தூக் காகத் தூக்கிக் கொண்டு போய், தன் வக்கீல் பக்கத்தில் கொண்டு போய் உட்கார வைத்தார். கோர்ட்டிலே ஒரே சலசலப்பு. வாதி வக்கீல் எழுந்து "இவருடைய செயல் கண்டிக்கத்தக்கது. என் சாட்சிகளை பயமுறுத்துவதற்கா கவே, பிரதிவாதி இப்படி பலவந்தம் செய்கிறார். கோர்ட் டார் அவர்கள் கோர்ட்டை விட்டே இந்த அக்கிரமக்கா ரரை வெளியேற்ற வேண்டும்!" என்று வாதாடினார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டு ஒழுங்கீனமாக நடந்தவரை கோர்ட்டுக்கு ஒரு பர்லாங்குக்கப்பால் கொண்டு போய் விட்டுவர வேண்டுமென்று கோர்ட் வில்லைச் சேவகருக்கு உத்தரவு போட்டேன்.

உத்தரவை நிறைவேற்றிவிட்டுச் சேவகர்கள் திரும்பி வந்தார்கள். கால்மணி நேரம் விசாரணை தொடர்ந்து நடந்தது. சாட்சி சொல்லும் வாக்குமூலத்தை நான் எழுதிக் கொண்டேயிருந்தேன். அப்போது வெளியே அகற்றப்பட்ட ஆசாமி கையில் கத்தியேந்திக் கொண்டு கோர்ட்டுக்குள் ஓடி வந்தார். சுமார் 40 வக்கீல் களைத் தாண்டி, கோர்ட் குமாஸ்தாவையும் தாண்டி, நீதிபதியின் ஆசனத்தைச் சுற்றியிருக்கும் கூண்டில் ஏறிப் பாய்ந்தார். கோர்ட்டில் உள்ளவர்கள் எல்லாரும் வெலவெலத்துப் போனார்கள். சேவகர்கள் செயலற்று நின்றார்கள். ஆபத்து நெருங்கி விட்டதையுணர்ந்த நான் எழுந்து நின்று வாக்குமூலம் எழுதுவதற்காக வைத்தி ருந்த அட்டையால் ஓங்கி அவர் மண்டையில் ஒரு போடு போட்டேன். வெறியோடு பாய்ந்தவர் திடீர்

என்று கீழே விழுந்தார். விழுந்ததும் கோர்ட் சேவகர்கள் அவரைப் பிடித்துக் கொண்டார்கள். போலீஸார் வந்து அவரைக் கைது செய்து கோர்ட் அறையொன்றில் உட்கார்த்தி வைத்திருந்தார்கள்.

என்றும் நடந்திராத இந்த பயங்கரக் காட்சியைக் கண்ட வழக்கறிஞர்கள் கோர்ட்டை உடனே கலைத்து விட வேண்டும் எனறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால், நான் அதற்கிணங்காமல், விசாரணையைத் தொடர்ந்து நடத்தி முடித்துவிட்டு, கைதியின் உள்நோக்கம் என்ன என்பதையறிவதற்காக அவர் இருக்கும் இடத்துக்குப் போனேன்.

"எதற்காக நீர் இப்படி என்னை நோக்கிப் பாய்ந்தீர்?" என்று கேட்டேன்.

"இல்லீங்க. அந்த சாட்சி சொல்லுவதெல்லாம் பொய். அவன் சொல்லும் பொய்யை நீங்கள் அந்தத் தாளில் எழுதினீங்க. தாளைப் பிடுங்கிக் கிழித்தெறியணும்னுதான் வந்தேனுங்க" என்று அவர் பதில் சொன்னார்.

ஜில்லா வைத்திய அதிகாரியிடம் போலீஸார் கைதியை அனுப்பினார்கள். பத்துநாள் அவர் மன நிலையை ஆராய்ந்து விட்டு "இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. உணர்ச்சி வெறியில், மனம் தடம் புரண்டு விட்டது" என்று முடிவு கட்டி அவரை கீழ்ப் பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டார் டாக்டர். "பலே, பலே, ரொம்ப ரஸமாக இருக்கிறதே. இதை வைத்துக் கொண்டு ஒரு சிறுகதை எழுதலாம் போலிருக்கிறதே. பாருங்கள் அந்த ஆசாமிக்கு நீதிபதி மேல் கோபமில்லை. எதிரி சொல்லும் புளுகை நீதிபதி எழுதுகிறாரே. இதை விடக்கூடாது. கிழித்தெறிந்துவிட வேண்

டும் என்றல்லவா அப்படிப் பாய்ந்தான். இந்த நிகழ்ச்சியை மையமாக வைத்துக் கொண்டு ஒரு சிறுகதை எழுதலாம் போலிருக்கிறதே'' என்று சொன்னார். கல்கியின் உள்ளத்தில் அந்த நிகழ்ச்சி அப்படி அழுத்தமாகப் பதிந்துவிட்டது. சில ஆண்டுகளுக்குப் பின் அவர் எழுதிய தலையங்கத்தில் இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு ஹாஸ்ய விளக்கம் கொடுத்தார்.

ஏக காலத்தில் நான்கு மனைவிகளோடு குடித்தனம் செய்து கொண்டிருந்த குடியானவர் ஒரு வழக்கில் சாட்சிக் கூண்டேறினார். குறுக்கு விசாரணை செய்த வக்கீல் ''ஒரு மனைவியோடு காலந் தள்ளுவதே கஷ்டமாச்சே. உமக்கு எதற்கு ஐயா நாலு மனைவிகள்?'' என்று கேட்டார்.

''எங்க ஊரிலே பண்ணையாளுக்குக் கூலி சாஸ்திங்க. நாலு பெண்டாட்டியிருந்தா, பண்ணையம் கவலையில்லாமல் பார்க்கலாமுங்க'' என்று பதில் சொன்னார். இல்லறத்துக்கும் பொருளாதாரத்துக்கும் எவ்வளவு நெருக்கம் என்பதை அவருடைய வாக்குமூலம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஒருநாள் என்னுடைய கோர்ட்டில் கொலை வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. பல வழக்கறிஞர்கள் வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். நீதிபதியிருக்கும் மேடைக்கும் வட்ட மேஜைக்கும் இடையே திடீரென்று வந்து நின்றார் ஒரு கிழவி. நெற்றியிலே வெண்ணீறும், குங்குமப் பொட்டும், கழுத்திலே தாலியும், சுறுக்குண்ட உடலிலே பட்டுப் புடவையும் அணிந்திருந்த அப்பெண் நீதிபதியைப் பார்த்து நின்று கொண்டு, கைகூப்பி தன்னையே மூன்றுதரம் சுற்றிக் கொண்டிருந்தார், கோயில் சன்னதியிலே சுற்றுவதுபோல. கோர்ட்டில் உள்ள முஸ்லிம் சேவகர்கள்

அந்தக் கிழவியை வெளியே போகும்படி அதட்டிக் கொண்டிருந்தார்கள். கிழவியோ அவர்களை லட்சியம் பண்ணுவதாக இல்லை. பக்திப் பரவசத்தில் நின்று கொண்டிருந்தார். இந்த விநோதமான காட்சியைப் பார்த்த நான், "எதற்காக அம்மா, இப்படிக் கும்பிட்டுக் கொண்டு நிற்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"நான் இந்த ஊருக்குப் புதுசு. இந்தக் கோர்ட்டைப் பார்க்க வந்தேன். இதை வாங்கிக் கொள்ளுங்க" என்ற சொல்லி, தன் கையிலிருந்த வெற்றிலைப் பாக்கு, எலுமிச்சம் பழம் எல்லாவற்றையும் மேடை மீது வைத்தார். "சரி ஏற்றுக் கொண்டேன்" என்று சொன்ன பிறகுதான் அந்த அம்மாள் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார். இந்தக் காட்சியை பார்த்த என் உள்ளம் சிலிர்த்தது. "சாமானிய மக்கள் நீதிமன்றத்தை இறைவனிருக்கும் ஆலயமாக அல்லவா கருதுகிறார்கள்? அப்படியானால் நீதிபதிகள் எவ்வளவு உள்ளத் தூய்மையோடும், ஒழுக்கத்தோடும் விவேகத்தோடும் நீதியால் வந்த நெடுந் தரும நெறியிலே ஒழுக வேண்டும்?" என்பதை உணர்ந்து அஞ்சினேன்.

ஆங்கிலக் கவிஞன் மில்ட்டனுக்குத் திடீரென்று கண்கெட்டு விட்டது. கண் இழந்த சோகத்தைச் சொல்லிலே தேக்கி கவிதையாக வடித்தெடுத்தார். "இறைவனே! நீ கொடுத்த கண்ணை நீயே திருப்பி வாங்கிக் கொண்டாய். அதனால் என்ன? மிஞ்சியிருக்கும் புலன்களைக் கொண்டு நான் உன்னை வழிபடப் போகிறேன். குருடன் என்ற காரணத்தால் என் பக்தியின் மாற்று குறைந்துவிடவா போகிறது? அரசனுக்கு எத்தனையோ வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். காடும் கடலும் தாண்டி, தொலைவில் உள்ள நாட்டிலே அரசு தூதனாகப் பணி செய்கிறான் ஒருவன். இன்னொருவன் இருந்த இடத்திலேயே இருந்து, அரண்மனை வாசலில் நின்று

வாயில் காப்போனாக பணி செய்கிறான். இரண்டுவித மான சேவையையும் உகந்து ஏற்றுக் கொள்ளுகிறான் அரசன். அதைப்போலவே எனது குருட்டுப் பணியை யும் ஏற்றுக் கொள்ள வேண்டும் நீ' என்று இறைவனை நோக்கிப் பாடுகிறார் மில்ட்டன். பாடலின் கடைசி வரி யிலே அவர் சொன்னார் ''வாசலில் நின்று காத்துக் கிடப்பவனும் பணி செய்யத்தான் செய்கிறான்'' என்று **(He also serves who stands and waits)** ஆங்கில இலக்கிய நயத்தை உணர்ந்தவர்கள் இந்த வரியைச் சொல்லிச் சொல்லி உருவார்கள்.

இப்படி உருகியவர்களுள் ஒருவர் லார்ட் பர்க்கென் ஹெட் என்ற ஆங்கிலப் பிரபு. அவர் அரசியல், இலக்கி யம், சட்டம் என்ற மூன்று துறைகளிலும் புகழ் பெற்ற வர்; இங்கிலாந்து நாட்டின் உயர்நீதிமன்றங்களிலே புகழ்பெற்ற நீதிபதியாக இருந்தவர். மில்ட்டனுடைய பாடலை அவருடைய தீர்ப்பிலே எப்படி இழைக்கிறார் என்று பார்ப்போம். பர்க்கென்ஹெட் தலைமை தாங் கிய நீதிமன்றத்திலே ஒரு கொலை வழக்கு விசார ணைக்கு வந்தது. வீட்டினுள் புகுந்து ஒருவனைக் கொலை செய்துவிட்டான் குற்றவாளி. கொலை செய் யும்போது அவனுக்கு உதவியாகச் சென்றவன் வீட்டு வாசலில் நின்று கொண்டு ஒருவரும் வந்து கொலை யைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டான். கொலை முடிந்ததும் இருவரும் ஒன்றாக ஓடி மறைந்துகொண் டார்கள். சில நாள்களுக்குப் பின் இருவர் பேரிலும் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடந்தது. கொலை செய்தவனுக்கு மரண தண்டனை விதிப்பது தான் சட்டம். ஆனால், கொலைக்கு உடந்தையாயிருந்த வனுக்கு என்ன தண்டனை கொடுப்பது என்ற கேள்வி பிறந்தது. இந்தக கேள்விக்கு முதன் முதலாகப் பதில் சொன்னவர் நீதிபதி பர்க்கென்ஹெட். கொலைக்காரனுக்

கும், அவனுக்கு உடந்தையாயிருந்தவனுக்கும் ஒரேவி தமான தண்டனையைக் கொடுப்பதுதான் நியாயம் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அவருடைய தீர்ப்பின் கடைசி வாக்கியம் இலக்கியச் சுவை ததும்புவதாய், மில்ட்டனுடைய மொழியில் அமைந்திருக்கிறது (He also serves who stands and waits) "வாசலில் நின்று, காத்துக் கிடப்பவனும் பணி செய்யத்தான் செய்கிறான்" என்று முடிகிறது தீர்ப்பு.

ஆலிவர் வென்டல் ஹோம்ஸ், லேர்னட் ஹான்ட் (Learned Hand) முதலிய தலைசிறந்த அமெரிக்க நீதிபதிக ளும் இவ்வாறே இலக்கியப் புலமை படைத்தவர்களாக இருந்தார்கள். இலக்கிய இன்பத்திலே தோயும்போது, குறுகிய மனம் விரிகிறது; மனித வாழ்க்கையை பரி வோடு பார்க்கும் திறமை பெருகுகிறது; தன்னை மறந்து மற்றவர்களுடைய இதயத்தில் புகுந்து, அவர்களுடைய துன்பங்களையும், கோபதாபங்களையும் மனிதச் செய லுக்கு அடிப்படையாக இருக்கும் மூலகாரணங்களை யும் உணர்ந்து ஆராயும் வல்லமை வளர்கிறது. எனவே, பர்க்கென்ஹெட்டும், வென்டல் ஹோம் ஸும், லேர்னட் ஹான்டும் நீதித்துறையில் மாத்திர மல்ல. இலக்கியத் துறையிலும் சிறந்த வெற்றி கண்டார் கள். இலக்கியப் பயிற்சியால் பெற்ற பரிவும், கற்பனை யும், நீதித்துறையில் அவர்களுக்கு ஊட்டம் கொடுத் தது. நீதிமன்றத்திலே அவர்கள் பெற்ற அனுபவ ஞானம், அவர்களுடைய இலக்கிய எழுத்துக்கு வன் மையை ஊட்டியது; இலக்கிய விளக்கு நீதிக்கு ஒளி கொடுத்தது. நீதி விளக்கு இலக்கியத்துக்கு உள் ஒளி கொடுத்தது போல.

நீதியை நிலைநாட்டுவதற்காக, சட்டம் என்ற கருவியை மனிதன் கண்டுபிடித்தான். ஆனால், அந்தக் கருவியைப் பயன்படுத்துகிறவர்களுடைய இதயத்திலே பொறுமையும், அன்பும், கருணையும், நேர்மையும் இல்லையென்றால் நீதிக்குப் பதில் அநீதிதான் வளரும். விவாகரத்து வழக்குகளில் இந்த உண்மையைக் கண்கூடாகக் காணலாம்.

இல்லறமே நல்லறம் என்று நம் நாட்டில் அதை நெடுகிலும் போற்றி வளர்த்து வந்திருக்கிறோம். ஆனால், அந்தக் கோட்பாட்டை அழிப்பதற்கென்றே பல சக்திகள் கச்சைக் கட்டிக் கொண்டு நிற்கின்றன. தகுந்த காரணமில்லாமல் மனைவிமார் கணவர்கள் பேரிலும், கணவர்கள் மனைவியர் பேரிலும் இல்லறப் பூட்டை உடைத்து விடுதலை கொடுக்க வேண்டும் என்று நாள்தோறும் வழக்குத் தொடரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்காக வழக்கு நடத்தும் வழக்கறிஞர்களும், இல்லறத்தின் தூய்மையை மறந்து வறட்டுச் சட்டம் பேசி சண்டப் பிரசண்டம் செய்கிறார்கள். இந்த நிலைமையில் பொறுமையோடும், கருணையோடும், மனிதப் பிரச்சனைகளைத் தீர்த்துவிட வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களைச் சார்ந்து.

ஓர் அச்சகத்தில் வேலையில் இருந்தான் கணவன். இரவெல்லாம் விழித்திருந்து அச்சு கோக்க வேண்டும். காலை ஆறு மணிக்கு வீட்டிற்கு வந்து பகலெல்லாம் தூக்கத்தில் கழிப்பான். வீட்டிலிருக்கும் குழந்தைகளோ இரவு முழுவதும் உறங்கிவிட்டு பகலெல்லாம் கொக்கரித்துக் கூத்தடிப்பார்கள். இந்த இரைச்சலைத் தாங்க முடியாமல் கணவன் மனைவியைப் பார்த்து ''நீயும்,

உன் குழந்தைகளும் எங்கேயாவது தொலைந்து போங்கள்'' என்று சொல்லி சடைத்துக் கொண்டான். இதைக் கேட்ட மனைவிக்கு மனம் கசந்துவிட்டது. ''நாளெல்லாம் இந்தக் குடும்பத்துக்கு உழைத்தும் எனக்கு கிடைக்கிற பரிசு இதுதானா'' என்று சொல்லிவிட்டு குழந்தைகளோடு தாய் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாள். பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்க முயற்சி செய்வார் ஒருவரும் இல்லை. அண்டை வீட்டுக்காரர்களோ, இருவரையும் கிள்ளிவிட்டு வேடிக்கைப் பார்த்தார்கள். வீம்பு வளர்ந்தது. சண்டை சல்லியம் பெருகிக் கொண்டே போயிற்று. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் தம்பதியர் இருவரும் ஏழாண்டுகள் பிரிந்திருந்தார்கள். கடைசியாக விவாகரத்து செய்ய வேண்டும் என்று கணவன் மேல் மனைவி வழக்குத் தொடர்ந்தாள். வழக்கு விசாரணைக்கு வந்ததும், மும்முரமான வாதப் பிரதிவாதங்கள் தொடங்கின. இந்த வழக்கை ராஜி செய்வது நலம் என்று தம்பதியிடம் சொன்னேன். 'ஐயோ, இந்தப் பாவியோடு வாழமாட்டேன். என்னைக் கொலை செய்து விடுவான்'' என்று சொன்னாள் மனைவி. ''இது பெண் இல்லிங்க; பிலிங்க (புலி)'' என்று சொன்னான் புருஷன். ''இந்தப் புலியோடு ஒரு வாரம் வாழ்ந்து பாரும் ஐயா'' என்று சொல்லிக் கட்டாயப்படுத்தி, இருவரையும் ஒரே வண்டியில் ஏற்றியனுப்பிவிட்டு, வழக்கை ஒரு வாரம் தள்ளிப் போட்டேன். அடுத்த வாரம் வாதி, பிரதிவாதிகளைக் கூப்பிட்டதும் இருவரும் மணக்கோலத்தில் உல்லாசமாக வந்தார்கள். ''நாங்கள் இனிமேல் ஒண்ணா இருக்கப் போறோம். இந்த வியாஜ்ஜியத்தை மேல் நடத்த வேண்டாம்'' என்று இருவரும் சேர்ந்து சொன்னார்கள். எப்படியோ

காரணமில்லாமல் மனக்கசப்பு ஏற்பட்டது. ஆகவே, ஏழு ஆண்டுகள் பிரிந்திருந்தார்கள். எப்படியோ பிரிந்த வர்கள் கூடினார்கள். வாழ்க்கையில் அவர்களுக்கு இனிப்புத் தட்டிவிட்டது. இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது நீதிபதியின் கருணை.

மனிதப் புதிரை அறிந்து கொள்ள விரும்பும் எழுத் தாளர்களுக்கு நீதிமன்றம் ஓர் அரிய பயிற்சி சாலை. நீதிமன்றத்தினுள்ளிருந்து வாழ்க்கையைப் பார்க்கும் போது எழுத்தாளர்களுக்கு ஒரு பெரிய வசதி கிடைக்கி றது. நாற்பது ஆண்டுகளாக நடந்த வரலாற்றை வடி கட்டி நான்கு நாட்களில் வழக்கறிஞர்கள் காட்டிவிடுகி றார்கள். வேண்டாத நிகழ்ச்சிகளை ஒதுக்கிவிட்டு, சாராம்சமான செய்திகளை மாத்திரம் பாத்திரங்கள் மூல மும், சாட்சிகள் மூலமும் எடுத்து விளக்குகிறார்கள். அதன் பயனாக காரிய காரணத் தொடர்புகள் எளிதில் நமக்கு விளங்கி விடுகின்றன. நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து பெறக்கூடிய அனுபவத்தை நான்கே நாட்க ளில் பெற்று விடுகிறோம்.

எழுத்துக்கும் (நீதிமன்றத்) தொழிலுக்கும் இருக்கும் உறவு அவ்வளவு நெருக்கமானது.

3. சாட்சிக் கூண்டு

ஆங்கிலேயேருடைய ஆதிக்கம் பரவுவதற்கு முன்னால் நம் நாட்டு வழக்கு மன்றங்களிலே சாட்சியக் கட்டுப்பாடு அதிகமாயிருந்ததாகத் தெரியவில்லை. ஆல மரத்தடியிலே அல்லது அம்மன் கோயிலிலே பஞ்சாயத்து நடக்கும். வாதி பிரதிவாதிகள் வழக்கு, எதிர் வழக்கு சொல்லி முடிப்பதற்கு முன் தர்க்கத்துக்குப் புறம்பான பல தர்க்கங்களைக் கிளப்புவார்கள். பஞ்சாயத்தார்களும் சாவதானமாக நாள்கணக்கிலே, ஆற அமர இருந்து கேட்டு முடிவுக்கு வருவார்கள். ஒரு மாதத்தில் இத்தனை தீர்ப்புகளாவது சொல்லித் தீர்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாதபடியால், பிரச்சனைக்குப் புறம்பான பலவிதமான விவகாரங்களையும் இழுத்துப் போட்டுக் கொண்டு உண்மையைக் கஷ்டப்பட்டு அறிந்து நீதி செலுத்துவதற்கு வசதிகள் இருந்தன. அதோடு சாட்சி சொல்லுகிறவர்களும், நீதிபதிகளைப் போலவே உள்ளூர்க்காரர்கள். ஆகவே, ஊர்க்கூட்டத்தில் பொய் சொல்லுவதற்கு அஞ்சுவார்கள். வாக்கு நாணயமில்லாத பொய்யனுக்கு கிராம வாழ்க்கையில் எத்தனையோ இடைஞ்சல் ஏற்படுவது சகஜம். அப்படியில்லாமல் 30 மைலுக்கு அப்பாலுள்ள நீதிமன்றத்திலே, முன்பின் தெரியாத நீதிபதியின் முன்னிலையில் சாட்சிப் பெட்டி ஏறி பொய் சொல்வதினால் அவ்வளவு தோஷம் ஏற்படாது. அதோடு குறுக்கு விசாரணை செய்கிற வக்கீலைப் பார்த்தவுடனே சாட்சியின்

மனசிலே விரோத பாவம் ஏற்பட்டு விடுகிறது. தன்னைப் பொய்யனாக்குவதற்காகவே இவர் கேள்வி கேட்கிறார் என்ற நினைப்பு வந்தவுடனேயே, உண்மையை மறைக்க வேண்டும் என்ற முனைப்பும், தன் திறமையினால் வக்கீலை மடக்க வேண்டும் என்ற ஆத்திரமும் பிறக்கிறது. இந்த ஆத்திரத்திலிருந்து பிறக்கிற சாட்சியம் உண்மைக்கு வெகு தூரத்தில் தான் நிற்கும். ஊர்க் கூட்டத்திலோ, இந்த மனநிலை ஏற்படுவதில்லை. ஆகவே, குடிவழக்கிலே பொய்யைச் சாதிப்பது, கஷ்ட சாத்தியமான காரியம். மிஞ்சிப் போனால், பிரமாணம் கோருவது என்ற ஓர் அருமையான வழக்கம் இருக்கிறது. சுடலை மாடசாமி பீடத்தின் முன்னிருந்தோ, அல்லது மாரியாத்தாள் கோயிலிலோ, மஞ்சள் உடையுடுத்தி நின்று, கழுத்திலே அரளி மாலையணிந்து, தான் சொல்லுவது உண்மையென்று சொல்லி எரிகிற கற்பூரத்தை அணைத்துவிட வேண்டும். இது ரொம்பக் கடுமையான சோதனை. பொய்ப் பிரமாணம் ஒருவன் செய்துவிட்டால், தெய்வம் அவனை நின்று கேட்கும், ஏழேழு ஜன்மத்துக்கும் அவனுக்கு உய்வில்லையென்ற நம்பிக்கை நம்மவர்களிடையே ஊன்றி வளர்ந்திருக்கிறது. இந்த நிலைமையிலே பிரமாணம் கோரினவுடனேயே உண்மை துலங்கிவிடும்.

மேற்சொன்ன வசதிகள் எல்லாம் கிராமப் பஞ்சாயத்து முறையிலிருந்தபோதிலும், சமுதாயக் கட்டுப்பாடு நெகிழ்ச்சியடைந்து வருகிற தற்காலத்தில், அந்த வசதிகளும் குறைந்து வருகின்றன. ஊர்க் கட்சிகள் பலத்து வருவதால், கட்டுப்பாடும் நாணயமும் குறைந்து விட்டன. போட்டி மனப்பான்மை பெருகப் பெருக, நீதிக்கும் சத்தியத்திற்கும் நாம் வைத்திருக்கும் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது. ஆகவே, இந்த நிலைமையில் கிராமப் பஞ்சாயத்து முறையைக் கைக்

கொள்ள வேண்டும் என்ற கூச்சல் அர்த்தமற்றது. அபாயகரமானது. பஞ்சாயத்துக் கோர்ட்டார்கள் விசாரணையில்லாமல் தீர்ப்புச் சொல்லுவதும், எதிரிகளை அடக்கும் யந்திரமாக பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை பாவித்து வருவதும், நாம் அறிந்ததே. ஓரவஞ்சகம் இல்லாமல் நீதிபரிபாலனம் நடக்க வேண்டுமானால், அரசியலாரால் நிறுவப்பட்ட நீதிமன்றங்கள் மூலம்தான் முடியும் என்று ஏற்பட்டு விட்டது. நீதிபதிக்கு நுட்பமான சட்ட ஞானம் இருந்தால் மாத்திரம் போதாது. மனிதப் பண்புகள், மக்கள செயலுக்கு அடிப்படையாயிருக்கும் உணர்ச்சிகள், நோக்கங்கள், அவற்றுக்கிடையேயிருக்கும் முரண்பாடுகள், காரண காரியத் தொடர்புகள், நாடோடிப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய ஆழ்ந்த அனுபவ ஞானம் நீதிபதிக்கு அத்தியாவசியமானது. வெயிலும், நிழலும் போல, மெய்யும் பொய்யும் மாறி மாறிக் கலந்து வருகிற வாழ்க்கையிலிருந்து பொய்யை விலக்கி மெய்யைக் கிரகிக்கும் புத்தி நுட்பமும் நீதிபதிக்கு இன்றியமையாதது. இத்தனை அபூர்வ குணங்களும் ஒரு மனிதனிடத்தில் குடிகொண்டிருப்பது அருமை. ஆனால், சட்ட திட்டங்களின் உதவியால், ஒரு நீதிபதி உண்மையை ஓரளவு கண்டுபிடிக்க முடிகிறது. சட்ட திட்டங்கள் ஒரு மனிதனால் இயற்றப்பட்டவையல்ல. பல நூற்றாண்டுகளாக, பல்லாயிரக்கணக்கான வழக்குகளில் ஆங்கில நீதிபதிகள் எத்தனையோ பிரச்சனைகளை, சரியாகவோ தப்பாகவோ, தீர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய தீர்ப்புகளை ஆராய்ச்சி செய்து, அவர்களுடைய அனுபவத்திலிருந்து பெற்ற உண்மைகளை அஸ்திரமாகக் கொண்டு தொடுக்கப்பட்டதே சாட்சியத்தைப் பற்றிய நமது சட்டம்.

'சாட்சியத்தில் எதைத் தள்ளுவது? எதை ஒப்புக் கொள்வது? எதற்கு மதிப்புக் கொடுப்பது? எதை அலட்சியம் செய்வது?' என்ற கேள்விகளுக்கு ரஸமான விடைகளை நமது சட்டத்திலும், நீதிமன்றத் தீர்ப்புகளிலும் காணலாம். சட்ட ஞானமில்லாத சாமானிய மக்களும் உணரும் முறையிலே சட்டப் பிரச்சனைகளை ஆராய்ச்சி செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கொலை வழக்கு நடப்பதாக வைத்துக் கொள்வோம். கூண்டிலே நிற்கிற எதிரிதான் கொலை செய்தவன் என்று எப்படி ருஜு செய்வது? கொலைக் குற்றத்தை நிலைநாட்டக் கூடிய சான்று எப்படியிருக்க வேண்டும்? பஞ்சேந்திரியங்களின் மூலம் நேர்முகமாக அறிகிற சாட்சியமே சிரேஷ்டமானது. ஆனால், கொலை நடந்தபோது நீதிபதி நேர்முகமாகப் பார்க்கவில்லை. ஆகவே, நேரில் பார்த்ததாகச் சொல்லும் மற்றவர்களுடைய வாக்கு மூலத்தையே ஆதாரமாகக் கொண்டு நீதிபதி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த சாட்சிகளுடைய வாக்குமூலம் உண்மையா, பொய்யா என்பதைக் குறுக்கு விசாரணை மூலம் சோதிக்க வேண்டும். பிரமாணத்தின் பேரில் சாட்சி வாக்குமூலம் கொடுப்பதால் அவர் சொல்வதில் ஓரளவு உண்மையிருக்கலாம் என்று எதிர்பார்க்க இடமிருக்கிறது. ஆனால், சாட்சியை நம்புவதற்கு முன்னால் மூன்று அம்சங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். (1) கொலை நடந்த இடத்தில் சாட்சி இருந்திருக்கலாம். ஆனால், கவனிக்காமல் இருந்திருக்கலாம். சம்பவம் நடக்கும்போது அவர் கவனித்தாரா என்பதுதான் முக்கியம். (2) கவனித்ததை மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருக்கிறாரா? (3) கவனித்ததை ஞாபகப்படுத்தி, நடந்ததை அப்படியே வார்த்தைகள் மூலம் விவரிக்கிறாரா? இந்த மூன்று அம்சங்களும் இருந்தால்தான் அவர் வாக்குமூலத்துக்கு சாட்சியம்

என்ற அந்தஸ்தைக் கொடுக்கலாம். இப்படிக் கொடுக் கப்பட்ட சாட்சியத்திலும் பல குறைபாடுகள் உண்டு. 1. வர்க்கம், 2. வயது, 3. பால், 4. சித்தப்பிரமை, 5. ஒழுக்கம், 6. பண்பு, 7. உணர்ச்சி, 8. அனுபவம் இவற்றின் தன்மையைப் பொறுத்திருக்கிறது, ஒரு மனி தன் கொடுக்கிற சாட்சியத்தின் துல்லியமும், தரமும்.

1. வர்க்கம்

ஊர் ஊராகத் திரிந்து, நிலையில்லாத வாழ்க்கை நடத்துகிற படிப்பில்லாத வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், நிலைத்த நாகரிகமும், படிப்பும் உடைய வர்க்கத்தாரைக் காட்டிலும், கவனிப்பு அதிகம் உடையவர்களாகவும், பஞ்சேந்திரியங்கள் மூலம் பெறக்கூடிய உணர்ச்சிகள் அழுத்தமாயுடையவராகவும் இருக்கிறார்கள். உதாரண மாக, நரிக்குறத்திகள், நரிக்குறவர்களுக்கு காட்சி, ஒலி, வாசனை, ருசி, உணர்வு நம்மைக் காட்டிலும் அதிகம். அதோடு ஞாபக சக்தியும் அதிகம். ஆனால், உணர்ந் ததை பாஷை மூலம் சொல்லுகிற சக்தி அவர்களுக்கு நம்மைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறதா என்று தெரிய வில்லை. உண்மை பேசுவதில், வர்க்கத்துக்கு வர்க்கம் எவ்வளவோ பேசதமிருக்கிறது என்று சொல்லலாம். 19ஆவது நூற்றாண்டுத் தீர்ப்புகளைப் பார்வையிட் டால் ப்ரிவி கௌன்ஸில் **(Privy Council)** அபிப்பிராயத் திலே, இந்தியர்கள் எல்லாருமே அண்டப் புளுகர்கள் என்றும், சிருஷ்ணை செய்கிறவர்கள் என்றும் தோன் றும். **(4M. 1.A. 106** ரங்கம்மா **Vs.** அச்சம்மா என்ற தீர்ப்பைப் பார்க்கவும்). ஆனால், இந்த அபிப்பிராயங் கள் எல்லாம், இந்தியாவின் பண்பாட்டையறியாத அந் நியர்கள், ஆராய்ச்சி செய்யாமல் வெறுப்போடு சொன்ன அபிப்பிராயங்கள்தாம். மேற்சொன்ன அபிப் பிராயத்தைப் பற்றி நீதிபதி பீல்டு **(Field)** என்பவர் கீழ்க்கண்டவாறு சொல்கிறார்: ''இந்தியர்கள் எல்லாரும்

பொய்யர்கள் என்று சொல்வது அகௌரவமான அபத்தம். ஆனால், இந்திய சாட்சிகள் எல்லாரும் ஆங்கில சாட்சிகளைப்போல சத்தியவந்தர்கள் என்று சொல்லுவதும் அபத்தம்''. எம்.டி. சாமர்ஸ் **(M.D. Chal mers)** என்ற மற்றொரு நீதிபதி சொல்கிறார்: ''இங்கிலாந்திலே ஏழைகளிடத்தில் பொய் எவ்வளவு குடி கொண்டிருக்கிறது என்று பலருக்குத் தெரிவதில்லை. நான் இங்கிலாந்து, ஜிப்ரால்டர், இந்தியா இந்த மூன்று நாடுகளிலும் நீதிபதியாயிருந்திருக்கிறேன். ஆகவே, ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு எனக்கு உரிமையுண்டு. வாஸ்தவந்தான். இந்தியாவிலே பொய் அதிகமாயிருக்கிறது. ஆனால், அது நுட்பமான பொய்யல்ல. ஒரே விதமானது. ஆனால், இங்கிலாந்திலே பொய்யை நுட்பமாகச் சொல்லுகிறார்கள். ஆகையினாலே, அங்கே உண்மையைக் கண்டுபிடிப்பது எவ்வளவோ கஷ்டம். இந்தியாவில் லகுவாய்க் கண்டுபிடித்து விடலாம்.''

ஆகவே, ஒரு சாட்சியின் உண்மையை அவன் வர்க்கத்தை மாத்திரமே வைத்துத் தீர்மானித்து விடலாம் என்று சொல்வது விதண்டாவாதம் என்றும் ஆராய்ச்சி செய்து முடிவு கட்டிய உண்மையல்லவென்றும் ஏற்படுகிறது.

2. வயது

வயோதிகத்தில் ஞாபக சக்தி குன்றி விடுவதால், வயோதிகர்களுடைய சாட்சியத்தை ஜாக்கிரதையோடு பரிசீலனை செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு சில விஷயங்களில் அபார கவனமும், சில விஷயங்களில் கவனமின்மையும் இருக்கிறது. அவர்களுடைய ஞாபக சக்தியும், முறையே, பளிச்சென்றும் குன்றியுமிருக்கிறது. கவனித்ததை ஞாபகப்படுத்திச் சொல்லும்போது கண், மூக்கு வைத்து ஜிகினா வேலை செய்து, நடவாத

தையும் கற்பனை செய்து சொல்லுகிற வழக்கம் குழந்தைகளிடம் உண்டு. ஆனால், ஒரு வகையிலே, 7 வயதுக்குமேல் 10 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளின் சாட்சியம் மதிப்புயர்ந்தது. விருப்பு, வெறுப்பு, சூது, வாது, டம்பம் இந்தக் கறைகளையெல்லாம் இன்னும் அவர்கள் கற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அவர்களுடைய சாட்சியம் புனிதமானது. ஆனால், ஒன்றை மறந்து விடக்கூடாது. வார்த்தையை நாம் உபயோகிப்பதுபோல் குழந்தைகள் உபயோகிப்பதில்லை. காலம், தூரம், அழகு, பெரிது, சிறிது என்ற வார்த்தைகளுக்கு குழந்தைகள் மனதிலிருக்கும் அர்த்தம் வேறு. நம் மனதிலிருப்பது வேறு. இன்னொரு விபரீதம். வார்த்தைகளுக்கு மனசிலே சித்திரத்தையெழுப்பும் சக்தியுண்டு. பாஷையோடு பழகப் பழக இந்த சக்தி குறைகிறது. நமக்கெல்லாம் வார்த்தை வெறும் வார்த்தையாகவே மனதில் பதிந்து விடுகிறது. குழந்தைகளுக்கு சித்திரம் மாத்திரம் பதிகிறது. கதை கேட்கும்போது, கண்முன் சம்பவம் நடப்பதுபோல் குழந்தைகளுக்குத் தோன்றும். கொலை நடக்கும்போது உடன் இல்லாவிட்டாலும், இருந்ததுபோலச் சொல்லிக் கொடுத்துவிட்டால் சம்பவத்தை மனதில் சித்திர ரூபமாகக் கண்டு, தாம் கூட இருந்ததாக நம்பி அதற்குரிய பாவத்தோடும், வேகத்தோடும் குழந்தைகள் சாட்சி சொல்லி விடுவார்கள். ஆகவே, அவர்களுடைய வாக்குமூலத்தை ஆராய்ச்சியில்லாமல் ஒப்புக் கொள்வது அபாயம்.

3. பால்

ஆண்களுடைய சாட்சியத்தின் தனிப்பண்புகளைப் பற்றி பெண்கள் ஆராய்ச்சி செய்து அபிப்பிராயம் எழுதினதாகத் தெரியவில்லை. ஆனால், ஆண்களில் அநேகர் பெண்களுடைய சாட்சியத்தைப் பற்றி தங்கள் துணிபுகளை வெளியிட்டிருக்கிறார்கள். **Prof.** விக்மோர்

என்பவர் கீழ்க்கண்டவாறு "Principles of Judicial Proof" என்ற நூலில் சொல்லுகிறார்: "கவனம் செலுத்துவதில், ஆண்களும் பெண்களும் அநேகமாக சம யுக்தியுடைய வர்கள்தான். ஆனால், ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத் திப் பார்க்கும்போது, பெண்கள் தாங்கள் கற்பனை செய்ததையும், விரும்பியதையும், நேரில் கண்ட சம்ப வத்தோடு கலந்து விடுகிறார்கள். நடந்ததை எடுத்துச் சொல்வதில், பெண்கள் ஆண்களைக் காட்டிலும் வேகத் தோடும், திட்டமாகவும் சொல்லுவார்கள். ஆனால், ஒளிப்பு மறைப்பில்லாமல் சாட்சியம் சொல்லுவதில் பெண்களைக் காட்டிலும் ஆண்கள் மேல்."

4. சித்தப்பிரமை

சித்தப்பிரமையில் எத்தனையோ விதமுண்டு. காணாத காட்சிகளையும், கேளாத ஒலிகளையும் கண்டு கேட்டதாக மனது பாவனை செய்கிறது சித்தப்பிரமை ஏற்பட்ட காரணத்தால். ஆனால், பைத்தியம் பிடித்தவர் களுக்கும் புத்தித் தெளிவு, விட்டு விட்டு ஏற்படுவதும் சகஜம். தெளிவு ஏற்பட்ட காலத்தில் கவனத்தோடு சம்பவத்தைக் கண்டு, பின்னால் ஞாபகப்படுத்தி முறை யோடு சாட்சியம் சொல்லும் சக்தி அவர்களுக்கு இல்லை யென்று அவர்கள் வாக்குமூலத்தை நிராகரித்துவிடவும் முடியாது.

5. ஒழுக்கம்

ஒரு மனிதனுடைய ஒழுக்கத்தைக் கொண்டு அவ னுடைய சாட்சியத்தை நிதானிக்கலாம் என்பது ஓரளவு தான் உண்மை. அயோக்கியன் என்று கருதப்படுகிற வன் எப்பொழுதுமே பொய் சொல்லுவான் என்றும், யோக்கியன் எப்பொழுதும் உண்மையே சொல்லு வான் என்றும் நிச்சயம் செய்துவிட முடியாது. சத்தியத்

திற்கும், யோக்யதைக்கும் உள்ள சொந்தத்தைப் பற்றி மனோதத்துவ ஆசிரியர்கள் இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டுதானிருக்கிறார்கள்.

6. மனப்பண்பு

கண்ணாடி வழியாகச் செல்லும் சூரிய ஒளி கண்ணாடியின் நிறத்தையேற்று வெளிவருவதுபோல, பார்த்த விஷயங்கள், கேட்ட விஷயங்களெல்லாம் மனசின் சாயத்தில் தோய்ந்து அதன் வர்ணத்தையேற்று வெளிவருவது இயற்கை. சாட்சியின் பண்பையறியாமல், சாட்சியத்தை எழுத்து ரூபத்தில் மாத்திரம் பார்க்கும் அப்பீல் நீதிபதிக்கு சாட்சியின் முழுப்பண்பையும் அறிந்து நிதானிக்க முடியாது. ஆகையால்தான், விசாரணை செய்யும் நீதிபதியின் முடிவுகளை மாற்றுவதற்கு மேல் நீதிபதிகள் தயங்குவார்கள்.

7. உணர்ச்சி

உணர்ச்சி வசப்பட்டிருக்கும் மனிதனுடைய கவனம், ஞாபகம், எடுத்துச் சொல்லும் சக்தி எல்லாமே அவனுடைய உணர்ச்சியினால் பாதிக்கப்படுகின்றன. விருப்பு, வெறுப்பில்லாமல் ஒரு காட்சியைப் பார்ப்பவனுக்கு உள்ளதை உள்ளபடி கவனிக்கவும், காட்சியை மனசில் வாங்கி ஞாபகத்தில் இருத்திக் கொள்ளவும், பின்னால் ஞாபகத்திலிருந்து காட்சியை வருணிக்கவும் லகுவாயிருக்கும். ஆனால், கொலை செய்கிறவனிடத்திலோ அல்லது கொலையுண்டவனிடத்திலோ வெறுப்புடையவன் கொலைக் காட்சியைப் பார்க்கும்போது, அவனுடைய வெறுப்பு ஊடே நின்று அவன் கவனத்தை அறியாமலேயே பாதித்து அவனுக்கு ஒரு கோணல் பார்வையைக் கொடுத்து விடுகிறது. உணர்ச்சி எப்பேர்ப்பட்டதாயிருந்தாலும் அது மனித மனசின்

நிதானத்தைக் கெடுத்து மயக்கத்தை உண்டாக்குகிறது. மருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேயாகத் தோன்றும். பய பீதியோடு ஒரு சம்பவத்தைப் பார்க்கிறவனுக்கு அந்த பயத்தை ஒட்டிய அம்சங்கள் மாத்திரம் தான் புலனாகும். நடக்காத விஷயங்களும் நடந்ததாகத் தோற்றம் அளிக்கும். கயிற்றைக் கண்டு பாம்பாக மதித்து மயங்கிப் பதறுவது மாயையின் செயல். புலன் உணர்ச்சியற்ற நிலையில்தான் இந்த மாயையிலிருந்து மனிதன் விடுதலை அடைகிறான். சாட்சி, சம்பவத்தைக் கவனிக்கும்போது எந்த மனோநிலையிலிருந்தான் என்பதை எப்படி அறிவது? சம்பவம் நடந்த சமயத்தில் அவனுடைய சூழல் எப்படி இருந்தது, அவனுடைய நடத்தை எவ்வாறிருந்தது என்பதைத் துருவிப் பார்த்தால் அவனது மனநிலையை யூகித்தறியலாம். வழக்கிலே சாட்சிக்கு இருக்கும் அக்கறை வாதி பிரதிவாதிகளிடத்தில் அவனுக்கிருக்கும் தொடர்பு ஆகியவை மூலம் அவனுடைய உள்ளத்தின் ரீதியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

8. அனுபவம்

நீண்டகாலப் பயிற்சியின் மூலம் கிட்டுகிற திறமையைத் தான் அனுபவஞானம் என்று சொல்கிறோம். இந்தத் திறமையை இரண்டு விதமாகப் பெறலாம். முதலாவது, வாழ்க்கைத் துறையிலே, தன்னையறியாமலே அது வந்து சேருகிறது. உதாரணமாக 30 வருஷம் வழக்கிடுவதிலே நல்ல அனுபவமுள்ள வக்கீலின் பிரசங்கத்திலே, விஷயத்தைத் தொடர்போடும், நுட்பத்தோடும் சொல்லும் திறமையைக் காணலாம். இரண்டாவது, விஞ்ஞானிகளைப்போல, வேண்டுமென்றே பழகிப் பெற்றுக் கொண்ட திறமையாகவும் இருக்கலாம். ஹிரோஷிமாவில் அணுகுண்டு வெடித்த காட்சியை வர்ணிக்கச் சொன்னால், அணுகுண்டுக்குத் தப்பிப்

பிழைத்த ஒரு ஜப்பானியனுடைய வர்ணனைக்கும், ஆகாய விமானத்தில் இருந்து பல கருவிகளை வைத்துக் கொண்டு காட்சியைப் பரீட்சை செய்த அமெரிக்க விஞ்ஞானியின் வர்ணனைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்குமல்லவா? என்னுடைய தகப்பனார் போலீஸ் இன்ஸ்பெக்டராயிருந்தார்கள். சந்தேகப் பேர் வழி எவனைக் கண்டாலும் அவன் உடம்பில் அணிந்திருக்கும் துண்டை மோந்து பார்த்து மோப்பத்தின் மூலம் இவன் இந்த சாதியைச் சேர்ந்தவன் என்று கண்டுபிடித்து விடுவார்கள். இவ்வாறு, அனுபவத்தாலும் பயிற்சியாலும் திறமை பெற்ற சாட்சிகளிடத்திலேயும் ஒரு பெருங் குறையுண்டு. அவர்கள் திறந்த மனதையுடையவர்களாயிருக்க மாட்டார்கள். விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து மாற்ற முடியாத முடிவு கட்டி விடுவார்கள். தாங்கள் சமைத்த சித்தாந்தத்தை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு முரண்டு பிடிப்பார்கள். ஆனால், மொத்தத்தில் அவர்களுடைய சாட்சியம் மதிப்புக் குறியது.

சாட்சி சொல்லுகிறவன் ஹரிச்சந்திரனாகவே இருந்தபோதிலும், மானிடனாய்ப் பிறந்த குற்றத்தால், அவனுடைய சாட்சியமும் மேற்சொன்ன எட்டு குறைகளால் பாதிக்கப்படுகிறது. அந்த மட்டுக்கும் அவனுடைய சாட்சியத்தின் உண்மை திரிந்துதான் நிற்கிறது. ஆகவேதான் மேற்படி குணங்களைப் பற்றி சவிஸ்தாரமாக ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மனித அறிவு முழுவதுமே, ஐம்புலன்களை அடிப்படையாய்க் கொண்டிருப்பதால், ஒவ்வொரு புலனும் உண்மையோடு உழைத்து, வெளியுலகத்தைப் பற்றிய தோற்றங்களை நமக்குச் சரிவர உணர்த்துகிறதா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். நீதிபரிபாலனம் முழுவதுமே, பஞ்சேந்திரியங்களை நம்பி நடக்கிற காரியந்

தான். நமது புலன்கள், நம்பிக்கை, மோசம் செய்யமா மல் இயங்குகின்றனவா என்ற கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொள்ள வேண்டும்.

கண்

ஐம்புலன்களில், மிகவும் கண்ணியத்தோடு நடந்து கொள்வது கண்தான். ஆகவே, நீதி ஸ்தலங்களில் கண் கண்ட சாட்சியத்திற்கே கௌரவம் அதிகம். "கண்ட னன் கற்பினுக்கனியைக் கண்களால்" என்று சொல்லி அனுமான் நம்பிக்கையிழந்த ராமனுக்கு நம்பிக்கை ஊட்டுகிறான். கண்ணோடு காதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, காதால் கேட்டதைக் காட்டிலும் கண்ணால் கண்டதே நம்பத்தக்கது என்று தெரியும். வார்த்தைகளா லும், வர்ணனையாலும், ஒரு கண் வெட்டின் மூலம் கண்டு அறிந்துவிடலாம். கண்ணுக்கு இவ்வளவு மகிமை இருந்த போதிலும்கூட, அதைப்போல துரோகம் செய் கிற புலன் வேறு கிடையாது. இல்லாததை இருப்பதாக வும் (உருவெளித் தோற்றம்) ஒன்றை மற்றொன்றாக வும் (திரிபுக் காட்சி) அது காட்டிவிடும்.

சில காட்சிகளை நம் கண் பார்த்துக் கொண்டுதானி ருக்கும். ஆனால், நம் மனசு வேறு வேலையில் ஈடுபட் டிருந்தால் காட்சி மனசிலேயே போய்த் தைப்பதில்லை. பார்த்து சில நிமிஷங்கள் கழித்துத்தான் பார்த்த காட்சி மூளையில் போய்ப்படும். அப்பொழுதுதான் 'அதைப் பார்த்தோமே' என்று தோன்றும். இதை **'Retrospective Illumination of Perception'** என்று ஆங்கிலத்தில் சொல்லுவார் கள். இந்த மானசீக சேஷ்டையின் முக்கியத்தை வழக்கு விசாரணையில் அறியலாம்.

இங்கிலாந்திலே ஒரு வழக்கு நடந்தது. வண்டிக்கா ரன் ஒருவன் குழந்தை மேல் வண்டியேற்றிக் கொன்று விட்டான். பட்டாளத்தில் வேலை பார்த்த ஒரு கிழவர்

வீட்டு ஜன்னல் வழியாக இந்த சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். கண் தெருவைப் பார்த்து விழித்துக் கொண்டிருந்தாலும், பல வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு யுத்தத்தைப் பற்றி மனசு சிந்தித்துக் கொண்டிருந்தது. நசுக்குண்ட குழந்தையின் கோர ஒலி திடீர் என்று கேட்டதும் திடுக்கிட்டு அவர் மனசும் விழித்துக் கொண்டது. உடனே, முன்னால் நடந்ததை உண்மையிலேயே பார்க்க ஆரம்பித்தார். வண்டியை வண்டிக்காரன் திருப்பியதும், குதிரை இடக்குப் பண்ணி குழந்தை மேல் குதித்ததும், அதற்குப் பின்னால் குழந்தை நசுக்குண்டதும் இவ்வளவும் அவர் மனசிலே அந்த ஒலியைக் கேட்ட பிறகுதான் ஒன்றன்பின் ஒன்றாகக் காட்சியளித்தன. வாக்குமூலம் கொடுக்கும்போது அவர் சொன்னார்: ''சம்பவத்தை முதலிலிருந்து கடைசி வரையில் பார்க்கத் தான் செய்தேன்; ஆனால், குழந்தையின் கூக்குரல் கேட்கும்வரை, பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற விஷயத்தை நான் அறியவில்லை''. ஆகவே, கண் தனக்குரிய வேலையைச் செவ்வையாகச் செய்தாலும், மனசு வேறு காரியங்களில் ஈடுபட்டிருந்தால் கண்ணிருந்தாலும் பயனில்லை, முகத்திரண்டு புண்ணிருப்பது போல்தான்.

செவி

இரண்டு பேர் ஒரே ஒலியையோ, வார்த்தையையோ சமதீட்சண்யத்தோடு கேட்பதில்லை. கேட்கும் சக்தியிலே, மனிதனுக்கு மனிதன் வித்தியாசமிருக்கிறது. இந்த உண்மையை மான நஷ்ட வழக்குகள் மூலம் தெளிவாகத் தெரியலாம். பிரதிவாதி வாதியை மானபங்கமாகப் பேசினார் என்று பத்து சாட்சிகள் வாக்குமூலம் கொடுப்பார்கள். பிரதிவாதி பிரயோகம் செய்த வார்த்தையைச் சொல்லும்போது பத்தும் விதமாகத்தான் சொல்லுவார்கள். ''மட்டி, மடையன், மூட்டாள்'' என்ற வார்த்

தைகளில் ஒன்றுக்கொன்றை சொல்வார்கள். ''அயோக் கியன், ராஸ்கல், படுபாவி'' என்ற வார்த்தைகளில் மாறாட்டமிருக்கும். ஆனால், ''அயோக்கியன்' என்ற வார்த்தைக்கு பதில் ''மூட்டாள்'' என்ற வார்த்தையைச் சொல்ல மாட்டார்கள். ஏன்? யோக்கியதையைப் பழித்தோ அல்லது அறிவைப் பழித்தோ பேசினது ஞாபகத்திலிருக்கும். அர்த்தத்தை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, அர்த்தத்தைத் தெரிவிக்கிற ஏதாவது ஒரு வார்த்தையைக் கேட்டதாகச் சொல்லுவார்கள். இதற்குக் காரணம், நாம் சாதாரணமாகக் கேட்பது, வார்த்தையல்ல, அர்த்தத்தைத்தான். ஆகவே, அர்த் தத்தை மனதில் வைத்துக் கொண்டு வார்த்தையை நழுவ விட்டு விடுகிறோம். சாட்சி சொல்லும்போது ஒவ்வொரு வரும் அர்த்தத்தை மாத்திரம் மனசில் வைத்துக் கொண்டு, அர்த்தத்தைத் தெரிவிப்பதாக தான் கருதுகிற ஒரு வார்த்தையை மாத்திரம் சொல்லுவார். இதைக் கேட்டபிறகு, நீதிபதிக்கு இத்தனை பேரும் உண்மையி லேயே நேரில் கேட்டவர்கள்தானா என்ற நியாயமான சந்தேகம் தோன்றிவிடும்.

ஸ்வர பேதங்களை அலகிட்டு இனம் கண்டுபிடிக் கும் சக்தி ஒவ்வொரு காதுக்கும் ஒவ்வொரு மாதிரியிருக் கிறது. சிலருக்கு மேல் ஸ்தாயியிலுள்ள ஸ்வரங்களைக் கேட்கவே முடியாது. சிலர் கீழ் ஸ்தாயி ஸ்வரங்களைப் பற்றியவரை, செவிடர்களே. மனிதர்கள் எல்லாரும் ஓர் ஒலி எந்த திசையிலிருந்து வருகிறது என்பதை நிர்ணயம் செய்யத் திணறுவார்கள். வுண்ட் **(Wundt)** என்ற ஒலி நூற்புலவர் ஆயிரக்கணக்கான காதுகளைச் சோதனை போட்டு சில முடிவுகளுக்கு வந்தார். *1.* முன்னும் பின்னும் இருந்து வருகிற ஒலிகளைக் காட்டிலும், இடமிந்தோ, வலமிருந்தோ வருகிற ஒலிகளை லகுவாக நம்மால் கேட்க முடியும். 2. முன்னிருந்து வரும் ஒலி

களைப் பின்னிருந்து வருவதாகவும், பின்னிருந்து வருவதை முன்னிருந்து வருவதாகவும், எண்ணும் மயக்கம் நம் செவிகளுக்குண்டு. 3. ஐம்பது வயதுக்குமேல் செவியின் சக்தி குறைந்து கொண்டே வருகிறது. 4. கிழவர்களைக் காட்டிலும் கிழவிகளுக்கு காது நன்றாகக் கேட்கும்.

வாய்

வழக்கு விசாரணையிலே, ருசியை ஆதாரமாகக் கொண்ட சாட்சியம் அபூர்வம். இருந்தாலும், அதற்கு முக்கியத்துவம் அதிகம். பாஷாணம் போட்டு விட்டதாகக் குற்றம் சாட்டுகிறபோது, நாக்கு சொல்லுகிற சாட்சியமே பிரதானமானது. "புளிப்பு, கசப்பு, கரிப்பு, இனிப்பு, துவர்ப்பு" என்ற உணர்ச்சிகள், நாக்குக்கு நாக்கு வித்தியாசப்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

மூக்கு

மோப்பத்தின் மூலம் பொருள்களைப் பகுத்தறியும் திறமை மனிதனைக் காட்டிலும் நாய்க்கு ஆயிரம் மடங்கு அதிகம். மற்ற உணர்வுகளைக் காட்டிலும் மனசுக்கு வெறியேற்றுகிற சக்தி மோப்பத்துக்கே உண்டு. வழி நடந்து கொண்டிருக்கும்போதே ஒரு தனிப்பட்ட மணம் வீச ஆரம்பிக்கும். உடனே, நாய் தன்னை மறந்து, எஜமானனையும் மறந்து அந்த இடத்தை வளைய வளையச் சுற்றி வருவதைப் பார்த்தால் அது நாம் அறிய முடியாத ஓர் உணர்ச்சிச் சூறாவளியில் அகப்பட்டு எவ்வாறு தத்தளிக்கிறது என்று யூகம் செய்ய முடிகிறது. நல்ல வேளையாக, கடவுள் மனிதனுக்கு மோப்ப சக்தியைக் குறைத்தே வைத்து விட்டார். அந்த சக்தியும் தீட்சண்யமாயிருந்தால், மனி

லும், நாகரிக முதிர்ச்சியாலும் கிராம வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாக கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் நியாயம் கிடைப்பதென்பது கஷ்டசாத்தியமாகி விட்டது. ஆகவே, அரசாங்கத்தாரால் நடத்தப்படுகிற நீதிமன்றங்களில்தான் ஓரவஞ்சகமில்லாத தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். ஆனால், நீதிமன்றங்களிலோ, சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்ட சாட்சியத்தின் மூலமே உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. அப்பேர்ப்பட்ட சாட்சியமும் பெரும்பாலும் வாய்மொழிச் சாட்சியமாகவேயிருக்கிறது. நாணயமான சாட்சிகள் சொல்லும் வாக்குமூலங்கூட உண்மைக்கு மாறுபட்டதாயிருக்கிறது. ஏனென்றால் அவர்களுடைய கவனசக்தியும், ஞாபகசக்தியும், சொல்வன்மையும் முழுத் திறமையோடு இயங்குவதில்லை. அவ்வாறு இயங்கினாலும்கூட, மனித வர்க்கத்துக்கேயுரிய சில குறைபாடுகளின் சாயல் அவர்களுடைய வாக்குமூலத்தைப் பாதித்து, உண்மையை விகாரப்படுத்துகிறது. இதற்கெல்லாம் மேலாக, ஐம்புலன்கள் தொழிற்படும் முறையும் சாட்சியத்தின் மதிப்பைக் கெடுக்கிறது. போதாக்குறைக்கு, பொய்யை மெய்போலக் காட்டும் திறமை படைத்த சாட்சிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையிலே சாட்சியச் சேற்றைக் கலக்கி பாதாளத்திலே அமிழ்ந்து கிடக்கும் உண்மையைத் தூண்டில் போட்டுப் பிடிக்க வழியிருக்கிறதா? வாக்குமூலத்தின் மாற்றையும், துல்லியத்தையும் உறைத்துப் பார்ப்பதற்குத் தகுந்தோர் உறைகல் கிடைக்குமா? இந்தக் கேள்விகளுக்கு விடை அடுத்த கட்டுரையில் காணலாம்.

4. குறுக்கு விசாரணை

பொய்யை மெய்போலப் பரிமாறுகிற சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து மெய்யை எப்படிப் பிரித்து இனம் கண்டுபிடிப்பது? பண்டைய மக்கள் இதற்கு ஒரு கரடுமுரடான வழி கண்டுபிடித்து வைத்திருந்தார்கள். பழுக்கக் காய்ச்சின எண்ணெயிலே கையை மூக்க வேண்டியது. வாய்மையுடையவன் கை பொறியாமல், வெளியில் வரும். பொய் சொன்னவன் கையோ வெந்து புண்ணாகி அவன் குற்றத்தைக் காட்டிக் கொடுத்து விடும் என்று நம்பினார்கள். இதை வெறும் அசட்டு நம்பிக்கையென்று தள்ளுவதற்கு முன்னால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சத்தியத்தில் எல்லையற்ற நம்பிக்கையுடையவனுடைய மனசும், உடலும் அசாதாரணமான சக்தி பெற்றவை; எந்தவிதமான கடுமையான சோதனைக்கும் ஈடுகொடுக்கக் கூடியவை. தீக்குழியும், தேர்க்காலும், அவனுடைய உள்ளத்தையோ, உடலையோ அவ்வளவாக பாதிப்பதில்லை. ஆனால், இப்பேர்ப்பட்ட சோதனைகள் எல்லாம் தற்காலத்துக்குரியவையல்ல. எதிலும் நம்பிக்கை குறைந்துவரும் இந்நாளில், உண்மை சொல்லுகிற சாட்சிக்கே உண்மையில் நம்பிக்கையிருப்பதில்லை. ஆகவே, தற்கால சாட்சிகளை மேற்கண்ட சோதனைகளுக்கு உட்படுத்தினால், சித்ரவதை செய்யும் குற்றத்துக்கு ஆளாவோம்.

1947இல் 'சிந்தனை' இதழில் வெளிவந்த கட்டுரை.

சித்ரவதைக்குக் கிட்டத்தட்ட சமமான கருவி யொன்றை ஆங்கிலேயர் கண்டுபிடித்தார்கள். அதுதான் 'குறுக்கு விசாரணை' என்பது. இது ஓர் அற்புதமான கருவி. உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு இதைப் போல பிரயோஜனமானது வேறு ஒன்றுமே இல்லை யென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

சாட்சிக்கு வாதி பிரதிவாதிகளிடத்திலிருக்கும் உறவு, வாஞ்சை, வியாஜ்ஜியத்தின் முடிவில் அவருக் கிருக்கும் அக்கறை, சாட்சியம் சொல்ல வந்த நோக்கம், அவருடைய விருப்பு, வெறுப்புகள், அவர் விஷயத் தையறிந்த முறை, அவருடைய கவனிப்பு, ஞாபக சக்தி, எடுத்துச் சொல்லும் திறமை - இவற்றையெல்லாம் குறுக்கு விசாரணையின் மூலம் சாங்கோபாங்கமாக அலசி, ஆராய்ந்து, தெளிந்து விடலாம். பொய்யை எவ்வளவு திறம்படச் சொல்லுகிறவனாயிருந்தாலுங் கூட, குறுக்கு விசாரணையென்ற சோதனைக்கு உட் பட்ட மாத்திரத்தில், கதிகலங்கி, மனம் கலங்கி உண்மை யைக் கக்கிவிடவே செய்வான். முள்ளும், புதரும், பாறையும், அடர்ந்த காட்டிலே புலி வேட்டையாடுவ திலே எவ்வளவு உற்சாகமும், பரபரப்பும், வேதனை யும், மயக்கமும், சாகசமும் ஏற்படுமோ அவ்வளவும் ஏற்படுகிறது. தந்திரமும், பொய்யும் நிரம்பிய ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, உண் மையாக நடந்த சம்பவத்தை மெழுகி மறைப்பதிலே சாட்சி முனைப்பாயிருப்பான். அவனிடத்திலே சம்பவத் துக்குப் புறம்பானதுபோலத் தோன்றும் பல விவரங்க ளைப் பற்றி விஸ்தாரமாகக் கேள்வி கேட்க வேண்டும். அவன் இந்தக் கேள்விகள் தன் கட்சியைப் பாதிக்காது என்று நினைத்துக் கொண்டு பல விடைகளை தாராளமா கச் சொல்லுவான். பல விஷயங்களை ஒப்புக் கொண்டு விடுவான். பிறகு, தான் சொல்ல வேண்டாம் என்று

மறைத்து வைத்திருந்த விஷயங்களைக்கூட மறுக்க முடியாமல் திணறுவான். இந்த மாதிரி விசாரணைக்கும் மசியாத பேர்வழியாக இருந்தால், மற்றொரு முறை யைக் கையாளலாம். சாட்சி யாருக்கு அனுகூலமாக வந்திருக்கிறானோ, அந்தக் கட்சிக்காரருக்காக, வேண் டிய அளவுக்குமேல், அபரிமிதமான அழுத்தத்தோடு சாட்சியம் சொல்லும்படி செய்து, ''இவன் ஓரவஞ்சகக் காரன், பொய்யன்'' என்று நீதிபதியின் மனதில் படும் படி வைத்துவிடலாம். இப்பேர்ப்பட்ட காரியங்களை யெல்லாம் சாதிப்பதற்கு நல்ல மதிநுட்பமும், மனித இதயத்தின் வளைவுகளையும், நெளிவுகளையும் நன் றாக அறிந்து சமயோசிதமாக கேள்வி கேட்கும் சக்தியும் உடைய வக்கீல் அவசியம், கருவியைத் திறமையாகக் கையாளாவிட்டால், தன் மார்பிலேயே பாய்ந்து, தன் கட்சிக்கே ஆபத்துகள் விளைவித்துவிடும் அந்தக் கருவி.

சில வழக்கறிஞர்கள் காலத்தை பாழாக்குவதற்கா கவே குறுக்கு விசாரணை ஏற்பட்டிருப்பதாக நினைக்கி றார்கள். வியாஜ்யத்தில் முக்கிய பிரச்சனை எங்கேயோ இருக்கும். அவர்கள் குறுக்கு விசாரணையோ பிரச்ச னைக்கு வெகு தூரத்துக்கு அப்பால், மலை, வனம், வனாந்திரங்களிலே சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும். இப்படி விருதாவான குறுக்கு விசாரணையை அடக்க வும், தடுக்கவும் நீதிபதிக்கு உரிமையாயிருக்க வேண்டி யது அவசியந்தான். ஒரு வக்கீல் ஒரு பெண்ணை ஒரு மாதகாலமாகக் குறுக்கு விசாரணை செய்தார். கேள்விக ளைத் திருப்பித் திருப்பிக் கேட்டு நீதிபதியின் பொறுமை யையே குலைக்க ஆரம்பித்துவிட்டார். இந்த நிலை யிலே அவர் கேட்ட கேள்வி: ''அம்மா உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?'' கோபத்தை அடக்க முடியா மல் திணறிக் கொண்டிருந்த நீதிபதி சொன்னார் ''நீங்கள்

குறுக்கு விசாரணை ஆரம்பிக்கும்போது சாட்சிக்கு மூன்று குழந்தைகள் இருந்தன. இப்பொழுது எத்தனை யென்று கேட்க வேண்டியது அவசியந்தான்.''

சாட்சிக் கூண்டிலே ஏறிவிட்டால் சாட்சி எவ்வளவு அந்தஸ்த்துடையவராயிருந்தாலும், அவரை அலட்சிய மாகவும், அகௌரவமாகவும் நடத்தலாம் என்று சில வக்கீல்கள் கருதுகிறார்கள். இந்த நிலைமை மிகவும் கண்டிக்கத்தக்கது. ஏளனமும், நையாண்டியும், மான பங்கமும்தான் சாட்சிக் கூண்டில் நமக்குக் கிடைப்பது என்று நினைத்தே கௌரவமான மக்கள் பலர் சாட்சி யாக வருவதற்கே கூச்சப்பட்டு ஒதுங்கி விடுகிறார்கள். இதன் விளைவாக உண்மை சொல்லுகிறவர்கள் சாட்சி யமே நமக்குக் கிடைக்காமல் போகிறது. நீதிபரிபாலனத் திற்கு முக்கியத்தை உத்தேசித்தாவது சாட்சிகளை உதா சீனமாக நடத்தும் மனப்பாங்கு ஒழிய வேண்டும். அப்படியானால் சாட்சிகளோடு கொஞ்ச வேண்டும் என்று அர்த்தமல்ல. கொட்டிக் கறக்கும் மாட்டைக் கொட்டியும், தட்டிக் கறக்கும் மாட்டைத் தட்டியுந்தான் கறக்க வேண்டும். முழுப் பொய்யை அயோக்யத்தன மாகவும், துணிச்சலோடும் சொல்லுகிற சாட்சிகளை அதட்டியும், மிரட்டியும், கடுமையாகவுந்தான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். ஆனால், தரம் தெரியா மல் எல்லா சாட்சிகளையும் ஒரே முறையில் நடத்துவது உசிதமல்ல.

சில வக்கீல்கள், குறுக்கு விசாரணை மூலம் உண்மை பேசுகிற சாட்சியைப் பொய்யன் போலவும், பொய்யனை சத்தியசீலனாகவும் காட்டி விடுகிறார்கள். இதற்குக் காரணம் வக்கீலின் நேர்மையற்ற திறமையும், சாட்சியின் அபரிமிதமான மூட்டாள்தனமும்தான். இப்படியெல்லாம் குறுக்கு விசாரணையைக் கிரம விரோ தமாக உபயோகிக்காமல் தடுப்பதற்கு நீதிபதிக்கு உரி

மையுண்டு. இந்த உரிமையைத் திறமையோடும், நுட்பத்தோடும் நீதிபதிகள் கையாண்டால் மேற்சொன்ன விபத்துகளுக்குத் தப்பலாம். ஒரு வியாஜ்யத்திலே கீழ்க் கண்டவாறு குறுக்கு விசாரணை நடந்தது. சாட்சியின் பெயர் மிஸ்டர் ராலின்ஸன்.

வக்கீல்: உங்கள் வீட்டிலே ஒரு பெண் இருக்கிறாளா?

சாட்சி: ஆம்.

வக்கீல்: அவளைப் பக்கத்திலுள்ளவர்கள் மிஸஸ். ராலின்ஸன் என்று அழைக்கிறார்களா?

சாட்சி: ஆம்.

வக்கீல்: சென்ற 10 ஆண்டுகளாக அவள் உங்களுடைய பாதுகாப்பில்தானே இருக்கிறாள்?

சாட்சி: ஆம்.

வக்கீல்: நீங்கள் சட்டப்படி மணந்த மனைவி இறந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டதல்லவா?

சாட்சி: ஆம்.

மேற்சொன்ன பதிலுக்குப்பின் வக்கீல் உட்கார்ந்து விட்டார். கோர்ட்டிலே உட்கார்ந்திருந்த ஜூரிகள் சாட்சி அசல் அயோக்கியன் என்று தீர்மானத்துக்கு வந்துவிட்டார்கள். அந்தச் சமயம் அடுத்த தரப்பு வக்கீல் எழுந்து மறுவிசாரணை செய்ய ஆரம்பித்தார்.

வக்கீல்: ஐயா, நீங்கள் சொன்ன பெண் உங்கள் தாயார் தானே?

சாட்சி: ஆம்.

உடனே எல்லாருக்கும் உண்மை தெரிந்துவிட்டது. குறுக்கு விசாரணை செய்த வக்கீலின் அக்கிரமத்தையும், உண்மையைத் திரிக்கும் திறமையையும் உணர்ந்து கண்டித்தார்கள். இப்பேர்ப்பட்ட தீருகு தாளங்களுக் கெல்லாம் குறுக்கு விசாரணையை உட் படுத்தாமல் உண்மையை விளக்கும் அருமைக் கருவியாக அதைக் காக்க வேண்டியது வக்கீல்கள் கடமை.

இனி சாட்சிகளின் குண வேறுபாடுகளுக்குத் தகுந்த படி குறுக்கு விசாரணையை எப்படி நடத்த வேண்டும என்பதைப் பற்றி அடுத்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

5. சத்திய சோதனை

சாட்சியின் வாக்குமூலத்தைக் கடைந்து உண்மையைத் திரட்டியெடுப்பதற்குக் குறுக்கு விசாரணை ஒரு சிறந்த கருவி. அந்தக் கருவியைத் திறமையோடு பயன்படுத்துவதற்கு, கேவலம் ஏட்டு ஞானமும் சட்ட நுட்பமும் இருந்தால் மாத்திரம் போதாது; எந்தெந்த சந்தர்ப்பத்தில் மனித இதயம் என்னென்ன மாதிரி இயங்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும். முன்பின் தெரியாத சாட்சி, கூண்டில் ஏறியனவுடனேயே அவருடைய நடை, உடை, முகபாவங்கள் மூலம் அவருடைய யோக்கியதையும், மனப்பாங்கையும் முழுத்தன்மையுமே, க்ஷணமாத்திரத்தில் மதித்து அவருடைய தனிப்பண்புக்கேற்ற முறையில் அவரோடு ஊடாடும் வல்லமை வக்கீலுக்கு இருக்க வேண்டும்.

1. கூண்டிலிருக்கும் சாட்சியின் கண்களைக் குறுக்கு விசாரணை செய்யும் வக்கீல் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். வைத்த கண்கள் வைத்தது போலிருக்க வேண்டும். விசாரணை முடியும்வரையில் எதிரியின் மனசு நம் வசத்திலிருக்க வேண்டுமென்றால், ஊடுருவிப் பாய்கின்ற கண்கள் மூலம்தான் அதைச் செய்ய முடியும். ஆகவேதான் பொய் சொல்லுகிற சாட்சிகள் வக்கீலை ஏறிட்டுப் பார்க்காமல், பராக்குப் பார்த்துக் கொண்டே பதில் சொல்லுவார்கள். அவர்

1947இல் 'சிந்தனை' இதழில் வெளிவந்த கட்டுரை.

களை மருட்டியும், வெருட்டியும் வக்கீல் முகத்தைப் பார்த்து பதில் சொல்லும்படி செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய மனசில் இருப்பதையெல் லாம் கண்ணாடிபோல எடுத்துக்காட்டுவது அவர்கள் கண்தான். உண்மை, பொய், கோபம், பொறாமை, வெறுப்பு முதலிய பாவங்களைக் காட்டிக் கொடுப்ப தும் இதுதான். ரஸ்புட்டீன் **(Rasputin)** முதலிய மந்திரவா திகள் தங்களுடைய திருஷ்டி சக்தியினால் மன்னாதி மன்னர்களையெல்லாம் அடிமைப்படுத்தியிருக்கிறார் கள். ஆப்பிரிக்காவில் வாழும் ஒரு வகைப் பாம்பு தன்னுடைய கண்ணின் கவர்ச்சியால் வெகுத் தூரத்துக் கப்பாலுள்ள பறவைகளை மயக்கி இழுத்துப் புசித்து விடுகிறது. பாஷையின் துணையில்லாமல் மனசோடு மனசு பேச வேண்டுமென்றால் விழியின் மூலம்தான் முடியும்.

2. சாட்சியின் மனசில் பதுங்கிக் கிடக்கும் ரகஸ்யங் களை அவனுடைய குரலில் தவழும் ஸ்வர பேதங்க ளைக் கொண்டு அளவிடலாம். கண்ணுக்கு அடுத்தபடி யாக, ஒருவனுடைய மனோநிலையை வியாக்கியானம் செய்வது அவனுடைய சாரீரமே. தன் குற்றத்தை மறைக்கும் படுதாவாக சாட்சி தன் குரலையே உபயோ கிக்கிறான்.

3. சமீபத்தில் காலஞ்சென்ற ராமானுஜம் போன்ற சிறந்த வழக்கறிஞர்கள் சாட்சியைப் பம்பரமாக ஆட்டி வைப்பார்கள்; தங்களுக்குச் சாதகமாக என்ன பதில் வேண்டுமோ அதை எந்தச் சாட்சியையும் சொல்லும் படி வைத்து விடுவார்கள். சாட்சியை வீணையாகவும், குறுக்கு விசாரணையை வீணையில் மேவும் விரலாக வும் வைத்து அவர்கள் வாசிக்கும்போது அவர்கள் மனோயிஷ்டப்படியெல்லாம் இசைக் கருவி பேச ஆரம் பிக்கிறது. வீணையை மீட்டத் தெரியாதவர்கள் மீட்டி

னால் நரம்பு தெறித்து அவஸ்தைதான் மிஞ்சுகிறது. அப்பாவியான சாட்சியைச் சாதுவாக விசாரணை செய்ய வேண்டும். தந்திரசாலியிடத்தில் ஜாக்கிரதையோடும், யோக்கியனிடத்தில் நம்பிக்கையோடும், பயங்கொள்ளியிடத்தில் கருணையோடும், அயோக்கியனிடத்தில் கடுகடுப்போடும், பொய்யனிடத்தில் கோடையிடி போலவும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். இப்படி விசாரணை நடத்தும்போது வக்கீல் தன்னுடைய கண்ணியத்தை மறந்துவிடாமல், தன்னுடைய திறமையை விளம்பரப்படுத்த வேண்டுமே என்ற நினைப்பை அடக்கி, உண்மையைத் துலக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு நடந்து கொள்ள வேண்டும்.

சாட்சிகளிலே பல ரகம் உண்டு. சாட்சிக்கேற்றபடி விசாரணை முறையையும் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

பொய் சாட்சி

சாதாரணமாக, ஒரு சாட்சியின் வாக்குமூலம் முதலிலிருந்து கடைசி வரையில் பொய்யாக இருப்பதில்லை; மூக்கால்வாசி உண்மையாக இருக்கும். ஆனால், முக்கியமான அம்சத்தில் பொய் கலந்திருக்கும். இப்பேர்ப்பட்ட சாட்சியை எப்படிக் குறுக்கு விசாரணை செய்வது? முதலில், சாட்சி பொய்யன்தானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். முழுங்கி முழுங்கிச் சொல்வதிலிருந்து வாக்குமூலம் பொய்யானது என்று யூகிக்கலாம். ஒருக்கால் இந்தத் தயக்கமெல்லாம் பயத்தினால் உண்டானதாயிருக்கலாம். நீதிமன்றத்தில் உயரமான சாட்சிக் கூண்டில் ஏறி நின்று, பலர் முன்னிலையில் பகிரங்கமாக வாக்குமூலம் கொடுப்பது என்றால், எவ்வளவு துணிச்சலான சாட்சிக்கும் அச்சமும், கூச்சமும் ஏற்படுவது இயற்கை. கூச்சத்தினால் சாட்சிக்

குத் தயக்கம் ஏற்பட்டால் அவர் சொல்வது பொய் யென்று தீர்மானித்து விடுவது தவறு. அவை நடுவே ஏற்படும் நடுக்கத்தை பொய் சொல்வதால் ஏற்பட்ட நடுக்கமென்று தீர்மானித்துவிடக் கூடாது. மட்டமான அறிவுடைய சில சாட்சிகளும் இப்படியே நடந்து கொள் வார்கள். ஒளியிழந்த கண்கள், தடுமாற்றம் உள்ள குரல், அவர்களுடைய அந்தஸ்துக்கு ஏற்காத பாஷை இவற்றையெல்லாம் கண்டு வாக்குமூலம் பொய் யென்று முடிவு கட்டிவிடக் கூடாது. அனுபவசாலி யான வக்கீலுக்கு இப்பேர்ப்பட்ட சாட்சிகள் உண்மை பேசுகிறவர்கள் என்று தெரியும்.

சாட்சியின் பேச்சு முறையிலிருந்து பொய்யன்தான் என்று நிச்சயம் ஏற்பட்டால், அவன் கொடுத்த வாக்கு மூலத்தைத் திரும்பவும் சொல்லும்படி கேட்க வேண் டும். அவர் கிளிப்பிள்ளையைப் போல முன்சொன்ன கதையை முன் சொன்ன மாதிரியே வார்த்தை பிசகாமல் திரும்பவும் ஒப்புவிப்பான். உடனே, அவன் வாக்கு மூலத்தில் இங்கொரு செங்கல்லும் அங்கொரு செங்கல் லுமாக உருவிவிட வேண்டும். கதையின் முடிவிலே ஒரு கேள்வி கேட்டுப் பதம் பார்க்க வேண்டும். திடீ ரென்று தாவிக் குதித்துக் கதையின் முன் பாகத்தை மாறிப் பிடிக்க வேண்டும். முறையாகக் கதையைப் பாராமல் படித்து வந்த சாட்சிக்கு மொத்தமாக முடிவிலி ருந்து கடைசி வரையில் படித்த முறைப்படி சொல்லத் தெரியுமேயொழிய இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கேள்வி கேட்கும்போது பதில் சொல்லத் தெரியாமல் தினறிக் குழறுவான். கேள்வி கேட்பவருடைய கற்ப னையின் வேகத்துக்கு முன்னால், பதில் சொல்பவனு டைய கற்பனா வேகம் நிற்க முடியாமல் தத்தளித்துத் தடுமாறி முரணுக்கு மேல் முரணாக விளைந்து கொண்டே போகும். இந்த நிலையில் சாட்சி வக்கீலிடம்

சரண்டைகுந்து, தான் சொன்னதெல்லாம் பொய்யென்று ஒப்புக்கொண்டு விடுவான். பொய் சாட்சி சொல்லுவதிலே வெகுகாலப் பழக்கமுள்ளவர்களை இன்னும் ஜாக்கிரதையோடு விசாரணை செய்ய வேண்டும். அவர்கள் சிந்தித்துப் பதில் சொல்வதற்கு அவகாசமே கொடுக்காமல், கேள்விகளைச் சரமாரியாகப் பொழிய வேண்டும். மூச்சு விடுவதற்கு நேரம் கொடுத்து விட்டாலோ, பாய்ச்சல் காண்பித்து உதறியோடிச் சமாளிக்கப் பார்ப்பார்கள்.

திமிர் பிடித்த சாட்சி

'நார்ட்டன் துரையைத் தினறச் செய்தவனல்லவா நான்' என்று தோள் தட்டிக் கொண்டு வரும் சாட்சிகள் பலர் உண்டு. அவர்களுடைய பேச்சு, தலையாட்டம், சர்வக்ஞன் என்ற நினைப்பு எல்லாமே வக்கீலை ஒருகை பார்த்து விடுகிறேன் என்ற தோரணையிலிருக்கும். எந்தக் கேள்விகளுக்கும் அநாயசமாக தட்டுத் தடையில்லாமல் பதில் சொல்லுவார்கள். இப்பேர்ப்பட்டவர்களைக் குறுக்கு விசாரணை செய்யும்போது, வக்கீல் இவர்களிடம் விசேஷ மரியாதை கொடுப்பதுபோல் பாவனை செய்ய வேண்டும். மண்டையில் அடித்து இருத்தி வைக்க முயற்சி செய்யாமல் அவர்களுடைய ஆர்வத்தைக் கிளப்பி, உற்சாகமூட்டி அவர்கள் வாக்கு மூலத்துக்கு உலை வைக்க வேண்டும்.

தொடை நடுங்கி சாட்சி

கோழைத்தனத்தினாலோ, பயத்தினாலோ நடுங்கிக் கொண்டே வாக்குமூலம் கொடுக்கும் சாட்சியை விசாரணை செய்வது ரொம்பக் கஷ்டமான காரியம். அதற்கு எல்லையற்ற பொறுமை வேண்டும். எத்தனை தடவை கேள்வியைத் திருப்பிச் சொன்னாலும் பதில் லேசிலே

வராது. பதில் வர ஆரம்பித்துவிட்டாலோ, இரண்டு மூன்றாக, அடுக்கடுக்காக வரும்; பெரும்பாலும் முரண் பட்ட விடைகளாக வரும். ஒரே கேள்விக்கு "ஆமாம்", 'இல்லை'யென்ற எதிரமறையான பதில்களும் "எனக் குத் தெரியாது" அல்லது "எனக்கு ஞாபகமில்லை" என்ற உப்புப் பெறாத விடைகளுமே இந்த ரக சாட்சிக ளிடம் எதிர்பார்க்கலாம். ஆகவே, இவர்களிடத்தில் வக்கீல் சுமூகமாகவும், பொறுமையோடும் நடந்து கொள்ள வேண்டும். பொய் சாட்சிகளைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்து நீத்துகிற மாதிரி, இந்தக் கோழை களை மூரட்டுத்தனமாக நடத்தக் கூடாது. இடக்குப் பண்ணுகிற குதிரையை எப்படித் தட்டிக் கொடுத்து "அம்மா, அரமே" என்று சொல்லித் தன்வசப்படுத்து கிறோமோ, அப்படியே இந்தக் கோழைச் சாட்சிகளோடு பழக வேண்டும். அதோடு, நீதிபதிக்கும் கோழைகளி டத்திலே தன்னையறியாமலே அனுதாபம் ஏற்படுவது இயற்கை. கொடூரமாக அவர்களைக் குறுக்கு விசாரணை செய்தால் நீதிபதியின் மனசு வக்கீலுக்கு விரோதமாக வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

ஆஷாடபூதி சாட்சி

ஆஷாடபூதிகளைக் குறுக்கு விசாரணை செய்வது அவ்வளவு கஷ்டமன்று. அவர்களுடைய நடிப்பே அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடும். அவர்கள் எப் பொழுதுமே ஓரவஞ்சகமில்லாமல், நீதியென்னும் நெடுங்குன்றேறி நின்றுதான் வாக்குமூலம் கொடுப்பார் கள். உண்மையைத் துலக்க வேண்டுமே என்ற ஏக்கத் தில்தான், அவர்கள் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்கள்; விருப்பு வெறுப்பில்லாதவர்கள்; வழக்கிலே அவர்க ளுக்கு இம்மியளவுகூட அக்கறை கிடையாது; பற்றற்ற நிலையில் சாஸ்வதமாக நிற்பவர்கள். இந்த வழக்கு விசாரணைக்கு வந்திருக்குமா, அவர்களுடைய பஞ்சா

யத்துத் தீர்ப்பை வாதி மாத்திரம் கேட்டிருந்தால்? இவ்வளவு கண்ணியமும், சத்தியமும் நிறைந்த ஆசாமிகளைக் குறுக்கு விசாரணை செய்வதே பாவம்தான். இருந்தாலும் இவர்கள் போடுகிறதெல்லாம் வேஷம்தான் என்று காட்ட வேண்டிய பொறுப்பு வக்கீலுக்கு இருக்கிறதல்லவா? ஆஷாடபூதியுடைய சாயம் வெகு சீக்கிரத்திலேயே வெளுத்துவிடும். அவனுக்குத் தன்னுடைய யோக்கியதையிலே அபார நம்பிக்கையுண்டு. பொய்யைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் எல்லாம் காலைத் தேய்க்க ஆரம்பிப்பான். சுவரோ நெடுஞ்சுவர், தாண்டி மண்டையை உடைத்துக் கொள்வதைக் காட்டிலும், ஓடித் தப்பித்துக் கொள்ளப் பக்கத்தில் ஏதாவது தொண்டு இருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்ப்பான். உண்மையை முழுக்க முழுக்க ஒப்புக் கொள்ளாவிட்டாலும், கொஞ்சம், கொஞ்சமாக ஒப்புக் கொண்டே வந்து, தான் சத்தியசீலன் என்பதைக் காட்ட முயற்சி செய்வான்.

போலீஸ் சாட்சி

கிரிமினல் வழக்குகளிலே இவர்களுடைய சாட்சியத்திற்கு மதிப்பு அதிகம். இவர்களை மிதமிஞ்சி குறுக்கு விசாரணை செய்வது அபாயகரமானது. சாட்சிக் கூண்டிலேயே பிறந்து, வளர்ந்தவர்கள் இவர்கள். பெரிய பெரிய வக்கீல்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, அடிபட்டுத் தேறிய லகடுகள்; இன்ன கேள்விக்கு இன்ன பதில்தான் என்று திட்டம் வகுத்து வைத்திருப்பார்கள். வக்கீல் எங்கே இட்டுக் கொண்டு செல்கிறார் என்பதை வக்கீலுக்கு முன்னால் அவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். கேட்டுக் கேட்டுப் புளித்த கேள்விகளுக்கு அவர்கள் மசியப் போவதில்லை. மாமூல் கேள்விகளை அவர்களிடம் கேட்காமல், புது முறையிலே அவர்களை விசாரிக்க வேண்டும். அவர்களுக்குப்

பயிற்சி எவ்வளவு இருந்தபோதிலும், மிகக் குறுகிய பாதையில் ஏற்பட்ட பயிற்சிதான். பாதையை விட்டுக் கொஞ்சம் விலகி விட்டாலோ, அவர்கள் பாடு அதோகதி தான். ஒரு கேள்விக்கும் அடுத்த கேள்விக்கும் உள்ள தொடர்பை அவர்கள் கண்டுபிடிக்காத முறையிலே குறுக்கு விசாரணை நடத்த வேண்டும். முக்கியமில்லாத கேள்வியை மிக முக்கியமானது போலக் கேட்க வேண் டும். உடனே போலீஸ் சாட்சி சிந்தனையில் ஆழ்ந்து விடுவார். "இந்தக் கேள்வியின் நோக்கம் என்ன? நாம் சொல்லப்போகும் பதில் வழக்கை எப்படிப் பாதிக் கும்?" என்றெல்லாம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பிப்பார். இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, திடீ ரென்று குறுக்கிட்டு, ஒரு முக்கியமான கேள்வியைப் போட வேண்டும். இந்த நிலையில் அநேகமாக நமக்குச் சாதகமான பதில் கிடைத்துவிடும். இன்னொரு விஷ யம்; போலீஸ்காரர்களுடைய யோக்கியதையைப் பழிக் கும் கேள்விகளை யோசனையில்லாமல் கேட்பது தவறு. கூண்டில் நிற்கும் எதிரி பரமயோக்கியனாயிருக்க லாம். ஆனால், போலீஸ்காரர்களுடைய யோக்கிய தைக்கு முன்னால், அவன் ஒரு நாளும் நிற்க முடியாது.

நிபுணர்கள்

சாட்சியாக வந்திருக்கும் நிபுணருடைய விஞ்ஞா னத் துறையில் தெளிந்த ஆராய்ச்சியில்லாமல் டாக்டர் கள், இஞ்சினியர்கள் போன்ற நிபுணர்களைக் குறுக்கு விசாரணை செய்வதால் விபரீதமாக முடியும். அனுபவ மில்லாத சில வக்கீல்கள் ஆழம் தெரியாமல் மருத்துவத் துறையிலே இறங்கிக் குறுக்கு விசாரணை செய்து அவஸ்தைப்படுவதுண்டு. அனாவசியமான கேள்வி களைக் கேட்பதால் சாட்சிக்குத் தன்னுடைய அபிப்பிரா யத்தை பலமாகவும், அழுத்தமாகவும் நிலைநாட்டுவ

தற்கு சந்தர்ப்பம் கிடைத்து விடுகிறது. ஆனால், வழக்கின் கதி முழுவதுமே, நிபுணரின் வாக்குமூலத்தைப் பொறுத்திருக்குமானால், அவருடைய அபிப்பிராயம் தவறு என்பதை அதிகாரபூர்வமாக ஸ்தாபிக்கத்தான் வேண்டும். நிபுணர்கள் என்று சொல்லிக் கொள்ளும் சாட்சிகள் அர்த்தமாகாத பரிபாஷையில் பேசி, அபரிமிதமான கைவரிசைகளைக் காட்டித் தங்கள் புலமையை நீதிபதி ஒப்புக் கொள்ள வேண்டுமே என்று பல உபாயங்களைக் கையாளுவார்கள். அவர்களுடைய வார்த்தைப் படாடோபத்தைத் துவம்சம் செய்து, விஷயத்தைத் தெளிவாக பாமர பாஷையில் சொல்லும்படி செய்து, வாக்குமூலத்தின் முக்கிய அம்சங்களிலே அவர்களை ஒரு கலக்கு கலக்கி வெற்றி பெறுகிற சில வக்கீல்களும் உண்டு.

ஒரு ஜமீன்தாரைக் கொலை செய்வதற்காக எதிரிகள் வெடிகுண்டு தயார் செய்ததாகவும், செய்து கொண்டிருக்கும்போதே குண்டு வெடித்து அவர்கள் உடம்பிலேயே காயம் ஏற்பட்டதாகவும் ஒரு வழக்கு நடந்தது. உடம்பைப் பரிசோதனை செய்த டாக்டர், காயங்கள் வெடிகுண்டினால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சாதித்தார். வழக்கின் முடிவு முழுவதுமே டாக்டரின் அபிப்ராயத்தைப் பொறுத்திருந்தது. குறுக்கு விசாரணை செய்த வக்கீல் இதை நன்றாக உணர்ந்தவர். விசாரணை ஆரம்பிக்கும்போதே, தான் ரஸாயன சாஸ்திரத்தில் பட்டம் பெற்றவர் என்று டாக்டரிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். இதைக் கேட்டதுமே டாக்டருக்கு நாடி விழுந்து விட்டது. வெடிகுண்டு உற்பத்தி முறையைப் பற்றியும் ரஸாயன நுட்பங்களைப் பற்றியும் வக்கீல் கேள்விக்கு மேல் கேள்வி போட்டு டாக்டருடைய பயத்தை அதிகரிக்கச் செய்தார். கீழ்க்கண்டவாறு குறுக்கு விசாரணை நடந்தது.

வக்கீல்: குண்டு வெடியால் ஏற்பட்ட காயத்தை இதற் குமுன் எப்பொழுதாவது உங்கள் அனுபவத் தில் கண்டதுண்டா?

டாக்டர்: இல்லை.

வக்கீல்: எதிரியின் காயங்கள் வெடிகுண்டினால் ஏற் பட்டதென்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?

டாக்டர்: ஒவ்வொரு காயத்தின் விளிம்பும் தீய்ந்து கரிந்து போயிருந்தது. வெடித்த சில்லுகள் தான் உடம்பின் தோலைத் தாக்கி எரித்திருக்க வேண்டும்.

வக்கீல்: கார்பாலிக் **(Carbolic)** புளிநீரை **(Acid)** உடம்பின் மேல் தேய்த்தால் தோலைப் புண் படுத்தி கரித்து விடுமல்லவா?

டாக்டர்: ஆம்

வக்கீல்: இருட்டறையிலே தைலப் புட்டியை எடுக் கப் போன என் கட்சிக்காரர், கை தவறுதலாக **Carbolic acid** புட்டியை எடுத்து உடம்பில் தேய்த்துக் கொண்டார். அதனால்தான் இந் தக் காயங்கள் ஏற்பட்டன என்று நான் சொல் லுகிறேன். இதை நீங்கள் மறுக்க முடியுமா?

டாக்டர்: முடியாது.

மேற்கண்ட குறுக்கு விசாரணையின் மூலம் நிபுண ரின் அபிப்பிராயம் முழுவதுமே தீய்ந்து கரிந்து போய் விட்டது. கூண்டிலே நின்ற கைதிக்கு விடுதலை கிடைத் தது. ஆகவே, நிபுணர்களுடைய அழுத்தமான அபிப்பி ராயங்களையும் பம்மாத்துக்களையும் கண்டு பயந்து விடாமல் வக்கீல்கள் நுட்பமான விஞ்ஞான ஆராய்ச்சி

யோடு விசாரணை நடத்தினால் பயனில்லாமல் போகாது.

பெண்கள்

பொதுப்படையாகப் பார்க்கும்போது கள்ளங் கபடு இல்லாமலும், இயல்பாகவும் சாட்சியம் சொல்லு வதில் ஆண்களைப் பெண்கள் வென்று விடுவார்கள். உணர்ச்சி வெறி பிடிக்காமல் இருக்கும்வரை, அவர்களி டம் உண்மையை எதிர்பார்க்கலாம். ஆனால், புருஷனி டத்தில் அல்லது பெற்ற பிள்ளையிடத்திலுள்ள வாஞ் சையினாலோ, அல்லது எதிரியிடத்திலுள்ள வெறுப்பி னாலோ, சாட்சியம் சொல்ல வந்துவிட்டால் பெண்கள் வாக்குமூலத்தில் ஒரு வார்த்தையைக் கூட நம்ப முடி யாது. வெறுப்பு காரணமாக தன் சொந்தத் தாயைக் கொன்று எதிரிதான் கொலை செய்தான் என்று பொய்க் குற்றம் சாட்டுகிற சில பெண்களும் இருக்கிறார்கள். பெண் சாட்சிகளை விசாரிக்கும்போது அவர்களைப் புகழ்ந்து, உபசாரமாகவும், மரியாதையாகவும் பேசி னால், கூடிய வரையில் அனுகூலமாக பதில்கள் கிடைக் கலாம். சிறப்பாக லேடி டாக்டர்களைக் குறுக்கு விசா ரணை செய்கிற வக்கீல்கள் மேற்கண்ட உண்மையை அனுபவித்திருப்பார்கள்.

ஆகவே, குறுக்கு விசாரணையென்பது மனோதத் துவ ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டதென் றும், ஏட்டுப் படிப்பினால் பெறக் கூடியதல்ல என்றும், மனித இதயத்தின் ஆழத்தையும், உயரத்தையும் எட் டிப் பிடிக்கும் கற்பனை வாய்ந்தவர்களுக்கே கைகூடும் என்றும் தெரிந்து கொண்டோம். சத்திய சோதனையில் ஈடுபடுகிற நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையைப் போல இன்றியமையாத கருவி வேறு ஒன்றுமேயில்லை.

6. பாகப் பிரிவினை

பாகப்பிரிவினை செய்யும் பாத்தியதை, மனித சரித்திரத்திலே பிற்காலத்தில் ஏற்பட்டதுதான். ஆதிமனி தன் ஓரிடத்தில் நிலைத்து வாழவில்லை. உணவு வேட் டைக்காக தேசாந்திரியாகத் திரிந்து கொண்டிருந்தான். பின்னால் செழிப்பான இடங்களில் மந்தை மந்தையா கக் குடியேறி நிலத்தை உழுது பயிரிட்டு வாழக் கற்றுக் கொண்டான். அந்தக் காலத்திலும் தனிப்பட்ட மனித னுக்கு சொத்துரிமை ஏற்படவில்லை. ஓரிடத்தில் குடி யேறிய மக்கள் சமுதாயம் முழுவதுமே அந்த இடத் தைப் பொதுவாய் அனுபோகம் செய்து வந்தது. சமுதா யம் வளர, வளர சமுதாயக் கட்டுப்பாடு தளர்ந்து கொண்டே வந்து, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிப் பட்ட சொத்து பாத்தியம் ஏற்பட ஆரம்பித்தது. அரசி யல் வளம் பெருகி, சமுதாயம் உருவான பிறகே, குடும்பத்திலுள்ள தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கும் சொத்துரிமை உண்டு என்ற கருத்து உருவாகிற்று. குடும்பச் சொத்தை பிரிவினை செய்து பாகஸ்தர்கள் அனுபவிக்க ஆரம்பித்தது சில ஆயிரம் வருஷங்களுக்கு முன்தான்.

பாகப் பிரிவினையைப் பற்றித் தற்கால சட்டக் கருத்துகளை நான்கு துறைகளாக வகுக்கலாம்: 1. பிரிக் கப்படும் சொத்தின் இயல்பு, 2. பாகப்பிரிவினைக்குரிய வர்கள், 3. பாகப் பிரிவினையின் தன்மை, 4. பிரிவினை செய்யும் விதம்.

1956இல் எழுதிய கட்டுரை

1. பிரிக்கப்படும் சொத்தின் இயல்பு

சில சொத்துகள் பிரிவினைக்கு லாயக்கில்லாதவை. உதாரணமாக துணிமணிகள், ஆடை ஆபரணங்கள், கன்றுகாலிகள், மேய்ச்சல் தரை, பாதை, கிணறு, பூஜை விக்ரகங்கள், ஆதரவுகள் **(title deeds)** முதலியன. மேற் சொன்ன சொத்துக்களைப் பிரிவினை செய்தால் அவை களின் தன்மையும், மதிப்புமே கெட்டுவிடும். ஆகவே, பாக காலத்தில் இவற்றைப் பொது அனுபோகச் சொத்து களாக ஒதுக்கி வைப்பது சகஜம். அல்லது பாகஸ்தர்கள் இவற்றை முறை போட்டு அனுபோகம் செய்வது வழக் கம். அதற்குச் சம்மதமில்லையென்றால், ஏதாவது ஒரு பாகஸ்தருடைய பாகத்துக்கு இவற்றை ஒதுக்கி, இவற் றின் விலையை அவரிடம் வாங்கி மற்ற பாகஸ்தர்கள் பிரித்துக் கொள்ளலாம்.

ஹிந்து சட்டப்படி, பாக காலத்தில் குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட சகல ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களும், நிலுவைகளும் பிரிவினைக்குரியவை. பிரிவினைக் காலத்தில் குடும்பக் கடன்களைக் குடும்பச் சொத்திலி ருந்து தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். இரண் டாவதாக குடும்பத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய புள்ளிகளுக்கு குடும்பச் சொத்திலிருந்து ஜீவனாம்சத் துக்கு வழி செய்ய வேண்டும். மூன்றாவதாக, குடும்பப் பொறுப்பில் செய்ய வேண்டிய திருமணம் முதலிய சடங்குகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தகப்பனுக் கும், மக்களுக்கும் பிரிவினை நடப்பதற்கு முன் தகப் பன் கொண்ட கடன்களை குடும்பச் சொத்திலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், சட்ட விரோதமாக கடன்களையோ அல்லது குடி, விபசாரம் முதலிய ஒழுக்கக் கேட்டினால் ஏற்பட்ட கடன் களையோ மக்கள் செலுத்த வேண்டியதில்லை. பாக காலத்தில் கலியாணமாகாமலிருக்கும் மகனுக்கு கலியா

ணச் செலவு கொடுக்க வேண்டிய பொறுப்பு குடும்பச் சொத்துக்குக் கிடையாது. ஆனால், கலியாணமாகாத பெண் மக்களுக்குக் கலியாணச் செலவு, குடும்பச் சொத்திலிருந்து செய்ய வேண்டியதுதான் சட்டம். பிரி வினை ஏற்படும்போது தாயின் சாவு செலவுக்கு வேண் டிய சொத்தையோ, பணத்தையோ ஒதுக்கி வைத்து விட்டு, மீதிச் சொத்தைத் தான் பிரிக்கலாம்.

மேற்சொன்ன ஏற்பாடுகள் எல்லாம் செய்தபிறகு, குடும்பத்திலுள்ள எல்லா பாகஸ்தர்கள் கையிலிருக்கும் குடும்பச் சொத்துக்களுக்கு கணக்கு எடுக்க வேண்டும். பிரிவினைக்கு முன், ஒரு பாகஸ்தர் மற்றவர்களைக் காட்டிலும் அதிக வரும்படியைக் கைப்பற்றியிருந்தால், அதற்கு அவர் முகாந்திரம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், அப்படி அவர் கைப்பற்றியிருக்கும் வரும்படி நியாயமான குடும்பச் செலவுக்காகச் செலவழிக்கப்பட் டிருக்க வேண்டும். அப்படியில்லாமல், பொதுக் குடும்ப அவசியமில்லாமல், தன்னுடைய சொந்த நலத் துக்காக ஒரு பாகஸ்தர் குடும்ப வரும்படியை உபயோ கித்திருந்தால், அதற்கு அவர் கணக்குக் கொடுத்தாக வேண்டும். சொந்த நலத்துக்காக, பிரிவினைக்கு முன் ஒரு பாகஸ்தர் குடும்பச் சொத்துகளில் ஒன்றில் தனக்கி ருக்கும் பாகத்தை விற்றிருந்தால், அந்தச் சொத்தை, பிரிவினையில் அவர் பாகத்துக்குப் பற்றறெழுதப்ப டும். பாக காலம் வரையில் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்த பாகஸ்தரிடம் **(manager)**, மற்ற பாகஸ்தர் கள் பாகத்துக்கு முன்வந்த குடும்ப வருமானங்களைப் பற்றி முகாந்திரம் கேட்க முடியாது. ஆனால், பிரிவி னைக்கு முன்னால் குடும்ப நிர்வாகி சொத்தையோ, வருமானத்தையோ மோசடி செய்திருந்தாலும் அல்லது கையாடி யிருந்தாலும், அதற்குக் கணக்குக் கொடுக்க அவர் சட்டப்படி கடமைப்பட்டவர்.

2. பாகப் பிரிவினைக்குரியவர்கள்

பொதுக் குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் குடும்பச் சொத்தை பிரிவினை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்க பாத்தியதையுண்டு. பாக காலத்தில் தாயின் கர்ப்பப் பையிலிருக்கும் ஆண் குழந்தைக்கும் சொத்தில் பாத்தியமுண்டு. பிறந்த பிறகு சொத்துக்களையெல்லாம் மறுமுறை பிரிவினை செய்யவும், மற்ற மக்களையொத்த பாகம் தனக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்கவும் அந்தப் பையனுக்கு அதிகாரம் உண்டு. பிரிவினைக்குப்பின் கருவில் உண்டான பையனுக்கு தகப்பன் பாகத்தில் மாத்திரந்தான் பாகமுண்டு. இதைத்தவிர ஒரு பாகஸ்தனுடைய வைப்பாட்டி மகனுக்கும் பாகம் கேட்க பாத்தியமுண்டு. ஆனால், சட்டபூர்வமாகப் பிறந்த மகனுக்குள்ள பாகத்தில் பாதி பங்குதான் வைப்பாட்டி மகனுக்கு உண்டு. பாக காலத்தில் எல்லாப் பங்காளிகளும் மேஜராக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒருவர் மைனராக இருந்தாலும் இதர பாகஸ்தர்கள் சொத்தை சட்டப்படி பிரிவினை செய்து கொள்ளலாம். ஆனால், மைனருடைய அக்கறைகளுக்கு விரோதமாய்ப் பிரிவினை ஏற்பட்டால், மேஜரான பிறகு அந்தப் பிரிவினையை ரத்து செய்ய மைனருக்கு உரிமையுண்டு. ஹிந்து பெண்கள் சொத்து பாத்தியதை சட்டப்படி **(Hindu Womens' Right to Property Act)** இறந்துபோன பாகஸ்தரின் விதவைக்கும் பாகம் கேட்க உரிமை ஏற்பட்டிருக்கிறது. உயிரோடிருந்தால், கணவனுக்கு எவ்வளவு பாகம் கிடைக்குமோ, அதைத் தனக்குப் பிரித்துத் தரவேண்டும் என்று கேட்க விதவைக்கு பாத்தியமிருக்கிறது. ஆனால், கணவன் உயிரோடிருக்கும்போது தனக்கும் பாகம் வேண்டும் என்று மனைவி கேட்பதற்கு அருகதை கிடையாது.

3. பாகப் பிரிவினையின் தன்மை

வாய்மொழியாக சொத்துக்களைப் பிரிவினை செய்யலாம். ஆனால் 100 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட பெருமதிப்புள்ள சொத்துகளைப் பத்திரம் மூலம் பிரிவினை செய்வதாயிருந்தால், இந்தியன் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டம் (Indian Registration Act) 17ஆவது பிரிவின் படி அதைப் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத பாகப் பத்திரங்கள் சட்டப்படி செல்லாதவை.

ஒரு குடும்பம் பிரிவினையான குடும்பமா, அல்லது பிரிவினையாகாத குடும்பமா என்பதை பல விஷயங்களைக் கொண்டு அனுமானிக்கலாம். தனிக்குடித்தனம், தனிச் சாப்பாடு, பரஸ்பரம் கொடுக்கல், வாங்கல் முதலிய செயல்களைக் கொண்டு அதைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், இவை எல்லாம் அறிகுறிகளேயொழிய நிச்சயமான ஆதாரங்கள் அல்ல. பாகப்பிரிவினையின் மூலம், குடும்பத்தின் அந்தஸ்தே மாறிவிடுகிறது. அது வரையிலும் கூட்டாக ஆண்டு அனுபோகம் செய்து வந்த சொத்து, அதற்குப்பின் பிளவுபட்டு தனித்தனியாக அனுபோகம் செய்யப்படுகிறது. ஆகவே, பிரிவினையின் மூலம் சொத்தின் பரப்பும், மதிப்பும் மாறுவதோடு உரிமையாளரின் அந்தஸ்தும் மாறுகிறது.

குடும்பத்தார்கள் ஒப்பந்தம் மூலம் பிரிவினை செய்து கொள்ளலாம். சொத்துகளின் நய, இளப்பம் பார்த்துப் பிரிப்பதற்குத்தான் ஒப்பந்தம் அவசியம். ஒப்பந்தம் இல்லாமலே, அவிபக்த (பிரிவினையில் லாத) குடும்பத்தை விபக்த (பிரிவினையான) குடும்பமாக மாற்றுவதற்கு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அதிகாரம் உண்டு. பிரிவினையாக வேண்டும் என்ற நோக்கத்தைத் தெளிவாகவும், சந்தேகத்துக்கு இடமில்லாமலும், ஒரு பாகஸ்தர் மற்றவர்களுக்குத் தெரிவித்து

விட்டால், தெரிவித்த நேரத்திலிருந்து அவர் பிரிவினை யானவராக சட்டப்படி கருதப்படுவார். அதற்குப்பின் குடும்பத்துக்கு ஏற்படும் லாப நஷ்டத்தில் அவருக்குப் பங்கு கிடையாது.

4. பிரிவினை செய்யும் விதம்

பாக வியாஜ்ஜியத்தில் பாகஸ்தர் எல்லாரும் வாதிகளாகவோ, பிரதிவாதிகளாகவோ சேர்க்கப்பட வேண்டும். அதோடு ஜீவனாம்ஸத்துக்கு பாத்தியப்பட்ட மனைவி, தாய், பாட்டி முதலியோரையும் வழக்கில் கட்சிக்காரர்களாகச் சேர்க்க வேண்டும். சாதாரணமாக குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட எல்லா சொத்துக்களையும் பிராதில் சேர்க்க வேண்டும். பாக வழக்குத் தொடரும் வாதியின் பங்கு வியாஜ்ஜியத் தேதியில் குடும்பம் இருக்கும் நிலைமையைப் பொறுத்தது. அந்தந்த தேதிக்குப்பின் குடும்பத்தில் நடக்கும் ஜனன மரணங்களால் வாதியின் பங்குக்கு பாதகம் ஏற்படாது.

1893ஆம் வருடம் பாகச் சட்டப்படி **(The Partition Act)** ஒரு சொத்தைப் பிரிவினை செய்வதற்குப் பதில், குடும்ப நன்மையைக் கருதி, அதை விற்பனை செய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. எந்த பாகஸ்தர் உயர்ந்த விலைக்குக் கேட்கிறாரோ அவருக்கு அந்தச் சொத்தைக் கிரயம் செய்து, அவர் கட்டுகிற கிரயத் தொகையை எல்லா பாகஸ்தர்களுக்கும் ஈவுப்படி பிரித்துக் கொடுக்க கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.

7. நிருவாகப் பட்டயம்

இறந்து போனவருடைய சொத்தை நிருவாகம் செய்வது மிக அவசியமான காரியம். இறந்தவர் இறுதி மூறி (உயில்) எழுதி வைத்தோ, வைக்காமலோ, இறந்திருக்கலாம். உயில் எழுதியிருந்தால், உயிலின் விவரப்படி சொத்து வாரிசுகளுக்கு இறங்கும். உயில் எழுதவில்லையென்றால், சட்டப்படி ஏற்பட்ட வாரிசுகளுக்கு சொத்து இறங்கும். எப்படியிருந்தபோதிலும், இறந்தவருடைய சொத்தை நிருவாகம் செய்தாக வேண்டும். வாணிபமும், நாகரிகமும் வளர்ந்து ஓங்கிவரும் இக்காலத்தில், செல்வந்தர்கள் பலர் சொந்த ஊரைவிட்டு வெளிநாடுகளில் பிரயாணம் செய்யும்போது இறந்து போகிறார்கள். இந்நிலையில் அவர்களுடைய மதிப்பு யர்ந்த சொத்தையெல்லாம் யாராவது சட்டப் பொறுப்போடு ஏற்று நிருவாகம் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. மரண சாஸனத்தில் அவர்கள் தெரிவித்திருக்கும் ஆசைகளை நிறைவேற்றி வைப்பதற்கும் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவர்களுடைய சொத்துகளிலிருந்து கடன்களைக் கொடுத்துவிட்டு, மீதியுள்ள சொத்துகளை அவர்களுடைய வாரிசுகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கும் ஏதாவது ஒரு சட்டபூர்வமான கருவி வேண்டியிருக்கிறது. அவ்வாறு ஒரு கருவி இல்லையென்றால், சொத்து வலுத்தவன் கையில் சிக்கி,

---

1956இல் எழுதிய கட்டுரை.

சட்டப்படியுள்ள வாரிசுகளுக்குள் பூசல் ஏற்பட்டு, வேண்டாத வழக்குகளும் சச்சரவுகளும் விளைகின்றன. அதோடு வாரிசுகளும் எத்தனையோ பேர் இருக்கலாம்; அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒருவிதமான பங்கு இருக்கலாம்; வாரிசுகளில் சிலர் மைனர்களாயிருக்கலாம்; அல்லது தற்காத்துக் கொள்ளத் தெரியாதவர்களாயிருக்கலாம். சிலர் வெகு தொலைவில் வசித்துக் கொண்டிருக்கலாம். வேறு சிலருடைய உரிமையைப் பற்றி சந்தேகங்களும், தாவாக்களும் இருக்கலாம். இப்பேர்ப்பட்ட காரணங்களால், இறந்தவருடைய சொத்தைப் பிரித்துக் கொடுப்பதில் பல திருகு மூறுகல்கள் ஏற்படலாம். ஆகவேதான், நீதிமன்றங்கள் மூலமாக யாராவது ஒருவருக்கு சொத்து நிருவாக அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அவர் சொத்தைக் காப்பாற்றி, அதன் வரும்படியைப் புறம்போகாமல் கைப்பற்றி, உரிமையாளருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்.

இந்த நோக்கத்தோடு தான் நிருவாகப் பட்டயங்கள் நீதிமன்றங்களில் கொடுக்கப்படுகின்றன. நிருவாகப் பட்டயம் பெற்றவருக்கு இறந்தவர் சொத்தை நிருவாகம் செய்ய முழு உரிமையுண்டு. இறந்த போனவர் உயிரோடிருந்தால் என்னவிதமான உரிமைகள் அவருடைய சொத்தில் அவருக்குண்டோ, அந்த உரிமைகள் எல்லாம் பட்டயம் பெற்றவருக்கும் உண்டு. ஆனால் பட்டயம் கொடுத்த நீதிமன்றத்தின் கண்காணிப்பில் அவர் நிருவாகம் நடத்த வேண்டும். அநேகமாக, எல்லா விதத்திலும் இறந்தவருடைய பிரதிநிதியாக இருந்து சொத்தை ஆளும் உரிமை அவருக்கிருக்கிறது. பட்டயம் பெற்ற தேதி முதற்கொண்டுதான் அவருக்கு இந்த அதிகாரம் ஏற்படுகிறது. பட்டயதார் சொத்தை தர்ம கர்த்தா நிலைமையில் நிர்வாகம் செய்ய வேண்டும். சொத்தின் வரும்படியிலிருந்தோ அல்லது சொத்தை

விற்றோ இறந்து போனவருடைய கடன்களைத் தீர்க் கும் பொறுப்பு பட்டயதாருக்கு உண்டு. மீதியுள்ள சொத்தைப் பகிர்ந்து வாரிசுகள் வசம் ஒப்புவிக்க வேண் டியதும் அவருடைய கடமை.

இறந்து போனவருடைய வாரிசுகள் அவருடைய சொத்துகளில் பாத்தியதை கொண்டாடி வழக்காடுவ தற்கு முன், நிருவாகப் பட்டயம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல், அவர்களுடைய பாத்திய தையே ஒப்புக் கொள்ள நீதிமன்றங்கள் மறுத்துவிட வேண்டும் என்று இந்தியன் வாரிசு சட்டம் 190ஆம் பிரிவில் கண்டிருக்கிறது.

நிருவாகப் பட்டயம் யாருக்குக் கொடுக்க வேண் டும் என்பதைப் பற்றியும் மேற்படி சட்டத்தில் தெளிவு படுத்தியிருக்கிறது. உயில் எழுதாமல் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய விதவைக்கே நிருவாகப் பட்ட யம் பெறும் உரிமையுண்டு. விதவைக்கு நிருவாகம் செய்யும் திறமை இல்லையென்று நீதிமன்றம் கருதி னால், விதவைக்குப் பட்டயம் கொடுக்க மறுக்கலாம். மனைவியும் இறந்து போய்விட்டால், இறந்தவருடைய தாயாருக்குப் பட்டயம் கொடுக்க வேண்டும். அல்லது இறந்தவருடைய வாரிசுகளுக்குக் கூட்டுப் பட்டயம் கொடுக்கலாம். இறந்தவருக்கு உறவினரே இல்லை யென்றால் அவருடைய கடனாளிக்குப் பட்டயம் கொடுக்கப்படும்.

நிருவாகப் பட்டயம் வாங்க வேண்டிய அவசியம் எப்பொழுது என்றால், கொடி வழி (succession) உரிமை யில் சொத்து இறங்கும்போதுதான். பொதுக் குடும்பத் தில் உள்ள ஒருவர் பிரிவினைக்கு முன் இறந்து போனால், எஞ்சி நிற்கும் குடும்பத்தார் நிருவாகப் பட்ட யம் வாங்க வேண்டியதில்லை. பொதுக் குடும்பத்தில்

மூன்று அங்கத்தினர் இருப்பதாக வைத்துக் கொள் வோம். பிரிவினைக்கு முன், அவர்களுக்குரிய பங்கைக் கண்டித்து, இன்னாருக்கு இன்ன பங்கு என்று சொல்ல முடியாது. எல்லாருமாகச் சேர்ந்து சொத்தை ஆளுகிறார் கள். அதில் ஒருவர் இறந்து போனால், எஞ்சி நிற்கும் இருவருக்கும் அந்தச் சொத்து உடமையாகி விடுகிறது. இறந்தவர் மூலமாக அவர்கள் உரிமையை அடைய வில்லை. இறப்பதற்கு முன்னமேயே அவர்களுக்கு குடும்பச் சொத்தில் உரிமையிருந்தது. இறந்த பிறகு அவர்களுடைய உரிமை விரிவடைந்திருக்கிறது. இறந்த தும் அவர்களுக்குப் பிரிவினை ஏற்பட்டால், ஆளுக்குப் பாதி பங்கு சொத்தில் கிடைக்கும். முன்னமேயிருந்த உரிமை, விரிவடைந்ததேயொழிய, உரிமையில்லாமலி ருந்தவர்களுக்கு கொடி வழி பாத்தியமாக உரிமை இறங்கி விடவில்லை. இந்த முறையில் விரிவடையும் உரிமைக்கு **survivorship** அல்லது எஞ்சியவர்க்குரிய உரிமை என்று பெயர். இவ்வாறு கிடைத்த சொத்துரி மைக்கு நிருவாகப் பட்டயம் தேவையில்லை. பிறப்புரி மையில் கிடைத்த சொத்தை, நிருவாகப் பட்டயம் வாங்காமலே, நிருவாகம் செய்ய அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

8. பஞ்சாயத்து ஆட்சி முறை

(ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்)

''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்ற குடியாட்சிக் கொள்கைக்கு விளக்கம் கொடுப்பதுபோல அமைந்திருக்கிறது, 1958இல் நம் மாநிலச் சட்டசபை இயற்றிய பஞ்சாயத்து சட்டம். இந்தச் சட்டத்தின் உள்நோக்கம் என்னவென்றால், ஒரு சிலர் கையிலிருந்த ஆட்சிப் பொறுப்பை பொது மக்களுக்குப் பரவலாக விநியோகம் செய்வதுதான்.

சுய ஆட்சியில் அனுபவமும், தேர்ச்சியுமில்லாத கிராம மக்கள் புதுச் சட்டத்தினால் ஏற்படும் பொறுப்பை திறமையோடு வகிப்பார்களா என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நம் பொது மக்கள் ஆட்சிப் பொறுப்பை திறம்பட வகித்திருக்கிறார்கள் என்பதை வரலாறு நமக்கெடுத்துச் சொல்லுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்தரமேரூர் என்ற கிராமத்தில் கி.பி.907இல் எவ்வாறு பஞ்சாயத்து ஆட்சி முறை நடந்தது என்பதற்கு அங்குள்ள கல்வெட்டுகள் சான்று சொல்லிக் கொண்டு நிற்கின்றன.

சோழர் காலத்தில் மாநிலம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு மாநிலம் பல மண்டலங்களாவும், ஒரு மண்டலம் பல கோட்டங்களாகவும், ஒரு கோட்டம் பல கூறுகளாகவும் ஒரு கூறு பல நாடுகளாகவும்,

ஒரு நாடு பல வள நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு வள நாட்டில் பல தனியூர்களும் (நகரங்களும்) ஊர்களும் (கிராமங்களும்) இருந்தன. சின்னஞ்சிறு கிராமங்களை பற்றுகள், குறைப் பற்றுகள் என்று அழைத்தார்கள்.

மண்டலத்துக்குத் தலைவனாயிருப்பவனுக்கு மண்டலீகன் என்று பெயர்; பெரும்பாலும் மண்டலீகர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். புகழ்பெற்ற மண்டலீகர்களை மண்டலீஸ்வரன் என்றே கவிஞர்கள் புகழ்ந்திருக்கிறார்கள்.

நாட்டுக்குத் தலைவராயிருப்பவரை அதிகாரி யென்று பெயரிட்டார்கள். நாட்டில் நீதி நிர்வாகம் செய்வதும், வரி வசூல் செய்வதும் தலைவனுடைய பொறுப்பு.

ஆனால், தனியூர்களுடைய சொந்தக் காரியங்களில் சாதாரணமாக, தலைவனோ, மண்டலீகனோ, அரசனோ தலையிடுவதில்லை. ஊர்ப் பொதுக் காரியங்களை ஊர்க்காரர்களே கவனித்துக் கொண்டார்கள்.

ஊர் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு பல குழுக்களைப் பொது மக்களே தேர்ந்தெடுத்தார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் ஓராண்டு பொது மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். இந்தக் குழுக்களுக்கு வாரியங்கள் என்று பெயர்.

ஆட்டை வாரியம் அல்லது சம்வத்ஸர (ஆண்டு) வாரியம் என்பது வழக்கு மன்றமாகப் பணி செய்தது. ஊருக்குள் நடக்கும் வழக்குகளைத் தீர்த்து வைப்ப தோடு குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் இந்தக் குழுவுக்கு இருந்தது. கொலை செய்தவர்களைக் கழுவேற்றியும், திருடர்களையும், மோசடி செய்

தவர்களையும் சிறையிலடைத்தும், கழுதையேற்றியும், சிறு குற்றங்களைச் செய்தவர்களைத் தலையிலிட்டும், சில்லரைக் குற்றங்களுக்கு அபராதம் போட்டும் நீதி நிர்வாகம் செய்யும் உரிமை இந்தக் குழுவுக்கிருந்தது. குற்றவாளிகளைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று நினைக்காமல், குற்றவாளியின் மனோநிலை, கவனக்குறைவு, சூழ்நிலை முதலியவற்றைத் தீர விசாரித்து குற்றத்துக்கேற்ற தண்டனை கொடுக்கும் கருணையாளர்களும் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக, மானைக் குறி பார்த்து எய்த வேடனுடைய அம்பு, குறி தப்பி இடையில் வந்த ஒரு மனிதனைக் கொன்றுவிட்டது. வேடனைக் கழுவிலேற்றாமல், ஊர்க் கோயிலில் விளக்கேற்றுவதற்குச் செலவாகும் தொகையை அபராதமாக வேடன் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். கொலை செய்யும் நோக்கம் வேடனுக்கில்லாதால் அவர்களுடைய தீர்ப்பு, தற்காலச் சட்டப்படி, ஒப்புக்கொள்ளக் கூடியதே, இ.பி.கோ.304ஏ பிரிவின் படி, கவனக் குறைவாலோ, முரட்டுத்தனத்தாலோ, மரணத்தை உண்டாக்குபவர்களுக்கு, கூடிப்போனால், 2 ஆண்டுகளுக்கு மேல் கடுங்காவல் தண்டனை கொடுக்க முடியாது.

வரிப்பணத்தை கையாடல் செய்தவர்களுடைய சொத்தை விற்று பணத்தையும், அபராதத்தையும் வசூல் செய்யும் பொறுப்பும் இந்தக் குழுவினருக்கு இருந்திருக்கிறது என்று திருப்பராய்த்துறைக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.

ஊர்க்காரர்களிடமிருந்து வரி தண்டல் (வசூல்) செய்யும் (ரிவினியூ) பொறுப்பு இன்னொரு குழுவுக்கு இருந்தது. இந்தக் குழுவுக்குத் தோட்ட வாரியம் என்று பெயர். நிலத்தில் விளைந்த நெல்லின் ஒரு பகுதியை நிலவரியாக வசூல் செய்து மாநில அரசனுக்குக் கொடுக்

கும் பொறுப்பு இந்தக் குழுவுக்கு இருந்தது. வரி செலுத்தாதவர்களுடைய நிலத்தை, ஊர்ப் பொது நிலமாக்கி, அதை ஊராருக்கே விற்று, விற்று வந்த பணத்திலிருந்து இறை (அரசனுக்குரிய வரி) செலுத்தும் அதிகாரமும், பொதுத் தோட்ட வாரியத்துக்கிருந்தது.

நிலவரியைத் தவிர, மற்றவிதமான வரிகள் விதிக்கும் அதிகாரமும் இவர்களுக்கு இருந்திருக்கிறது. ஊர்க் காவல் (போலீஸ்) செலவுக்காக பாடிகாவல் என்ற வரி விதித்தார்கள்; தொழில் வரியும் **(Professional Tax)** வசூல் செய்தார்கள். தறி நெசவாளர்கள் தறியிறை என்ற வரியும், தட்டார்கள் தட்டாரப் பாட்டம் என்ற வரியும், செக்கு வைத்து ஆட்டுபவர்கள் செக்கிறையென்ற வரியும் கொடுத்து வந்தார்கள்.

வசூலித்த வரிப் பணத்தை ஒழுங்காகக் கணக்கில் பதிந்து கொள்வதற்கு **(Accountant)** சிப்பந்திகள் இருந்தார்கள். அவர்களுக்கு வரியிலார் என்று பெயர். வந்த வரி வருமானத்தை எப்படிச் செலவிடுகிறது என்று திட்டம் **(Budget)** வகுப்பதற்கு, வரிக்கூறு செய்வோர் என்ற நிபுணர்கள் இருந்தார்கள்.

முதல் ராஜராஜன் காலத்தில் (985 கி.பி.முதல்) நிலங்களை திட்டவட்டமாக அளந்து **(Survey and Settlement)** ஒவ்வொரு நிலமும் கொடுக்க வேண்டிய வரியை நிச்சயப்படுத்தியதாகவும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த வேலையில் கோட்ட வாரியக்குழு உதவி செய்திருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமிருக்கிறது.

மேலும், பொன் வாரியம் என்ற குழு வரிப்பணங்களைப் பரிசோதிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தது. சோழர்கள் காலத்தில் செப்புக் காசுகளும், வெள்ளிக் காசுகளும், பொற்காசுகளும் நாட்டில் வழங்கி வந்தன. நாணயங்களில் அரச முத்திரைகளிருந்தன. ஆனாலும்,

கள்ள நாணயங்களும் உலாடி வந்தன என்று தெரிகி றது. ஆகவே, நாணயப் பரிசோதனை செய்யும் பொறுப்பை பொன் வாரியத்தார் நிர்வகித்தார்கள்.

நீர்ப்பாசன வசதிகளை கவனிக்கும் பொருட்டு ஏரி வாரியம் என்ற குழுவைப் பொது மக்கள் தேர்ந்தெடுத் தார்கள். ஏரிகளைப் பழுது பார்ப்பதும், விளைச்சலுக்கு வேண்டிய நீரை முறைப்படி பாயச் செய்வதும் ஏரி வாரியத்தாரின் பொறுப்பு. இன்ன கண்ணாறு வழியாக நீர்ப்பாய்ச்சிக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் திட்டம் வகுத்திருந்தார்கள். பாயும் நீரை தரத்துக்கேற்ற வாறு நன்னீர், புன்னீர் என்று பிரித்திருந்தார்கள். குளத்து நீர் பாயும் நிலங்களுக்கு நிலை நீர்ப்பாட்டம் என்ற வரியும், ஆற்று நீர் பாயும் நிலங்களுக்கு ஒழுங்கு நீர்ப்பாட்டம் என்ற வரியும் விதித்து ஏரி வாரியத்தார் வசூல் செய்தார்கள்.

ஊர்க்கோயில் தோறும் பண்டாரம் (கஜானா அல் லது **Treasury**) இருந்தது. பத்திரங்களைப் பதிப்பிப்ப தற்கு ஆவணக் களரிகள் **(Registration Office)** இருந்தன. ஊரிலிருந்து செல்லும் நெடுஞ்சாலைகளை கவனிப்ப தும் குடிமக்களுடைய பொறுப்பாக இருந்திருக்கிறது.

மேற்சொன்ன விவரங்களிலிருந்து என்ன தெரிகிற தென்றால், சோழர் காலத்தில், போர் **(War)**, வெளிநாட் டுக் கொள்கை **(Foreign Policy)** இவை இரண்டையும் தவிர, மற்ற எல்லாத் துறைகளிலும் பொது மக்களுக்கு பெரு வாரியான அதிகாரமும், பொறுப்பும் இருந்திருக்கிறது.

மேற்சொன்ன பலதிறப்பட்ட வாரியங்களை (குழுக்களை) தேர்ந்தெடுக்கும் முறையும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே நம் நாட்டில் இருந்திருக்கி றது என்று உத்திரமேரூர் கல்வெட்டு சொல்லுகிறது. மேற்சொன்ன சாஸனத்தின் மூலம் கீழ்க்கண்ட விவரங் களைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

வாக்காளர் தகுதி

ஒவ்வொரு ஊரையும் 30 தொகுதிகளாகப் (''குடும் பங்களாக'') பிரித்து, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதியை அனுப்பும் அதிகாரத்தைக் கொடுத்தார்கள். ஒரு தொகுதியில் வாழும் எல்லாருக்கும் வாரியத்தில் சேவை செய்யும் உரிமை கிடையாது. 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 70 வயதுக்குக் கீழ்ப்பட்டவர் களுக்குமே இந்த உரிமை இருந்தது. ஜப்பான் நாட்டி லும், செக்கோஸ்லோவேக்கியாவிலும், நார்வேயிலும் 30 வயதுக்குக் குறைந்தவர்கள் அபேட்சகராக நிற்க முடியாது. ஆனால், ஒரு நாட்டிலும் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேர்தலில் நிற்கக் கூடாது என்று தடை விதிக்கவில்லை. 35 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞர்களுக்குப் போதிய உலகியல் அனுபவம் இல்லையென்று தடை செய்தது சரியாயிருக்கலாம். ஆனால், 70 வயதுக்கு மேற்பட்டவர்களை பொறுப் பேற்கக் கூடாது என்று தடை செய்வது எவ்வளவு பொருத்தம் என்று தெரியவில்லை. சோழர் காலத்திலே வாழ்ந்திருந்தால், இப்போது நம் நாட்டில் பெரும் பொறுப்பேற்றுத் திறமையுடன் அரசியல் நடத்தும் தலைவர்களுக்கெல்லாம் ஊர் வாரியத்திலே இடமில்லா மல் போயிருக்கும்.

வயதைப் பொறுத்த வில்லங்கத்தைத் தவிர இன் னும் பலப்பல தடைகளை விதித்தார்கள். சோழர் காலத் துப் பொதுமக்கள். குறைந்தது 7 1/2 ஏக்கர் விரிவுள்ள வரி செலுத்தும் நிலமுடையவனாகவும் அவன் இருக்க வேண்டும்; சொந்த மனையிலே கட்டப்பட்ட வீடு இருக்க வேண்டும்; அரசியல் படித்தவனாக இருக்க வேண்டும். ஒரு வேகத்தையும், நான்கு பாஷ்யங்களை

யும் நன்றாகக் கற்றவனாயிருந்தால், சுமார் 3 ஏக்கர் நிலமிருந்தாலும் அவனைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கலாம். காரியத்தில் நிபுணனாயும், ஒழுக்கமுடையவனாயும் அவன் இருக்க வேண்டும். சொத்து வில்லங்கமில்லாதவனாயும், தேர்தலுக்கு முன் மூன்றாண்டுகளுக்கு இடையில் வாரியம் செய்யாதவனாயுமிருக்க வேண்டும்.

தகுதியின்மை

முன்னம் வாரியம் செய்த காலத்தில் கணக்குக் காட்டாமல் இருந்தவர்கள் ஆயுள் பரியந்தம் அபேட்சகராக நிற்க முடியாது. அதுமாத்திரமல்ல, அவர்களுடைய சகோதரி கணவன், சிறிய தாயார், பெரிய தாயார் மக்கள், சிற்றப்பன், பெரியப்பன் மக்கள், அண்ணன் தம்பிகள், மாமன், மைத்துனன் ஆகியோருங்கூட தேர்தலுக்கு நிற்கும் உரிமையை இழந்தார்கள். மோசடி செய்தவர்கள், போலிக் கையொப்பமிட்டவர்கள், பெரு மக்கள் சபையை எதிர்த்தவர்கள், மகாபாதகம் செய்தவர்கள், பிறர் மனை நயந்தவர்கள் ஆகியோருடைய உரிமையும் இவ்வாறே பறிமுதல் செய்யப்பட்டது.

குடவோலையிடுதல்

மேற்குறிப்பிட்டவர்களைத் தவிர்த்து எஞ்சி உள்ளவர்களில் மிகத் தகுதி வாய்ந்தவர்களின் பெயர்களை ஓலைகளில் எழுதி அவற்றை கட்டுகளாகக் கட்டி ஒரு குடத்திலிட்டு மகாசபையின் முன் வைப்பார்கள். ஊரில் உள்ளவர்கள் எல்லாரும் மகாசபையில் குழுமியிருப்பார்கள். மகாசபை கூடும் அன்று ஊரில் இருக்கும் கோயில் அர்ச்சகர்கள் அனைவரும் சபையில் வந்து அமர வேண்டும்.

ஓலைகள் நிரப்பப்பட்ட குடத்தை, வயதில் மூதிர்ந்த அர்ச்சகர் ஒருவர் கூடியுள்ளவர்கள் எல்லாரும் பார்க்கும்படி தன் கையால் உயரே தூக்கிப் பிடிப்பார். பின்பு கூடியிருக்கும் கூட்டத்திலிருந்து விவரம் அறியாத சிறுவன் ஒருவனை அழைத்து, குடத்திலிருந்து ஒரு கட்டை எடுக்கச் செய்வார். அக்கட்டை மற்றொரு குடத்திலிட்டு நன்றாகக் குலுக்கி, மீண்டும் அச்சிறுவனைக் கொண்டே ஒரே ஒரு ஓலையை மட்டும் எடுக்கச் செய்வார்.

சிறுவன் எடுத்துக் கொடுத்த ஓலையை மத்தியஸ்தர், தன் அகல விரித்த கையால் வாங்கி, அதிலிருக்கும் பெயரை உரக்கப் படிப்பார். பின்பு அங்கு குழுமியிருக்கும் கோயில் அர்ச்சகர்களும் ஒவ்வொருவராக அதைப் படிப்பார்கள். இவ்வாறே மற்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பார்கள்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வாரியம் செய்யாமல் இருந்தால், அவர்களுக்கு அபராதம் விதிக்கும் உரிமை பொது மக்களுக்கு இருந்தது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் மக்கள் எவ்வளவு கண்டிப்போடும், பொறுப்போடும், திறமையோடும் பஞ்சாயத்து ஆட்சி நடத்தினார்கள் என்பதை து.அ.கோபிநாதராவ் எழுதிய சோழ வம்ச சரித்திரச் சுருக்கத்தில் காணலாம்.

ஆகவே, அந்த நீண்ட நெடு மரபிலே வந்த நம் மக்கள் பஞ்சாயத்து ஆட்சி முறையிலே தேர்ந்து பொது மக்களுடைய வாழ்க்கை செழித்தோங்கச் செய்வார்கள் என்பதில் என்ன ஐயமிருக்க முடியும்?

9. சில நிகழ்ச்சிகளைத் திரும்பிப் பார்க்கிறேன்

'ஆனந்தவிகடன்' ஆசிரியர் கேட்டிருக்கும் கீழ்க் கண்ட கேள்விகள் சுவையானவை. சிந்தனையைக் கிளறி விடுபவை. "தங்கள் வாழ்க்கையில் மனம் மாறித் திருந்தும்படியாக நிகழ்ச்சிகள் எவை? தங்கள் புத்திமதிக ளால் மற்றவர்களுடைய மனம் திருந்தியதுண்டா?"

என் 60 ஆண்டு வாழ்வைப் பின்னோக்காகப் பார்த்து, மனம் மாற்றிய நிகழ்ச்சிகளை பாதாளக் கரண்டி போட்டு துழாவி எடுத்து அவற்றை விளக்கப் புகுந்தால் நீண்ட சுய வரலாறாக முடியும். ஆகையால், சில முக்கிய நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடுகிறேன்.

என் குழந்தைப் பருவத்தில் வாரந்தோறும் பழநி யிலிருந்தும், திருச்செந்தூரிலிருந்தும் விபூதி பிரசாதம் தபாலில் வரும். தபாலை உடைத்து என் தாயார் எனக்குத் திருநீற்றை அணிவிப்பது வழக்கம். அப்படிப் பூசும்போதெல்லாம் "நீ ஊருக்கு நல்ல பிள்ளையாக வாழ வேண்டும்" என்று சொல்லி வாழ்த்துவார்கள். இந்த வாழ்த்தை அடிக்கடி கேட்டு வந்த என் குழந்தை உள்ளத்திலே, 'ஊருக்கு நல்ல பிள்ளையாக இருக்க

25-3-1973இல் 'ஆனந்தவிகடன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி.

வேண்டியது என்னுடைய கடமை' என்ற உணர்ச்சி என்னையறியாமலே வேரூன்றி வளரத் தொடங்கியது. பிற்கால வாழ்க்கையில் நான் எந்தச் செயலைச் செய்தாலும் "என் செயலைப் பற்றி ஊர்க்காரர்கள் என்ன நினைப்பார்கள்? இதை அவர்கள் கண்டிப்பார்களா? அல்லது ஏற்றுக் கொள்வார்களா?" என்று என்னையே கேட்டுக் கொள்வதுண்டு. கண்டிப்பார்கள் என்று தோன்றினால், அந்தச் செயல் என் சுயநலத்துக்கு உகந்ததாக இருந்தாலும், அதைச் செய்யாமல் விட்டு விடுவேன். சில சமயங்களில் 'ஊராரையும்' மதிக்காமல் தவறுகளும் செய்திருக்கிறேன். ஆனால், பெரும்பாலும் என் தாயாரின் வாழ்த்து என் செயல்களை உறைத்துப் பார்க்கும் உறைகல்லாக அமைந்து, பெருந்தவறுகள் செய்யாமல் என்னைப் பாதுகாத்து வந்திருக்கிறது. இளம் வயதில் உள்ளத்தில் ஒரு கருத்தை ஊன்றிவிட்டால், சரியோ, தப்போ, அது உள்ளத்தின் மீது செலுத்தும் ஆதிக்கம் பிற்காலத்தில் ஏற்படும் கருத்துகளுக்கு இருப்பதில்லை.

நாத்திகன் ஆனேன்

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னால் திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரியில் நடந்த சுயமரியாதை மகாநாட்டுக்குப் போயிருந்தேன். நமது சமயத்திலுள்ள மூடக்கருத்துக்களை நையாண்டி செய்து பல அறிஞர்கள் சுவையாகப் பேசினார்கள். அவர்களுடைய பேச்சுத் திறமையும், துணிச்சலும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. அந்தக் காலத்தில் சமயத்தைப் பற்றிப் பேசுபவர்கள் வெறும் மடிசஞ்சிகளாயிருப்பார்கள்; அவர்களுடைய பேச்சு விளக்கெண்ணெயாயிருக்கும். உயர்நிலைப் பள்

னியில் மாணவனாக இருந்த எனக்கு சுயமரியாதைத் தலைவர்களுடைய பேச்சு இருளூடு வந்த ஒளியைப் போலிருந்தது. பேச்சைக் கேட்பதற்கு முன்னால் தினந் தோறும் கோயிலுக்குப் போய் இறைவனை வணங்கி வந்தேன். பேச்சைக் கேட்டபிறகு "சாமியாவது! சாத்தானாவது! மந்திரமாவது! மண்ணாங்கட்டியாவது!" என்று சொல்லி, கடவுள் நம்பிக்கையுள்ளவர்களைப் பார்த்துப் பழிக்கத் தொடங்கினேன். இப்படியாகப் பல ஆண்டுகள் திரிகரணசுத்தியாக கடவுள் இல்லை. இல்லவே இல்லையென்று உறுதியில் நின்றேன். இந்த உறுதிக்கு உளட்டம் கொடுப்பதற்காக வால்டேர் (Voltair), இங்கர்சால் (Ingersol), பெட்ரன்ட் ரஸ்ஸெல் (Betrand Roussel) போன்ற சிறந்த நாத்திகவாதிகளுடைய நூல்களை கவனத்தோடும் ஆர்வத்தோடும் படித்து வந்தேன்.

தேள் கொட்டியது

என்னுடைய உறுதிப்பாட்டுக்கு உலை வைக்கக் கூடிய நிகழ்ச்சிகள் பின்னால் நடக்கத் தொடங்கின. பாளையங்கோட்டையில் நான் வழக்குரைஞனாக இருந்தபோது நடந்தது முதல் நிகழ்ச்சி. மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு கல்கத்தா தீர்ப்பை மேற்கோளாகச் சொல்ல வேண்டியிருந்தது. வழக்குரைஞர் நூலகத்திலிருந்து '41 கல்கத்தா' என்ற தீர்ப்புத் தொகுதியை எடுக்கப் போனேன். 431 ஆவது பக்கத்தைப் புரட்டிப் பார்க்கும் போது, புத்தகத்துக்குள்ளிருந்த ஒரு கருந்தேள் என் விரலைக் கொட்டிவிட்டது. தேள்கடி அனுபவம் எனக்கு அதற்கு முன்னும் இருந்ததில்லை. பின்னும் இருந்ததில்லை. கொஞ்ச நேரம் விரலில் கடுகடுப்பிருந்தது. சிரித்துச் சமாளிக்கப் பார்த்தேன். ஆனால், நேரம்

ஆக ஆக விஷம் ஏறிக் கொண்டே போயிற்று. வலி பொறுக்கமாட்டாமல் நீதிபதியிடம் 'வாய்தா' வாங்கிக் கொண்டு என் வீடு போய்ச் சேர்ந்தேன்.

அதற்குள்ளாக கை முழுவதும் வலி பரவி நெறிகட்டிக் கொண்டது. என் துன்பத்தைச் சகிக்க முடியாத என் அத்தை பக்கத்து வீட்டுப் பையன் ஒருவனை அவசரமாக அழைத்து வந்தார். அந்தப் பையனுடைய பெயர் மணி. அவனுக்கு வயது 10 இருக்கும். என்னைக் கண்டாலே அவன் அஞ்சுவான்; அவனைக் கண்டால் எனக்கு ஏளனம். கையிலே ஒரு வேப்பங்குலையை வைத்துக் கொண்டு வாயிலே ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டு பயமில்லாமல் அவன் என்னை அணுகி வேப்பங்குலையால் என் கையில் மூன்று முறை அடித்தான். உடனே எனக்கிருந்த வலி யெல்லாம் என்ன மாயமாகவோ மறைந்துவிட்டது. நடந்த நிகழ்ச்சியை எனக்கு நம்பவே முடியவில்லை. மணியை அரைமணி நேரம் குறுக்கு விசாரணை செய்தேன். சந்திரகிரஹண காலத்தில் நட்டாற்றில் அரையளவு தண்ணீரில் நின்றுகொண்டு லட்சக்கணக்காக ஒரு மந்திரத்தை ஜபித்ததால் தனக்கு இந்த விஷமிறக்கும் சக்தி கைவந்தது என்று அவன் சொன்னான். பகுத்தறிவுக்கு ஒவ்வாத மந்திரத்துக்கும் இவ்வளவு சக்தி இருக்குமா என்று திகைத்தேன். பெர்ட்ரண்ட் ரஸ்ஸலைலைப் படித்து உப்பிய என் பகுத்தறிவுக்கு இந்த நிகழ்ச்சி அவமானத்தையே தந்தது.

மாறினேன்

மேற்சொன்ன நிகழ்ச்சியைக் காட்டிலும் அதிர்ச்சித் தரத்தக்க பல நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில் ஒன்றன்

பின் ஒன்றாக நிகழத் தொடங்கின. பகுத்தறிவே துணை என்றிருந்த எனக்கு, பகுத்தறிவைக் காட்டிலும் உயர்ந்தது உணர்வு. பகுத்தறிவுக்கு எட்டாத பேருண்மைகளையெல்லாம் உணர்வினால் எட்டிப் பிடிக்க முடியும் என்ற உண்மை கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியத் தொடங்கியது. உணர்வைத் தீட்டித் தீட்டி உயர்ந்த ஆனந்த நிலைகளை அடையலாம், உணர்வுக்கும் பகுத்தறிவுக்கும் முரண்பாடு இல்லை என்பதை கொல்லங் கோட்டிலிருந்த கண்ணப்ப சுவாமிகள் என்ற சித்தர் எனக்கு உணர்த்தினார். பல தீக்ஷைகள் மூலம் உணர்த்தினார். அவர் சொல்லிக் கொடுத்த பயிற்சிகள் மூலம், என் மனம் மாறியது; வாழ்க்கையைப் பார்க்கும் பார்வையே மாறியது; என் வாழ்வின் அடிப்படையே மாறிவிட்டது. ஆணவச் சிறையிலிருந்து நாம் செய்யும் செயல் எல்லாம் தன்னலத்தில் வேருன்றி நிற்கிறது. அதனால் சமுதாயத்துக்கு கேடு விளைவிக்கிறது. ஆனால், ஆன்மப் பயற்சிகள் மூலம் சில விநாடிகளாவது ஒவ்வொரு நாளும் ஆணவமற்ற நிலையில் நின்று பார்க்கும்போது, நம் சிந்தனையிலும், செயலிலுமே பெரு மாறுதல் ஏற்படுகிறது. இந்த மாறுதலால் நமக்கு மாத்திரமல்ல, சமுதாயத்துக்கும் பெருநலம் ஏற்படுகிறது. யோகம் என்றால் ஒன்றித்து நிற்பது என்றுதானே பொருள்? மன ஒருமையில்லாதவர்கள் செயலில் ஈடுபடாமலிருக்கும் வரையில் மற்றவர்களுக்கு நல்லது. ஆனால், அவர்கள் செயற்படத் தொடங்கி விட்டாலோ, அதனால் விளைவது கலப்பற்ற தீமையே; கோணலான சிந்தையிலிருந்து கோணலான செயல்தானே பிறக்கும். ஆகவே, செயலில் ஈடுபடுவதற்கு முன் நம் உள்ளத்தை நாம் நீட்டி நிமிர்த்து பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தியானத்திலிருந்து பழகினால், நம் உள்மனசுக்கும் வெளிமனசுக்கும் இடையே உள்ள பூசல் நீங்கி இசைவு பிறக்கிறது; ஆணவச் சிறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபடலாம். நம்மை மறந்து நமக்கு அப்பாலிருக்கும் செம்பொருளை ஆசையோடு சிந்தித்து வணங்கினால், மன ஒருமை ஏற்படும். எல்லாரையும் எல்லாவற்றையும், ஒன்றாகக் காணும் காட்சி நமக்குக் கிட்டும். திருகலாகிய நம் சிந்தை திருந்தும். வாரி வாரி ஆனந்தத்தைப் பருகலாம் என்பதை ஒருவாறு அனுபவத்தில் உணர்கிறேன். ஆனால், அவ்வனுபவத்தின் முழு ஆழத்தையும் நான் இன்னும் கண்டு கொள்ளவில்லை. தியான நிலையிலிருந்து இறங்கியதும் பழைய குப்பைத் தொட்டிக்குள்ளேதான் வரவேண்டியிருக்கிறது. இருந்தாலும் தொட்டியிலுள்ள குப்பைக் குறைந்து கொண்டே போகிறது என்பது உறுதி.

ஒரு வழக்கு

"உங்கள் புத்திமதியால் மற்றவர்கள் வாழ்க்கை மாறியிருக்கிறதா?" நான் மாவட்ட நீதிபதியாக இருந்த போது, என் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு ஒன்று நடந்தது. மனைவி தாய் வீட்டுக்குப் போனவள் குறித்த நாளில் திரும்ப வில்லையென்று கணவனுக்குக் கோபம். கோபத்தில் மனைவியின் கற்பை சந்தேகித்து கணவன் கடிதம் எழுதினார். ஆதாரமற்ற சந்தேகத்தைத் தாங்க முடியாமல் மனைவி கொடுங்கோபம் அடைந்தாள். "இனி உங்கள் முகத்தில் விழிப்பதில்லை" என்று பதில் எழுதிவிட்டாள். இருவருக்கும் இடையேயிருந்த உறவு முறிந்துவிட்டது. ஐந்தாண்டுகள் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. கணவன் மெத்தப் படித்தவர்.

பெரிய பதவியிலிருந்தார். பலர் அவருக்குப் பெண் கொடுப்பதற்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்தார் கள். ஆனால், அவர் இரண்டாவது திருமணம் செய்வ தைத் தடுத்துக் கொண்டு நின்றது சட்டம். ஆகவே, மணப்பூட்டை உடைக்க வேண்டுமென்று கணவன் வழக்குத் தொடர்ந்தார்.

இரு தரப்பாருடைய வழக்கறிஞர்களும், மனிதாபி மானத்தை மறந்துவிட்டு, சட்டபூர்வமான வாதப் பிரதி வாதங்களைக் கிளப்பி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதை கவனித்துக் கொண்டிருந்த எனக்கு எல்லாம் கேலிக்கூத்தாகப் பட்டது. 'வழக்கை ராஜி செய்ய முயலுங்கள்' என்று வழக்கறிஞர்களிடம் சொல்லிப் பார்த்தேன். 'நிலைமை மிஞ்சிப் போய்விட்டது. ஒன் றும் செய்வதற்கில்லை' என்று சொல்லி இரண்டு வழக்க றிஞர்களும் கையை விரித்துவிட்டார்கள். கட்சிக்காரர் கள் இருவரையும் என் சேம்பருக்கு அழைத்து புத்திமதி கூறினேன். பயனில்லை. அவர்களுடைய மூன்று குழந் தைகளையும் அழைத்துவரச் சொன்னேன். தாய் அவர் களை அழைத்து வந்தாள். ஒவ்வொரு குழந்தையும் தங்க விக்ரகமாக இருந்தது. ஒன்பது வயதுப் பெண்; அவளுக்கு ஒரு தங்கை. ஏழு வயதானவள். கடைக்குட் டிப் பையனுக்கு ஐந்து வயது. பால் மணம் மாறாத குழந்தை. அவனைப் பார்த்து "உனக்கு அம்மா வேணுமா? அப்பா வேணுமா?" என்று கேட்டேன். "எனக்கு ரெண்டு பேரும் வேணும்" என்ற மழலை மொழியில் அவன் சொன்னான். அவனுடைய அன்பு நிறைந்த முகத்தையும், சூதுவாதில்லாத பரிவையும் கவனித்துக் கொண்டிருந்த பெற்றோர்கள் திடீரென்று மனம் குழைந்தார்கள். "இந்தக் குழந்தைக்காகவாவது

நீங்கள் ஒன்றாக வாழவேண்டும்'' என்று அவர்களிடம் சொன்னேன். ''சரி'' என்று இருவரும் ஆர்வத்தோடு ஒப்புக் கொண்டார்கள். இருவரையும் குழந்தைகளோடு ஒரே வண்டியில் அனுப்பி வைத்தேன்.

சில ஆண்டுகளுக்குப் பின்னால், நான்கு குழந்தைகளோடு அவர்கள் இருவரும் ஒரு திருமண வீட்டிற்கு வந்ததைப் பார்த்தேன். வெறிச்சோடிப் போயிருந்த அவர்களுடைய வாழ்க்கையிலே அன்பும், இன்பமும் மறுபடியும் களிநடம் புரிவதைக் கண்டேன். அற்பமானதுபோல அன்று நமக்குத் தோன்றும் நிகழ்ச்சி, காலச் சக்கரத்தின் சுழற்சியிலே வாழ்க்கையின் அடிப்படையையே மாற்றி வைத்த நிகழ்ச்சியாக இன்று காட்சி கொடுக்கிறது.

10. நீதிமன்றங்களில் தமிழ்

கேள்வி: *''நீதிமன்றங்களிலே தமிழ்'' என்ற கொள்கை நடை முறையில் செயல்படுவது இடர்ப்பாடுகள் நிறைந் தது என்று சிலர் கூறுகிறார்களே? அக்கூற்றுப் பற் றித் தங்களது கருத்து என்ன?*

பதில்: தமிழ் மொழியின் நீள அகல ஆழங்களைத் தெரியாதவர்களும், ஆங்கிலத்திற்குப் பதில் தமிழே தீர்ப்பு மொழியாகிவிட்டால் தமிழில் தம்மால் வாதாடவோ தீர்ப்பு எழுதவோ முடி யாது என்று அஞ்சுகிறவர்களும், இப்படி யெல்லாம் ஐயப்படுவது இயல்புதானே! நான் எட்டாண்டுகளாக வழக்கறிஞனாகவும் மூப்பத் திரண்டு ஆண்டுகளாக நீதிபதியாகவும் இருந்த வன். என் இனத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் பாலோர் எப்போதும் மாறுதல்களை ஏற்பதற் குத் தயங்கத்தான் செய்வார்கள். ஆனால், மாறுதலின் இன்றியமையாமையைச் சமுதாய மும், அரசும் உணர்ந்து, மாறுதலைச் செயற் பாட்டுக்குக் கொண்டு வந்த பிறகு, என் இனத்

டாக்டர் ஜஸ்டிஸ் எஸ்.மகராஜன் அவர்கள் (State Official Language (Legislative) Commission தமிழ் மாநில (சட்டத்துறை) ஆட்சி மொழி ஆணையத்தின் தலைவராக இருந்தபோது 16-2-1978இல் 'தமிழரசு' பத்திரிகைக்கு அளித்த சிறப்புப் பேட்டி - தொகுப்பாசிரியர்.

தவர்கள் ஆர்வத்தோடு மாறுதலை ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள். சிலர் இருப்பதாகச் சொல்லுகிற இடர்ப்பாடுகள் ஒவ்வொன்றுமே ஆதாரமற்றது என்று நான் கருதுகிறேன். முதன் முதலாவதாக அவர்கள் சொல்லுகிற காரணம் என்னவென்றால் சட்டம், நீதி ஆகிய வற்றைப் பற்றிய கருத்துக்கள் எல்லாமே தமிழர்களுக்குப் புதியன என்பதே.

நீதியால் வந்த நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்த சிறு நெறியறியான் என் தம்பி

என்று கும்பகர்ணன் வாயிலாகத் தமிழ் நீதியின் சீலத்தையும், தொன்மையையும் சொல்லுகிறார் கம்பர். வள்ளுவருடைய குறளிலும் அடிப்படையான நீதிக் கருத்துக்களும் சட்டக் கருத்துக்களும் நிறைந்திருப்பதைப் பார்க்கலாம். நீதியை நிலை நிறுத்துவதற்காக உயிரையே தியாகம் செய்த தமிழ் முன்னோர்களுடைய வரலாறுகள் பல இருக்கின்றன. அதோடு, ஆங்கிலம் நுழைவதற்கு முன்னால் தமிழ்நாட்டில் பல நீதிப் பேராயங்கள் இருந்தன என்பதையும், அப்பேராயங்கள் நாட்டு வளமையையொட்டித் தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன என்பதையும் வரலாற்று வாயிலாக அறிகிறோம். மேலும், முதல் ஆட்சேபணை ஆதாரமற்றது.

இரண்டாவதாக, அவர்கள் சொல்வது என்னவென்றால், ''மேல் நாட்டிலிருந்து இரவல் வாங்கிய சட்டத்தை சென்ற இருநூறு ஆண்டுக

ளாக ஆங்கில மொழியிலேயே இயற்றப்பட்ட சட்டத்தை - நாம் பயன்படுத்தி வந்திருக்கி றோம். ஆகவே, மேல்நாட்டுக்கே உரிய அந் தச் சட்டக் கருத்துக்களைத் தமிழ் மொழியி னால் சொல்ல இயலாது'' என்பதாகும். இந்த வாதமும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று. பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தமிழல்லாத பிற மொழிகளே நிர்வாக மொழிகளாகவும், தீர்ப்பு மொழிகளாகவும் வழங்கி வந்திருக்கின் றன. பாலி மொழி, உருது மொழி, டச்சு மொழி, பிரெஞ்சு மொழி, மராட்டிய மொழி, தெலுங்கு மொழி, கடைசியாக ஆங்கில மொழி ஆகியவை சட்ட மொழிகளாக இருந்து வந்தி ருக்கின்றன. ஆகவேதான் சட்டக் கருத்துக ளைத் தமிழ் மொழியில் எடுத்துச் சொல்வதற் கும் வாதாடுவதற்கும் தீர்ப்புகள் வழங்குவதற் கும் நமக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட் டது.

கி.பி.1731க்கு முன்னால் இங்கிலாந்து நாட்டிலே லத்தீனும், பிரெஞ்சுமே நீதிமன்ற மொழிகளாக இருந்தன. அதுவரையிலும் ஆங் கிலம் பக்குவம் இல்லாத ஒரு மொழி என்றும், ஏதோ வேலைக்காரர்களோடு பேசுவதற்கு மட் டுமேயுரிய ஈனத்தனமான மொழி என்றும் ஆங்கிலேயர்களே ஆங்கிலத்தைக் கருதி வந் தார்கள். ஆனால், 1731இல் ஆங்கிலேயர்கள் விழித்துக் கொண்டார்கள். நாம் எல்லாம் இப் போது விழித்துக் கொண்டாற்போல! 1731க்கு முன் பலர் ஆங்கிலத்தைச் சட்ட மொழியாக்க

முயன்றும் தோல்வியடைந்தனர். கடைசியாக ஆங்கில நாட்டின் நாடாளுமன்றம் 1731இல் ஒரு சட்டத்தை இயற்றியது. அந்தச் சட்டத்தில் சில அதிசயமான தண்டனை வகைமுறைகளை **(Penal Provisions)** நாம் காண்கிறோம். அந்தச் சட்டம் அமலுக்கு வந்த தேதியிலிருந்து ஆங்கில நீதிமன்றங்கள் எல்லாவற்றிலும் ஆங்கில மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்றும், வாதுரைகளிலோ **(Pleadings)** வாதப் பிரதிவாதங்களிலோ **(Arguements)** தப்பித் தவறி லத்தீன் அல்லது பிரெஞ்சுச் சொல்லை யாராவது பயன்படுத்தினால், அவ்வாறு பயன் படுத்தப்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் 50 பவுன் அபராதம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அந்தச் சட்டத்தில் விதித்திருந்தது.

இந்தச் சட்டம் மசோதாவாக இருக்கும் போது ஆங்கில நீதிபதிகளும், வழக்கறிஞர்க ளும் இதைத் தீவிரமாக எதிர்த்தார்கள். ஆனால், மசோதா சட்டமாகி அமலுக்கு வந்த பிறகு, ஆங்கில வழக்கறிஞர்களும், நீதிபதிக ளும் மிகுந்த கட்டுப்பாட்டு உணர்ச்சியுடைய வர்களாகையால், அந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்ப டிந்து அதை முழுமனதோடு செயல்படுத்துவ தில் பங்கு கொண்டார்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, இருநூறு ஆண்டுகளுக்குள் ஆங்கிலம் எந்தவிதமான நுண்ணிய சட்டக் கருத்தையும் சொல்லவல்லது என்ற அளவுக் குப் பெயர் வாங்கிவிட்டது. அதோடு, அனைத்துலக அந்தஸ்துள்ள பிரெஞ்சு

மொழிக்கு இருந்த இடத்தை ஆங்கிலம் இப் போது கைப்பற்றிக் கொண்டு விட்டது. 1731இல் இங்கிலாந்தும், ஆங்கிலமும் இருந்த நிலையில் 1978இல் தமிழ்நாடும் தமிழும் இருக் கின்றன. ஆனால், ஒன்றை மட்டும் நாம் மறந் துவிடக் கூடாது. 1731இல் ஆங்கில மொழிக்கு இல்லாத ஒரு வளமும் வனப்பும் நுணுக்கமும் தெளிவும் 1978இல் தமிழுக்கு இருக்கின்றன.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நுண்ணிய, ஆழ்ந்த, நொய்தின் நொய்ய உணர்ச்சிகளையெல்லாம் தமிழ் ஞானிகளும், அறிஞர்களும், கவிஞர்களும் தமிழ் மொழியின் வாயிலாகச் சொல்லிச் சொல் லித் தமிழுக்கு ஓர் அரிய வளத்தை நல்கியிருக் கிறார்கள். அதோடு, வின்ஸ்லோ போன்ற ஆங்கிலப் பேரறிஞர்கள் தமிழ் மொழியை ஆராய்ச்சி செய்துவிட்டு, ஐரோப்பிய மொழிக ளிலெல்லாம் சிறந்த கிரேக்க மொழியைவிடத் தமிழுக்கு அதிகத் துல்லியமும் மெருகும் உள் ளன என்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, 1731இல் ஆங்கிலத்துக்கும், ஆங்கிலேயருக்கும் இருந்த தன்னம்பிக்கை யையும் தகுதியையும் காட்டிலும் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்று நமது முதலமைச் சர் முழங்கும் 1978இல் தமிழுக்கும் தமிழருக் கும் அதிகமான தன்னம்பிக்கையும் தகுதியும் இருக்கின்றன என்பதில் யாதொரு ஐயப்பாட் டுக்கும் இடமில்லை.

கேள்வி: *சட்ட மொழி பெயர்ப்புகளினால் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பயன் ஏதேனும் உண்டா?*

பதில்: சட்டக் கருத்துக்களைத் தமிழ் மொழி சொல்லிச் சொல்லிப் பழகிவிட்டது என்றால் தமிழரு டைய சிந்தனையிலேயே ஒரு புது நுணுக்கம் ஏற்படும்; தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய ஆற்றல் ஏற்படும். உதாரணமாக, இங்கிலாந் திலே சட்டத்தைப் பற்றிய ஆங்கில இலக்கி யத்தை மிக நன்றாக வளர்த்துவிட்டார்கள். ஆகவே, இலக்கிய ஆசிரியர்களும், கவிஞர்க ளும் தங்கள் கற்பனைக்கு ஊட்டம் கொடுப்ப தற்காகச் சட்டத் துறையிலிருந்து உவமானங் களை - சிமிலிஸ் - கடன் வாங்குகிறார்கள். உதாரணமாக, 'செஷன்ஸ்' என்ற சொல் அச் சத்தையும், மதிப்பையும் உண்டாக்குகிற சொல்; அதைப் போலவே சம்மன்ஸ், என்பது தவிர்க்க மடியாத பயங்கர கோர்ட்டுக் கட்ட ளையைக் குறிக்கிற சொல். இவ்விரண்டு சொற் களை வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் ஓர் அரிய பாவத்தை உண்டாக்குகிறார்.

"When to the sessions of Sweet silent thought I summon up remembrance of things past"

என்று ஷேக்ஸ்பியர் சொல்லுகிறார். "இனிய மௌனமாக கருத்துகள் மனமாகிய செஷன்ஸ் மன்றத்திலே அமர்ந்திருக்கையில், பழைய நிகழ்ச்சிக்கு அழைப்பாணை **(Summons)** அனுப்பி அவற்றை இழுத்துக் கொண்டு வந்து, என் மன மன்றத்திலே நான் நிறுத்தும்போது"

என்று ஷேக்ஸ்பியர் பாடல் ஒன்று தொடங்குகிறது. இவ்வாறாக ஆங்கிலக் கவிக்கும் இலக்கியத்துக்கும ஆங்கிலச் சட்டச் சொற்கள் ஊட்டம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கின்றன. ஆனால், சென்ற பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழி இருக்க வேண்டிய அரியாசனத்திலே பல வேற்று மொழிகள் இருந்து வந்த காரணத்தால் சட்டத் தமிழ் வளராமல் இருந்துவிட்டது. அதன் விளைவாக, சட்டத் தமிழின் வளமும் நுணுக்கமும் தமிழ் இலக்கிய ஊட்டத்துக்குக் கிடைக்காமல் போய்விட்டன. சட்டத் தமிழ் வளர்ந்தால் இலக்கியத் தமிழும் கட்டாயம் வளரும்.

கேள்வி: *''தமிழில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. சிலேடைகளும் அதிகமாக இருக்கின்றன. உதாரணமாக, ''நானூறு ரூபாய் கொடுத்தேன்'' என்று சொன்னால் ''நான் 100 ரூபாய் கொடுத்தேன்'' என்றும், ''400 ரூபாய் கொடுத்தேன்'' என்றும் நேரடியான அர்த்தம் ஏற்படுகிறது. ஆகவே, சட்டத்துக்குத் தேவையான குழப்பமின்மையும் தெளிவும் தமிழ் மொழிக்கு இல்லை'' என்று ஒரு சில தமிழறிஞர்கள் சொல்லுகிறார்களே, அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?*

பதில்: தமிழில் இருப்பதைப் போலவே ஒரு பொருள் உள்ள பல சொற்களும் பல பொருள்கள் உள்ள ஒற்றைச் சொற்களும் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளிலும் இருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. உதாண

மாக, 'Dispose' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இதன் பொருள் இடத்துக்குத் தக்க வாறு மாறுபடுகிறது. "Proper disposal of Cases" என்ற சொற்றொடரை "உரிய முறையில் வழக் குகளைத் தீர்மானித்தல்" என்றும், 'Being at the disposal of the Government' என்ற சொற்றொடரை 'அரசின் ஏவலில் இருத்தல்' என்றும் மொழி பெயர்க்க வேண்டியிருக்கிறது. உண்மையில் இந்தச் சொல்லுக்கு எட்டு இடங்களில் எட்டு விதமாகப் பொருள் கொள்ள வேண்டியிருக்கி றது. தமிழில் உள்ள 'சும்மா' என்ற சொல் லைப் போலவே, சந்தர்ப்பத்திற்குத் தக்கவா றெல்லாம் பல்வேறு பொருள்கள் கொடுக்கக் கூடிய சொற்கள் ஆங்கிலத்திலும், பிரெஞ்சி லும் மலிந்து கிடக்கின்றன. வெப்ஸ்டரின் மூன் றாவது புதிய அனைத்துலக அகராதி (Webster's Third New International Dictionary)யில் 'House' என்ற சொல்லுக்கு 43 வெவ்வேறு அர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் தமிழில் உள்ளதைப் போலவே பல சிலேடைகள் இருக்கின்றன. உதாரணமாக "I saw a man-go in the street" என்றால் "தெருவில் ஒரு மாங்காயைப் பார்த்தேன்" என்றும், "தெ ருவில் ஒரு மனிதன் போவதைப் பார்த்தேன்" என்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ள லாம். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிலேடை விளையாட்டுக்கள் பலவற்றைப் பார்த்து அனு பவிக்கலாம். 'lie' என்ற ஆங்கிலச் சொல்லுக் குப் 'பொய்ச் சொல்' என்றும் 'படுத்துக்

கொள்' என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. அதனால், சட்ட நுணுக்கத்தைச் சொல்வதற்கு ஆங்கிலம் அருகதையற்ற மொழி என்று கூற முடியுமா? உண்மையில் நல்ல பக்குவம டைந்த மொழிகளில்தான் யமகம், திரிபு, சிலேடை முதலிய சிலம்பு விளையாட்டுகள் விளையாடலாம். சொல்லுக்குப் பஞ்சமாக இருக்கிறபோதுதான் இந்த விளையாட்டுக்கு மொழி இடம் கொடுக்காது. நாம் முன்பே சொன்னபடி வின்ஸ்லோ போன்ற மேல்நாட்டு அறிஞர்களே ஐரோப்பிய மொழிகளிலெல் லாம் உயர்ந்த மொழியாகிய கிரேக்க மொழி யைக் காட்டிலும் தமிழுக்குத் துல்லியமும், வளமும் அதிகம் இருக்கின்றன என்று சொன்ன பிறகு சட்டமும், ஆங்கிலமும் தெரி யாத ஒரு சில தமிழறிஞர்களுக்குத் தமிழின் வல்லபங்களைப் பற்றி என் ஐயப்பாடு ஏற்ப டுகிறதோ?

கேள்வி: *தமிழகத்திலுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் எல்லா நீதி நடவடிக்கைகளிலும் தமிழை உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்ற னவா?*

பதில்: தமிழக அரசு உயர் நீதிமன்றங்களுக்குக் கீழ மைந்து உள்ள எல்லாக் குற்ற வழக்கு நீதிமன் றங்களிலும் தமிழே தீர்ப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஆணைப் பிறப்பித்தது. அந்த ஆணையின்படி கொலை வழக்குகளி லும்கூட செஷன்ஸ் நீதிபதிகள் தமிழிலேயே

தீர்ப்புகளை எழுதி வருகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தத் தமிழ்த் தீர்ப்புகளைப் பார்க்கும்போது அவை அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தில் எழுதும் தீர்ப்புகளைக் காட்டிலும் தரத்தால் மிகவும் உயர்ந்து இருப்பதை நம்மால் கணகூடாகப் பார்க்க முடிகிறது. சட்டக் கல்லூரிகளிலும் சட்டத்தைத் தமிழிலேயே கற்பிக்கத் தொடங்கிவிட்டார்கள். 17-1-78இல் ராஜ்கோட்டில் நடந்த பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களுடைய கோரிக்கையின் பேரில் இந்தியாவிலுள்ள துணை வேந்தர்கள் எல்லாரும் இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் அந்தந்த வட்டார மொழியிலேயே, சட்டம் மாத்திரமல்ல. விஞ்ஞானம் உள்பட எல்லாப் பாடங்களையும், கற்பிப்பதற்குச் சம்மதித்து இருப்பதோடு, இந்தியப் பிரதமரின் அறைகூவலை ஏற்று, ஐந்து ஆண்டுகளில் இந்த மொழிக் கொள்கையைச் செயல் முறையில் செய்து முடித்துவிடுவதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

ஆகவே, 1983க்கு மேல், தமிழ்நாட்டிலுள்ள வாதுரைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் தமிழிலேயே எடுத்துச் சொல்லும் திறமை படைத்தவர்களாக இருப்பார்கள். ஆனால், ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களையும், தீர்ப்புகளையும் புரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்குக் குறைந்துவிடும் என்பது

படுத்தப்பட்டிருந்தது. ''மோகு சட்சு'' என்று சொல் அது. ''உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து வருகிறோம். பதில் சொல் வதற்குத் தாமதமாகும் என்ற பொருளிலே ''மோகு சட்சு'' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், வாஷிங்டனில் கிடைத்த தகவலில் ''உங்கள் இறுதி எச்சரிக் கையை நிராகரிக்கிறோம்'' என்று அந்த சொல் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. மொழி பெயர்ப்பாளர் செய்த அந்தப் பிழையானது, அமெரிக்க அரசு அணுகுண்டைப் போடும் தீர்மானத்திற்குத் தூண்டுகோலாக அமைந்து விட்டது. இலக்கியத்தை மொழி பெயர்க்கும் போது தவறு இழைத்தாலும் கூட அவ்வளவு நஷ்டங்கள் ஏற்படாது. சட்டத்தை மொழி பெயர்க்கும்போது தவறு இழைத்தால், அத னால் ஈடு செய்ய முடியாத நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்த எங்கள் ஆணையத்தில் இருக்கும் மொழி பெயர்ப்பா ளர்களும், ஆணையத்தின் உறுப்பினர்களும் எங்களால் இயன்ற விழிப்பு உணர்ச்சியோ டும், எச்சரிக்கையோடும் சட்டங்களை மொழி பெயர்த்து வருகிறோம்.

பிரெஞ்சு மொழி பெயர்ப்பாளரும் புலவ ருமான ஏதியேன் தோலே (Etienne Dolet 1509 - 1546) என்பவர் பிளேட்டோவின் (Plato) நூல் களை மொழி பெயர்த்தார். அவருடைய

மொழி பெயர்ப்பு சரியாக இல்லையென்றும், பிளேட்டோவின் கருத்துகளுக்கு அவர் துரோகம் இழைத்துவிட்டார் என்றும் பிரெஞ்சு மக்கள் அவர்மீது குற்றம் சாட்டி, அவருடைய குரல் வளையைத் திருகி, அவரைக் கொன்ற தோடு, அவருடைய எழுத்துகளையெல்லாம் தீக்கிரையாக்கினார்கள். இந்த நிகழ்ச்சி மொழி பெயர்ப்பாளர் எல்லாருக்கும் ஓர் எச்சரிக்கை யாய் அமைகிறது. ஒரு மொழியில் உள்ள கவிதையைக் கவனமின்றி இன்னொரு மொழி யில் மொழி பெயர்க்கும்போது, மூலமொழி யின் ஆன்மா ஆவியாகப் பறந்துபோய் விடுகி றது; மிஞ்சுவது எல்லாம் மூல மொழியின் உயிரற்ற சடலம்தான். ஆனால், சட்டத்தைப் போன்ற அறிவியல் சம்பந்தமான உரைக ளைப் பெரு முயற்சி செய்தால் பிழையில்லா மல் மொழி பெயர்க்க முடியும். இரு மொழிக ளின் பண்பு எல்லாம் தெரிந்த புலவர்கள், சட்டத்தின் நுணுக்கம் எல்லாம் தெரிந்த நிபுணர் களோடு கூடிக் கலந்தாலோசித்துக் கூட்டுத் தவம் செய்தால் அது கைக்கூடும் என்று அனு பவத்தில் நாங்கள் கண்டு கொண்டோம்.

சொல்லை மாத்திரம் எடுத்துக் கொண் டால், அதற்கு நான்கு குணங்கள் இருப்பதைப் பார்க்கலாம். அவையாவன: சொல்லின் பொருள், கண்ணுக்குத் தெரியும் அதன் வரி

வடிவம், செவிக்குக் கேட்கும் அதன் ஒலி வடிவம், உணர்ச்சியைத் தூண்டும் அதன் ஆற்றல். ஒரு சொல்லை மூல மொழி (Source Language) யாகிய ஆங்கிலத்திலிருந்து இலக்கு மொழி (Target Language) யாகிய தமிழில் மொழி பெயர்க்கும்போது தமிழ் மொழிக்கு உரிய தனித்தன்மை குலையாமல் மொழி பெயர்க்க வேண்டும். பொருளுக்கு மாத்திரம், அதற்குக் கிட்டத்தட்ட நிகரான பதத்தை இலக்கு மொழியிலிருந்து பொறுக்கி எடுக்கலாம். ஆனால், அந்தப் பதத்தின் ஒலி, மூலப் பதத்தின் ஒலியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கக் கூடும். அந்த ஒலி தூண்டிவிடும் உணர்ச்சிகளும் வேறுவிதமாகவே இருக்கக் கூடும்.

ஆகவே, மூல வாசகத்திலுள்ள வைப்பு முறைகளையும், வாக்கியச் சொல் அமைப்பு முறைகளையும் முற்றிலும் மாற்றி, உரிய ஒலி வடிவத்தையும் வரி வடிவத்தையும், பொருளையும் பயன்படுத்தினால் அன்றி, மொழி பெயர்ப்பு மூலக்கருத்தை உண்மையோடு பிரதிபலிக்காது. எந்த அளவுக்குச் சொற்களுக்கு மூறுக்கேற்ற வேண்டும். அல்லது மூறுக்கை எந்த அளவுக்குத் தளர்த்திவிட வேண்டும்; கருத்துப் பாசனத்தை எங்கெங்கே தேக்கி வைக்க வேண்டும்; எங்கே மடை திறந்து பாயச் செய்ய வேண்டும்; ஒரு நெடிலை,

அல்லது ஒரு குறிலை எங்கு செருகினால் வாக்கியத்தின் பொருள் மாறும் என்பதெல் லாம் கற்றுத் தெரியக் கூடிய கலையன்று; கல்லாத கலையாகும். மொழி பெயர்ப்பாள ருக்கு உள்ளுணர்வு இருக்குமானால், இந்தக் கல்லாத கலை கைவரும்; வெறும் புலமையி னால் கிட்டுவதன்று இது.

எந்த நல்ல மொழி பெயர்ப்பும் அது எழுதப்படுகிற காலத்திலும், நாட்டிலும், பேசப்படுகிற மொழியில் இருக்க வேண்டும் என்பது மொழி பெயர்ப்பு நிபுணர்கள் எல்லா ராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. பெரும்பாலும் இந்தக் கொள்கையை அடிப்ப டையாகக் கொண்டே இந்த ஆணையம் சட் டங்களைத் தமிழாக்கம் செய்து வருகிறது.

கேள்வி: *ஆங்கிலச் சட்டத்தில் பல கலைச் சொற்கள் (Technical Terms) இருக்குமே, அவற்றை மொழி பெயர்க்கும் போது நீங்கள் புதுத் தமிழ்ச் சொற்களை உருவாக்கி யிருக்கிறீர்களா?*

பதில்: ஆங்கிலச் சொற்களுக்கு நேரான புதிய தமிழ்ச் சொற்களை உண்டு பண்ணுவதற்கு முன் இரண்டு விஷயங்களை நாங்கள் கவனிக்கி றோம். முதலாவதாக, பழைய தமிழ்ச் சொற் கள் பல ஆள்வாரற்றுத் தூர்ந்து போய்விட் டன. அவ்வாறு தூர்ந்துபோன சொற்களுக்குப்

புத்துயிர் கொடுத்து, நமக்கு இருக்கும் சொற் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது அவசியமாகத் தோன்றுகிறது. உதாரணமாக பிங்கல நிகண்டில் ''சொல்லுதல்'' என்ற குறுந்தலைப்பில் 22 சொற்கள் கொண்ட ஒரு பட்டியல் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலை ஆராய்ந்துப் பார்க்கும்போது, சொல்லும் முறையை 22 வகைகளாகப் பிரித்து ஒவ்வொரு வகைக்கும் ஒரு தனிச் சொல்லை உண்டு பண்ணி, ஒரு வகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையேயுள்ள மயிரிழை போன்ற வேறுபாட்டையும் சொல் வேறுபாட்டிலே காட்டி, கருத்து நொய்மையையும் சொல் நொய்மையையும் தமிழர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதோ ஒரு சூத்திரம்:

''இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல்
பகர்தல், பன்னல், நவிறல், கத்துதல்,
உரைத்தல், கூறல், வழங்கல், சுயிலல்,
புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல்,
பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல்,
சொற்றல், ஆடல், சொல்லுதல் என்ப''
(பிங்கல நிகண்டு 2009ஆம் சூத்திரம்)

மேற்சொன்ன சூத்திரத்தில் கண்டவை போன்ற ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் துருப்பிடித்துப் போய், பொருள் கெட்டும், இழிந்தும், பயனற்றுப் போய்விட்டன. நாங்

கள் புதுச் சொற்களை உண்டாக்குவதற்கு முன் நமது கஜானாவில் பயன்படுத்தப்படாமல் வறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைப் பயன்படுத்த முயன்றிருக்கிறோம். உதாரணமாக **assertion** என்பதை "அறைதல்" என்றும் **Declaration** என்பதை "விளம்பல்" என்றும், **pronouncement of Judgement** என்பதை "தீர்ப்புப் பகருதல்" என்றும் மொழி பெயர்த்து, தூர்ந்துபோன தமிழ்ச் சொற்களைத் துலக்கி, விளக்கமுறச் செய்திருக்கிறோம். மேற் சொன்ன பொருள்களிலே, நீதிபதிகளும், வழக் குரைஞர்களும் மேற்சொன்ன சொற்களைப் பயன்படுத்துவார்களேயானால், இடைக்கா லத்தில் திமிரி அலைந்த சொற்களை அடக்கி, மூக்கணாங்கயிறு போட்டு நடை பழகி, சொகு சாகக் கருத்துச் சவாரி செய்ய, அவற்றைப் பயன்படுத்திய பெருமை அவர்களுக்குக் கிடைக்கும்.

இரண்டாவதாக, பழைய சொற்களும் கிடைக்கவில்லையென்றால், சாமானிய மக்க ளிடையே உரிய சொற்கள் ஆட்சியில் இருக் கின்றனவா என்பதைத் தீர விசாரிக்கிறோம். உதாரணமாக, **'Cable of Wooden anchor'** என்ற சொற்றொடரை எங்கள் ஆணையம் மொழிபெ யர்க்க வேண்டியிருந்தது. ஆங்கில தமிழ் அக ராதிகள், அந்தச் சொற்றொடருக்கு 'மரநங்கூரக்

கயிறு' என்று பொருள் கொடுத்திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் கடலில் கப்பற் பயணம் செய்தும், முத்துக் குளித்தும், கடலோடு ஊடாடிக் கொண்டும் இருக்கும் தமிழன், இதற்குத் தனிப் பெயர் இடாமலா இருந்திருப்பான் என்று ஐயம் ஏற்பட்டதன் பேரில், ஆணையத்தி லுள்ள மொழி பெயர்ப்பாளர் ஒருவரைச் சென் னைக் கடற்கரையில் இருக்கும் மீனவர் குப்பத் திற்கு அனுப்பி, ஆராய்ச்சி செய்தோம். நங்கூ ரத்தைப் பிணைக்கும் கயிற்றைச் ''சீனிக் கயிறு'' என்று அவர்கள் செல்லப் பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று தெரிந்து அந்தப் பெய ரையே இவ்வாணையம் மொழி பெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளது.

இதைப்போலவே மதுவிலக்குச் சட் டத்தை மொழி பெயர்க்கும்போது, மதுவிலக் குத் துறை அதிகாரிகளின் உதவியாலும், வனச் சட்டத்துறை மொழி பெயர்க்கும்போது வனத் துறையில் அலுவலர்களின் உதவியாலும் அந் தந்தத் துறையில் தமிழ் மக்களால் பயன்படுத் தப்படுகின்ற பரிபாஷையையும், பச்சைத் தமிழ்ச் சொற்களையும் தேடிக் கண்டுபிடித்து, அவற்றையே எங்கள் ஆணையம் மொழி பெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறது. **'Ferme-nted wash'** என்பதை சாமானியத் தமிழர்கள்

''ஊறல்'' என்றும் ''கலக்கல்'' என்றும் கூறுகி றார்கள். தமிழ் மக்களுடைய நாவில் நடமாடிக் கொண்டிருக்கும் சொற்களுக்கு உள்ள ஆற் றல், புதிதாக உண்டாக்கப்படும் சொற்களுக் குக் கிடையாது என்ற உண்மையை உணர்ந்தே இவ்வாணையம் ஆட்சியில் இருக் கும் சொற்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மிகுந்த நேரத்தையும் கவனத்தையும் செலவ ழித்திருக்கிறது.

வேறு போக்கு இல்லை என்ற நிலையில் தான் இந்த ஆணையம் புதிய சொற்களை ஆக்கத் துணிந்திருக்கிறது. அவ்வாறு சொல் லாக்கம் செய்யும் போதும், தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையி லும், தமிழ் மரபை ஒட்டியுமே புதுச் சொற் களை உண்டாக்கியிருக்கிறோம்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்
அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இன்றியமையாத சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று திருவள்ளுவர் நமக்கு எச்ச ரிக்கை செய்துவிட்டார். அந்த எச்சரிக்கையின் படி, சொல்லாக்கம் செய்ய முயன்று வருகி றோம். அவ்வாறு புதிதாகச் சொல்லாக்கம் செய்ததற்கு உதாரணங்கள் சில **'Precedent'**

என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை. **'Quotation'** என்பதை 'மேற்கோள்' என்றும், **'Interpretation'** என்பதை 'பொருள்கோள்' என்றும் ''குறிக்கோள்'' என்றும் சொல்லும் மரபையொட்டி முன்கொள்ளப்பட்டது என்ற கருத்தை ''முற்கோள்'' என்ற புதிய சொல்லை உண்டாக்கித் தமிழ்ப்படுத்தியிருக்கிறோம். இது புதிய சொல்லாக இருந்தாலும் இதன் ஒலியும், உருவமும் வெகு காலம் புழங்கி வந்த தமிழ்ச் சொல்லின் ஒலியையும், உருவத்தையும் போன்று இருப்பதால் பல தமிழறிஞர்களும் சட்ட வல்லுநர்களும் மகிழ்ச்சியோடு இந்தச் சொல்லை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

"Having retrospective effect" என்ற சொற்றொடரை, ''முன்னுற இயங்கும் தன்மையதான'' என்றும், **"Probabilities and improbabilities of the case'** என்ற சொற்றொடரை ''இந்த வழக்கின் நிகழுறு கூறுகளும் நிகழுறாக் கூறுகளும்' என்றும் பழைய சொற்களைப் புதிய கலவை செய்து, மொழி பெயர்த்திருக்கிறோம்.

'Admirality Jrisdiction' 'Maritime Jurisdiction' என்ற சொற்றொடர்களை முறையே 'கடலியல் அதிகார வரம்பு', 'நெய்தலியல் அதிகார வரம்பு' என்று மொழி பெயர்த்திருக்கிறோம். இதிலிருந்து தமிழின் தொன்மையான இலக்கிய

மரபை மதித்தே மொழி பெயர்ப்பு செய்யப் பட்டிருக்கிறது என்பதும் புலப்படும்.

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாகச் சில ஆங்கிலச் சொற்களும உருதுச் சொற்க ளும் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த காரணத்தால், தமிழர்களுக்கு அச்சொற் கள் தனிப்பட்ட கருத்துகளைக் குறிக்கும் அடையாளங்களாக அமைந்துவிட்டன. உதார ணமாக "செஷன்ஸ், உயில், ஆஜர், ஜாமீன், ஜப்தி முதலிய சொற்கள் தமிழோடு தமிழாகச் சம பந்தி போஜனம் செய்ய ஆரம்பித்துவிட் டன. இப்பேர்ப்பட்ட சொற்களை ஒதுக்கி விட்டு, அவற்றுக்குத் தூய தமிழ்ச் சொற்களை உண்டாக்குவது எளிது. ஆனால், அவ்வாறு செய்திருந்தால் சட்டத்தோடு பழகி வருகிற தமிழர்கள் உள்ளத்தில் குழப்பம் ஏற்படும் என்று கருதி, அத்திசைச் சொற்களையே இம் மொழி பெயர்ப்புகளில் பயன்படுத்தி இருக்கி றோம்.

கேள்வி: *உங்கள் ஆணையம் 1.5.76இல் இருந்து கிட்டத் தட்ட ஒன்றே முக்கால் ஆண்டுகளாக இயங்கி வருகி றதே, இதுவரையில் நீங்கள் எத்தனை சட்டங்களை மொழி பெயர்த்திருக்கிறீர்கள்?*

பதில்: இந்த ஆணையம் நிறுவப்பட்ட மூன்றே மாதங்களுக்குள் குற்ற வழக்கு நீதிமன்றங்கள் தமிழில் தீர்ப்புகள் எழுதுவதற்கு ஆதாரமாக உள்ள மூன்று அடிப்படைச் சட்டங்களை குற்ற விசாரணை முறைச் சட்டம் (Criminal Procedure Code) இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidence Act) இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code) நாங்கள் மொழி பெயர்த்ததோடு அல்லாமல் அரசு அச்சகத்தின் மூலம் அவற்றை அச்சடித்து, வெளியிடவும் நமது அரசுக்கு உதவியிருக்கிறோம். இதுவரையில் 54 மத்திய, மாநிலச் சட்டங்களையும் மொழிப் பெயர்த்திருக்கிறோம்; நமது ஜனநாயகத்தின் ஆதார சுருதியாக இருக்கும் இந்திய அரசமைப்பையும் (Constitution of India) மொழி பெயர்த்து முடித்திருக்கிறோம். மொத்தத்தில், சுமார் 2,500 அச்சுப் பக்கங்கள் கொண்ட ஆங்கிலச் சட்டங்களை மொழி பெயர்த்து முடித்திருக்கிறோம். அதோடு, 4,620 சொற்களும் சொற்றொடர்களும் கொண்ட சட்டச் சொல் அகராதி (Legal Glossary) ஒன்றையும் தயாரித்து முடித்திருக்கிறோம். வெகு விரைவில் அது வெளியிடப்படும்.

கேள்வி: *ஆணையத்தால் தமிழாக்கப்பட்டு வெளியிடப்பட்ட சட்டங்கள் சாமானியத் தமிழர்களுக்கு விளங்கக் கூடியனவாய் இருக்கின்றனவா?*

பதில்: இயன்ற வரையில் எளிமையான பழகு தமிழில் சாமானியர்களுக்கு விளங்கக் கூடியவையாக இருக்கின்றன. நமது சட்டமன்ற மேலவைத் தலைவர் (பொறுப்பு) மாண்புமிகு ம.பொ.சிவஞானம் அவர்களும், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.அழகிரிசாமி அவர்களும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மொழி பெயர்ப்புகளின் தரத்தை, சிறப்பாக ஆங்கிலச் சட்ட வரைவு வல்லுநர்களின் கைவண்ணத்திற்கு எல்லாம் எடுத்துக்காட்டாகத் தலைசிறந்து மிளிர்கிற இந்தியச் சாட்சிச் சட்டத்தின் மொழி பெயர்ப்பைப் பாராட்டியுள்ளார்கள்.

கேள்வி: *இந்தப் பணி எந்த முறையில் நடைபெறுகிறது?*

பதில்: மொழிபெயர்ப்புகள் தனித்தனி நபர்களால் செய்யப்படுவதில்லை. சட்ட வல்லுநர்களும் தமிழ் வல்லுநர்களுமம இரு மொழி வல்லுநர்களும் உள்ள தனித்தனிக் குழுக்களாக, ஏழு குழுக்கள் **(Cells)** அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குழுவும் ஒரு சட்டத்தைக் கூட்டு முயற்சியாக மொழிபெயர்க்கிறது. அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆணையத்தின் தலைவரும், உறுப்பினர்களும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழு

சொல்லுக்குச் சொல் நுணுகி ஆராய்ந்து, இறுதி யான தமிழாக்கத்தைச் செய்து முடிக்கிறது.

கேள்வி: *இந்த மொழி பெயர்ப்புப் பணி எப்பொழுது முடிவுறும்?*

பதில்: 1.5.76இல் மொழிபெயர்க்கப்பட வேண்டிய சட்டங்களின் அச்சுப் பக்கங்கள் 25,000 ஆக இருந்தன. ஓராண்டுக்கு 2,000 அச்சுப் பக்கங் களை மொழி பெயர்த்தாலும் கூட 25,000 பக்கங்களை மொழிபெயர்ப்பதற்கு 12 ஆண் டுகள் ஆகும். இந்த 12 ஆண்டுகளில் நாடாளு மன்றமும் மாநிலச் சட்டசபைகளும் எத்தனை எத்தனையோ சட்டங்களை இயற்றக் கூடும். சென்றகால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது நாடாளுமன்றமே ஓர் ஆண்டுக்கு 800 அச்சுப் பக்கங்கள் கொண்ட சட்டங்களை இயற்றி வருகிறது. அப்படியானால் அடுத்த 12 ஆண்டுகளில் மேலும் 9,600 அச்சுப் பக்கங்களையும் மொழி பெயர்க்க வேண்டியிருக்கும். ஆகவே, சட்டங்களை மொழி பெயர்த்து முடிவுறும் காலத்தை வரையறுத்துச் சொல்ல இயலாது. நமது தமிழகச் சட்டசபை தமிழிலேயே சட்டங் களை இயற்றும் காலத்தை விரைவில் எதிர் பார்க்கலாம் என்று நமது தமிழக முதல்வர்

அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த நிலை ஏற்பட்ட பிறகு மாநிலச் சட்டங்களைப் பொறுத்த மட்டில் மொழி பெயர்க்க வேண்டிய வேலையே இருக்காது.

கேள்வி: *சட்ட மொழி பெயர்ப்பு இயக்கம் எப்போது தொடங்கப் பெற்றது?*

பதில்: 1957 நவம்பர் 19இல் டாக்டர் ரா.பி.சேதுப் பிள்ளை, திரு.பெ.நா. அப்புஸ்வாமி, திரு. வல்லை பாலசுப்பிரமணியம் ஆகியோர்களைக் கொண்ட ஒரு குழு, சட்டக் கல்லூரிப் பேராசிரியராக இருந்த ஏ.பழனிச்சாமி அவர்களை செயலாளராகக் கொண்டு திரு. ஜஸ்டிஸ் எம்.அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் தமிழக அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு 'ஏ' முதல் 'என்' வரையில் ஒரு சட்டச் சொல் அகராதியைத் தயாரித்தது. பின்னர் 16.12.65இல் திரு. ஜஸ்டிஸ் எம்.அனந்தநாராயணன் அவர்களுடைய தலைமையில் தற்போது மாவட்ட நீதிபதியாக உள்ள திரு. பக்கிரிசங்கரைச் செயலாளராகக் கொண்ட சட்டத்துறை ஆட்சி மொழி ஆணையம் நிறுவப்பட்டது. அதில் திரு.வி. கார்த்திகேயன், டாக்டர் மு.வரதராசனார், திரு. கா.அப்பாத்துரை முதலியோர் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

அந்த ஆணையம் சில மாறுதல்களோடு 27.4.76 வரை இயங்கியது. 7.12.68இல் அந்த ஆணையம் திரு. எம். சண்முக சுப்பிரமணியம் அவர்களை செயலுறுப்பினராகக் கொண்டிருந்தபோது 'ஏ' முதல் 'இஸட்' வரையில் உள்ள ஒரு சட்டச் சொல் அகராதியைத் தயார் செய்து வெளியிட்டது. 1.5.76 முதல் தற்போதுள்ள ஆணையம் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு.ஜஸ்டிஸ் எஸ்.மகராஜனைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

ஒரு புனிதப் பணியைச் செய்கிறோம் என்ற உணர்வோடு இந்த ஆணையத்திலுள்ள உறுப்பினர்களும், நிர்வாகிகளும், மொழி பெயர்ப்பாளர்களும் ஒருங்கிணைந்து மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள். தமிழன்னைக்கு நாம் செலுத்தும் சிறு காணிக்கை என்ற எண்ணம்தான் இப்பணியில் ஈடுபடும்பொழுது மேலோங்கி நிற்கிறது.